ஞானசம்பந்தம்

மலர் 13] ஜய ஐப்பசீ 10—11—54 [இதழ் 12

திருச்செந்தூர்

திருச்சீரலைவாய்க்கோயில்

ஆசிரியர் வித்துவான், சோமசுந்தரத் தம்பிரான்
துணை ஆசிரியர் மூத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தருமபுர ஆதீன

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-ஆவது மகாசந்நிதானமாக எழுந்தருளியுள்ள

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

அவர்களின்

ஜன்மநட்சத்திரத் திருநாளன்று

திருக்கடையூரில், சொற்பொழிவாற்றியபோது வாழ்த்திய

நாண்மங்கலம்

வாழி தருமைநகர் வாழியதன் முன்தோன்றல்
வாழி திருமா மடாலயந்தான் - வாழி
பெருமான் குருசுப் பிரமணியப் பேரோன்
திருமா மரபு சிறந்து.

வாழி திரு நந்தி மரபு தருமபுரம்
வாழி சொக்கர் பாதம் வழிபடுவோர் - வாழியரோ
பேரார் குரு சுப் பிரமணிய தேசிகனுர்
சீரார் அடியார் திகழ்ந்து.

உன்னுங் கயிலைவிடுத் திவ்வுலகுள் ளோர்வாழ
மன்னுந் தருமை வரும் வண்பதியாம் - துன்னும்
பெருங் கருணைச் சுப்ரமண்யப் பேர்கொண்ட தெய்வத்
திருவுருவம் வாழி திகழ்ந்து.

—பண்டித. அ. கந்தசாமிப்பிள்ளை.

25—10—54.

779.

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 13] ஜயஸ ஐப்பசிமீ 10—11—54 [இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஐப்பசி மாதம்

தொல்காப்பியர் போன்ற பெரியோர்கள் காலத்தைப் பெரும்பொழுது சிறுபொழுது என இரண்டாகப் பிரித்தனர் ஓராண்டிற்குக் கார்காலம் முதலாக முதுவேனிற் காலம் ஈறாகப் பெரும்பொழுது ஆறு என்றும், ஒரு நாளிற்கு மாலை முதலாக எற்பாடு ஈறாகச் சிறுபொழுது ஆறு என்றும் வகுத்தனர். ஐப்பசி - கார்த்திகை என்ற இருமாதங்களும் குளிர்காலத்தைச் சேர்ந்தன. இக்காலத்தில் புறச்சூழல் தட்பமெய்தும். உடலகம் வெப்பமெய்தும். வெம்மை நீங்கத் தண்ணீரில் புலர்காலை மூழ்குதல் நலம். இக்கருத்தை உடற்கூற்று நூலாரும் ஒப்புக்கொள்வர் நமது பெரியோர்கள் இதனைச் சமயக்கொள்கைகளில் ஒன்றாக அமைத்து உடல்நலத்தைப் பாதுகாத்து வருகின்றனர்.

ஐப்பசி மாதம் துலாமாதம் என்று அழைக்கப்பெறும். இம்மாத நீராட்டத்தைத் துலாமுழுக்கென்று வழங்குகின்றனர். இத்துலாமுழுக்குத் தமிழகத்தில் பொதுவாகவும், காவிரியைச் சார்ந்த பகுதியில் சிறப்பாகவும் தமிழ் மக்கள் கொண்டாடுகின்றனர். ஐப்பசி மாதத்தொடக்கத்தில் தலைக்காவிரியில் நீராடி, மாத இறுதிநாளில் திருமயிலாடுதுறையெனும் மாயூரத்தில் துலாமுழுக்கிற்கென அமைத்திருக்கும் துலாக்கட்டத்தில் நீராடி மகிழ்கின்றனர் எல்லாத் தீர்த்தங்களும் அன்று துலாக்கட்டத்திற்கு வருவதாக ஐதீகம். இந்நிறைவு நாளைக் கடைமுழுக்குவிழா என அழைப்பர்.

'மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர் வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே' என்ருர் தாயுமானுர். தீர்த்தச் சிறப்பை நாடும் மக்கட்கு மூர்த்தியும் தலமும் வாய்த்துவிடுகிறது. மாயூரம் தலச் சிறப்பு மூர்த்திச்சிறப்போடு கீர்த்தியும் பெற்றிலங்குவது. மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொடங்கிய உயிர்கட்கு ஓர் வார்த்தை சொல்லச் சற்குருவாய்த் தென்முகப் பரமன் வள்ளலார்கோயிலில் 'வண்மை' வழங்குகிருர். மேலும் காவிரியின் இருமருங்கும் தருமை, துறைசை ஆதீனத்து இருபெருங்குருமூர்த்திகளும் அருள்வார்த்தை சொல்லுங்காட்சி ஆனந்தமளிக்கும்.

மேலும் சைவசித்தாந்த ஞானசாத்திரத்தை அளித்த தலைவர் ஸ்ரீ மெய்கண்டார், தோத்திரவாயிலாகச் சாத்திரத்தைத் திருமந்திரமாக வடித்துக் கொடுத்த திருமூலர், திருஞானசப்பந்தரால் சமணம் விடுத்துச் சைவந் தழுவிய கூன்பாண்டியன் என்ற நெடுமாற நாயனுர் முதலான பேரருளாளர்கள். திருவடிப்பேறெய்திய சிறந்த மாதம்.

தருமையாதீனத்து இருபத்தைந்தாவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவதரித்த பெருமையையும் இம்மாதம் பெற்

றிலங்குகிறது. இவ்வளவு சிறப்புடைய மாதம் வியத்தகு மாதமே. "ஐவியப்பாகும்" என்றார் தொல்காப்பியர். அதனை உட்கொண்டுதான்போலும் இம்மாதமும் 'ஐ' என்ற வியப்பெழுத்தைத் தன்பெயரின் முதலெழுத்தாக அமைத்து விளங்குகிறது.

முருகப்பெருமான் சூரனைத்தடிந்து நம்மனோருக்கு அருள் புரிந்த நிகழ்ச்சியை விளக்கும் கந்தசஷ்டி விழாவினைப்பெற்று விளங்குகிறது. நமது உடன் பிறந்தோர்களாகிய பிரஞ்சு இந்தியர்கள் விடுதலை எய்திய சிறப்புடைமையால் எந்த ஐப்பசியையும்விட இந்த ஐப்பசி சிறப்புடையது. சூரன் ஆட்சியினின்றும் தேவர்கள் விடுதலை எய்திய சஷ்டி தினத்தன்று பிரஞ்சிந்தியர்கள் விடுதலை எய்தியதால் கந்தசஷ்டியையும் இம்மாதத்தையும் போற்றக் கடமைப்பட்டவர்கள்.

வாழ்க ஐப்பசி! வளர்க நீராட்டம்!!

வழங்குக அருள்மழை !!!

பெரியபுராண விரிவுரைத் தொடக்கம்

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருச்சி மலைக் கோட்டை மௌனமடம் சார்பில் ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் 7—11—54 ஞாயிற்றுக் கிழமை தொடங்கி ஒவ்வொரு ஆங்கிலமாதம் முதலாவது மூன்றாவது ஞாயிறுகளில் சொற்பொழிவுகள் நடைபெற்று வருகின்றன.

782

தருமபுர ஆதீனம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
செய்தருளிய

திருச்செந்தூர்த் தலயாத்திரை

ஸ்கந்தவிரதம்:

இது முருகப்பெருமான் திருவருளைக் குறித்து மேற்கொள்ளப்படும். முசுகுந்த சக்ரவர்த்தி அநுஷ்டித்தது. இவ்விரதக்ரமம் அவனுக்கு வசிஷ்ட முனிவரால் அறிவிக்கப் பெற்றது. இதை வெள்ளிவிரதம் என்று கிழமைச்சிறப் புணர்த்த வழங்குவதும் உண்டு. வசிஷ்டன்கூற்று. பகீரதன் கோரன் என்னும் நிருதனால் அரசு முதலியவற்றைப் பறித்துக் கொள்ளப்பட்டான். காட்டிற் சென்று பார்க்கவனிடத்தில் குறையிரந்தான். 'இவ்வெள்ளி விரதத்தை மூன்று ஆண்டு நோற்றால் அல்லல் தீர்வாய். பகைவனும் ஒழிவான். நீயே உலகெலாம் ஆள்வாய்' என்றான். அப்புகரவன் என்னும் ஆசான் அதுகேட்டு அவ்வாறேஅப்பகீரதன் ஞாயிறுமுதலாக வெள்ளிமுடிய உள்ள ஆறுநாளும் உணவு துறந்து முன் இரண்டுநாளிலும் பகலுணவுமட்டுங் கொண்டு தூக்கமும் போக்கி மூன்றாண்டு விரதங்காத்தான். காப்பது விரதம். விரதம் நம்மால் காக்கப்பெற்றால், நாமும் அதனால் காக்கப் பெறுவோம். அவ்விரண்டும் அடங்கியதே காப்பதுவிரதம் என்பது. அவ்விரதப்பயனாக அப்பகீரதன் முருகப்பிரானது ஞானவேலால் பகையொழியவும் தன் ஆட்சி தனக்கு மீட்சி எய்தவும் பெற்று விளங்கினான். பிரமபுத்திரரான நாரத முனிவர் முருகப்பிரானது விரதாநுஷ்டத்தின் பயனாக, சப்த ரிஷிகளுள் ஒருவரானார்.

அநுஷ்டிக்க வேண்டிய முறை:

தூயஆடை உடுத்து, புண்ணிய நன்னீராடி, தூயவெள் ளாடைகள் சுற்றி, நியமம் முடித்து, புலன்நெறி நீத்து, அருள்

783

வழிநின்று குருபாதம் சிரமிசைக்கொண்டு, முருகப்பெருமான் திருவடிகளை மறவாது வழிபட்டு, அவன் திருப்புகழையே ஓதியும் கேட்டும் உணர்ந்து, வேண்டின், தர்ப்பசயனம்கொண்டு அன்றிரவெல்லாம் உறக்கமும்புணர்ச்சியும் இன்றி மறுநாள் காலை சந்தியாநியமம் முதலியவற்றையும் விரைவில்செய்து முடித்து, முருகவேள் இருகழலையும் உருகிப்போற்றிப் பாரணம் செய்தல் வேண்டும்.

"பாரணம் விதியிற் செய்தோன் பகற்பொழுது உறங்கும் ஆயின்
... ...
... ... கடும்பழி எய்தும் என்று
நாரதன் மாயம் வல்லோன் இமைத்திலன் நயனம்வல்லோன்.'

இக்கந்தவேள் விரதத்தால் திரிசங்கு ஆனவனும் உளன். மனுமுதலாக உள்ள வேந்தனுடன் முழுதுலகும் ஆளும் ஆட்சிபெறுதற்கு இவ்விரதாநுஷ்டானமே காரணம். முன்னர் வேந்தனும் வேடனும் முறையே கந்தவேள் விரதம்காத்து அந்திமான் சந்திமான் என்னும் பெயரொடு இவ்வுலகாண்ட வரலாறுமுண்டு.

விரத நாட்கள்:

முருகப்பிரான் திருவருட்பேற்றுக்கு, துலாமாதம் சுக்கில பக்ஷம் பிரதமை முதலாக, சஷ்டி முடிவாகிய ஆறுநாளும் சூரசம்ஹாரம் புரிந்தகாரணத்தால் அதிகமகிமைஉடையவை. அவ் வாறுநாளும் விதிப்படி விரதம்இருப்பது சகலபாக்கியங் களையும் தரும்.

இவ்வளவும் வசிஷ்டன் கூறக்கேட்ட முசுகுந்த வேந்தன் அவ்விதமே நோற்றான். அதன்பயனாக முருகவேள் காட்சி அருளினார், வரங்கொடுத்தார். வீரவாகுதேவர் முதலி யோரைத் துணைவராகப்பெற்று, அரசு வீற்றிருந்தான் முசுகுந்த மன்னன். இதன் விரிவு கந்தபுராணத்துள் காண்க.

இந்த கந்தசஷ்டித் திருநாளைக் குற்றாலக்குறவஞ்சி என்ற நூலில் திரிகூடராசப்பக் கவிராயர் அழகாகக்கூறுகிறார்.

ஆறுநாள் அலைந்த வேட்டையில் ஒரு கொக்கு அகப்பட்ட தாம். அகப்பட்ட அந்தக் கொக்கை எல்லோரும் உண்ணு மாறு சட்டியில் சாறுவைத்தனராம். இந்தக் கொக்குச்சாற்றை வேதப்பிராமணர் சைவர் முனிவர் எல்லோரும் கொண்டார் களாம்.

இதில் கொக்கு என்பதற்கு மாமரம் என்பது பொருள். மாமரமாக இருந்த சூரபதுமனைச் சஷ்டித் திருநாளில் அழித்த வரலாற்றைக் குறிப்பிப்பது. சாறு - விழா, இவ்விழா எல்லோ ராலும் மேற்கொள்ளப் பெற்றது என்பது பொருள்.

மீறுமிலஞ்சிக் குறத்தியைக் கொண்டசெவ்
வேட்குறவன் முதல்வேட்டைக்குப் போனநா
ளாறுநாட்கூடி யொருகொக்குப் பட்ட
தகப்பட்ட கொக்கை யவித்தொருசட்டியிற்
சாருகவைத்தபின் வேதப் பிராமணர்
தாமுங்கொண்டார் சைவர் தாமுங் கொண்டார்தவப்
பேருமுனிவரு மேற்றுக்கொண்டாரிதைப்
பிக்குச் சொல்லாமலே கொக்குப் படுக்கவே.

—குற்றாலக்குறவஞ்சி.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆண்டுதோறும் ஸ்கந்தசஷ்டி நாட்களில் இவ்விரதத்தை அநுஷ்டித்துத் தல யாத்திரைசெய்து வழிபடுவது வழக்கம். 27—10—54 புதன் கிழமை அதிகாலையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமானை வழிபட்டுக்கொண்டு தல யாத்திரைக்கு எழுந்தருளினார்கள்.

புள்ளிருக்குவேளூர்:- இன்று காலை ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமியைத் தரிசித்துத் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

சுவாமிமலை:- திருவேரகம் ஆறுபடை வீடுகளில் ஒன்று. முருகன் ஞானத்திருக்கோலத்தோடு எழுந்தருளியிருக்கும் தலம் இது. மாலையில் திருவேரகம் சுவாமிமலை ஸ்ரீ சுவாமி நாதசுவாமியைத் தரிசித்துத் தருமபுரம் மீண்டருளினார்கள்.

785

வேளூர் முருகன் தாளூர் சித்தம்:- 28-10-54 வியாழக் கிழமை காலையில் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மௌன விரதநாள். இன்று புள்ளிருக்குவேளூர் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமியைத் தரிசிக்க எழுந்தருளினார்கள். விசேஷ அபிஷேக ஆராதனைகளும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரருக்குப் பரிவட்டம் சார்த்தித் தரிசித்து மெய்மறந்து நின்ற காட்சி அன்பர்களுக்குப் பக்தியை விளைவிப்பதாக இருந்தது. அன்று மீண்டும் தருமைக்கு நடுப்பகல் ஒரு மணிக்கு மீண்டருளி னார்கள்.

திருச்சிராப்பள்ளி:- 29—10—54 வெள்ளிக்கிழமை விடியற்காலம் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டுத் திருச்செந்தூர் செல்லும் திருநோக்கத் தோடு எழுந்தருளி, காலை 10 மணிக்கெல்லாம் திருச்சிராப் பள்ளி மலைக்கோட்டை மௌனமடத்துக்கு எழுந்தருளினார் கள். ஸ்ரீ தாயுமானவரைத் தரிசித்து மீண்டும் மௌனமடத் துக்கு எழுந்தருளி, திருநெல்வேலி சிந்துபூந்துறை மடத்துக்கு மாலை 3 மணி அளவில் எழுந்தருளினார்கள்.

திருநெல்வேலி:

ஆற்று வெள்ளத்தால் அழிவுபடாது, நெல்லையப்பருக்கு நிவேதனம் செய்யும் பொருட்டுப் போற்றி வைக்கப்பெற்ற நெற்களஞ்சியத்தை வேலிகட்டிக் காத்த காரணத்தால் நெல்வேலி என்று பெயர் பெற்றது. தண் பொருநை (தாமிர வர்ணி) ஆற்றின் கரையில் இருப்பது. ஸ்ரீ நடராஜப் பெருமா னுக்குரிய ஐந்து சபைகளுள் தாமிரசபை என்னும் செப்பறை (செம்பு - அறை) இங்கு இருக்கின்றது. நெல்லையப்பர் சந்நிதிக்கு எதிரில் உள்ள மண்டபத்தில் தென்கிழக்கு மூலையில் ஏழிசை ஒலி எழும் கருங்கல் தூண்கள் உள்ளன. சிறு குச்சியால் ஒலிப்பித்தும் கேட்கலாம். காந்திமதி அம்மையின் திருவருளுருவம் அழகுநிரம்பியதாக விளங்கு கிறது. ஆற்றின் நடுவேஉள்ள குறுக்குத்துறை முருகன் கோயில் மிக்க சிறப்புடையது. "கந்தமார்தருபொழில்

மந்திகள் பாய்தர மதுத்திவலை சிந்துபூந்துறை கமழ் திருநெல் வேலியுறை செல்வர்தாமே" என்று சிந்துபூந்துறை என் பதற்குத் திருஞானசம்பந்தர் தேவாரம் பெயர்க்காரணம் கூறுகிறது.

தருமைக்குருமூர்த்திகள் பதினன்காவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கந்தப்பதேசிக சுவாமிகள் ஆட்சிபுரியுங்காலத்து ஒருபோது தக்ஷிணயாத்திரைசென்றவர்கள் திருநெல்வேலியில் எழுந்தருளியிருந்தார்கள். அப்போது மழையில்லாமையால் குடிமக்கள் வருந்தினுர்கள். சர்க்கார் அதிகாரிகளோ வரிக்குக் குடிகளை வருத்தினுர்கள். குடிமக்கள் கலெக்டரிடஞ் சென்று "மழையின்மையால் விளைச்சலில்லை. வரி செலுத்துவது எவ்வாறு" என முறையிட்டனர். துரையவர்கள் "என்னிடஞ் சொல்லி என்ன? உங்கள் பாதிரியா (ஆசாரிய) ரிடத்தில் தெரிவித்தால் அவர் மழை பெய்யச் செய்யமாட்டாரா?" என்று பரிகாசமாக உரைத்தார். குடிமக்களுக்கு மழை யில்லா வருத்தம் ஒருபுறமிருந்தாலும், துரை கூறிய ஆசாரிய நிந்தை பொறுக்க முடியவில்லை. ஆதலால் நடந்தவற்றை எல்லாம் ஞானமூர்த்தியிடம் தெரிவித்துக் கொண்டனர். செவிமடுத்த ஞானமூர்த்திகள் புன்முறுவல் பூத்தனர். சொக்க நாதப் பெருமானைப் பூசித்துத் தியானசமாதியில் எழுந்தருளி யிருந்தனர். ஒரு திருப்பாடலைப் பாடினர். அப்பாடல்,

> சைவ சமயஞ் சமயமெனி லச்சமயத்
> தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனி—லைவரைவென்
> ருனந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில்
> வானங்காள் பெய்க மழை.

என்பது. இப்பாடல் திருவாயினின்றும் வெளிவந்ததும் மேகங் கள் ஒன்றுகூடின. கறுத்தன; மழைபெய்தன. அம் மழையி னுல் ஏரி, குளம், கிணறு, ஆறு முதலிய எல்லாவற்றினும் நீர் நிறைந்தது. உயிர்கள்யாவும் மகிழ்ச்சிவயப்பட்டன. பரிகசித்த துரை ஞானசாரியப் பெருமானது அருட்பெருமை யையறிந்தார். தான் பரிகசித்தமைக்கு வருந்திச் சொக்கநாத சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடத்தும்படி 100 வராகன்பொன்னைக்காணிக்கையாகவைத்து வணங்கினுர்.

சிந்துபூந்துறை மடம்:

தருமையாதீனத்துக்குச் சொந்தமான இடம் இம்மடம். ஆறுவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலயாத்திரைசெய்து இத்தலத்தில் இம்மடத்தில் தங்கி சிதம்பரம் குகைமடம் ஆத்மானந்தவாதி ஞானப்பிரகாசரிடம்பாடம்கேட்ட புலவர்ஒருவர் மன அமைதி பெறுமல் முத்திநிச்சய மறுப்புரை எழுதியும் அமைதியின்றி இருந்தனர். அவர்தம் புண்ணியப்பயனுக எழுந்தருளிய நம் ஆதீன குருமூர்த்திகளைக் கண்டபொழுதே களிகூர்ந்து அமைதி பெற்று அடியவராகி ஆசிக்குரியரானுர். தமிழாகர முனிவர் என்று தீட்சாநாமம் சூட்டப்பெற்றுர். ஆறுவது மகாசந்நி தானமாக எழுந்தருளியிருந்த இத் திருஞானசம்பந்த பரமா சாரிய சுவாமிகளின் குருமூர்த்தம் இங்குள்ளது. நான்காவது குரு மூர்த்திகளிடம் சந்நியாசம் பெற்ற ஸ்ரீ வெள்ளியம்பல வாணர் இருந்து பலருக்கும் போதநாசிரியராக எழுந்தருளி விளங்கிய இடம் இது. இன்றும் இது தமிழும் சைவமும் வளர்த்துவரும் இடமாக இருந்துவருகிறது.

திருச்செந்தூர்: இங்கிருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 30—10—54 சனிக்கிழமை திருச்செந்தூர் செந்திற் குமரன் சேவடி பணிய எழுந்தருளி அதிகாலை 4 மணிக்குத் திருச்செந்தூரை யடைந்தார்கள். 5 மணிக்கு நாழிக்கிணறு என்னும் ஸ்கந்தபுஷ்கரணியில் தீர்த்தமாடினுர்கள். நித்த நியமங்களை முடித்தார்கள். வீரவாகு தேவர் வரம் வேண்டிக் கொண்டபடி முருகப்பெருமான் காட்டிய தெரிசனம் விசுவ ரூப தரிசனம் அதிகாலையில் தினந்தோறும் ஐந்துமணிக்கு நடைபெறும். விஸ்வரூப தரிசனத்துக்கு விரைந்து சென்று திருக்கோயிலை அடைந்து செந்திலாண்டவனைப் புனைந்து பணிந்து பக்தி பரவசமானுர்கள்.

ஜபமாலைதந்த சற்குருநாதர்: "உடல்பொருள் ஆவி எல்லாம் இறைவனுடையது" என்ற எண்ணம் எல்லோ ருக்கும் செயலில் எளிதில் வருவதில்லை. ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் இறைவன் சந்நிதியில் உலகச்சூழலையே

மறந்து வழிபடுவது வழக்கம் என்பதைப் பலரும் அறிவர். "உன்னைச் சிங்காரித்து உனதழகைப் பாராமல் என்னைச் சிங்காரித்து இருப்பேனோ" என்று அருளிய ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளிய திருவாக்கு உண்மையானது என்று மெய்ப்பிக்கும் செயல் ஒன்று சிறிதுநேரத்தில் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் அழகுக்கு அணிசெய்யும் முருகன் அக்கமாலையின்றி அருள்வழங்கும் கோலத்தைக் கண்டு ஓர் அக்கமணி மாலையைக் கந்தனுக்கு அணிவித்துக் களித்தார்கள்.

தலபுராணம் :- இத்தலத்திற்குத் தலபுராணம் தனியே உள்ளது. நூலாசிரியர் வென்றிமாலைக் கவிராயர். 300 ஆண்டுகளுக்கு முற்பட்டவர். செந்தில் இரண்டாயிரம் என்ற திரிசுதந்திரர் குலத்திலே அவதரித்தவர். திருமடைப் பள்ளியில் செந்திலாண்டவனுக்கு நிவேதனம் தயாரிக்கும் பணியை மேற்கொண்டிருந்தார். வேலையில் காலதாமதமான படியால் தலத்தோர் இவரைத் தண்டிக்க, பொறுக்கமுடியாத இவர் சமுத்திரத்தில் வீழ்ந்து உயிர்துறக்க எண்ணி வீழ்ந்தார். திருவண்ணாமலையில் கோபுரத்துச்சியிலிருந்து வீழ்ந்த அருண கிரியாரைக் காத்த அறுமுகப் பெருமான் கடலில் வீழ்ந்த கவிராயரைக் கைதூக்கிக் கரையேற்றி அன்பனே இனிய தமிழில் இத்தலத்தைப்பற்றிப் புராணம் செய்க' என்று கட்டளையிட்டருளினார் கருணை கைவரப்பெற்ற கவிராயர் கண்ணீர்ப் பெருக்கில் கை கூப்பிநின்று முருகன் கருணையை எண்ணி இன்புற்றார். இவரைப்பற்றி இழிவாக எண்ணிய பலர் இவரையும் இவரது புராணத்தையும் கடலில் வீசி எறிந்து தானும் விழ முருகன் மீண்டும் தடுத்தாட்கொண்டார். எறியப்பெற்ற ஏடுகள் இலங்கைக்குச் சென்று போற்றப் பெற்றன. பின்னர் விஷயமறிந்து எல்லோராலும் இந்நூல் மிகவும் போற்றப்பெற்றது.

சோழ அரசன் ஒருவன் காவிரித்துறையில் நீராடினான். கழுத்திலிருந்த முத்தாரத்தைக் காவிரி கவர்ந்தது. கலங்கினான்

காவலன். காணமற்போன முத்துமாலைக்காக அல்ல பெருமானின் கழுத்தில் அணிவித்து அழகுபார்க்க இருந்த மாலை பறிபோயிற்றே என்பதற்காக. மறுநாள் காவிரி தீர்த்தமெடுத்து வந்த தீர்த்தக் குடத்தில் முத்துமாலை கோயிலுக்கே வந்துவிட்டது. அபிஷேகம் ஆரம்பமாகிறது. அரசனும் மனக் கவலையோடு சந்நிதியில் நிற்கிறன். முத்துமாலை இறைவன் கழுத்தில் விழுகிறது, மகிழ்கிறன். இதனைச் சுந்தரர் தேவாரத்துள் திருவானைக்காப் பதிகத்தால் அறியலாம்.

மற்றுமொரு வரலாறு. திருச்செந்தூரில் சமுத்திர ஸ்நானஞ்செய்த சேதுபதியின் மாலையும் இம்மாதிரி காணமற் போய்விட்டது. மாலை கிடைத்தாலொழிய உணவு உண்பதில்லை என்றிருந்தார் சேதுபதி. மாலைப்பொழுதில் மாலை கிடைத்தது. மகிழ்ந்தார். முருகனுக்குப் பெரும் பொருளை அர்ப்பணித்தார் என்பது. இந்த வரலாறுகள் அருட்சோதனை பற்றியவை. ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஒரு ஜபமாலையை முருகனுக்கு அணிவித்தகாட்சி ஆண்டவன் ஏற்றருளிய எளிமை பற்றியது.

அற்புத நிகழ்ச்சி:

காலையில் விசுவரூப தரிசனத்தை முடித்துக்கொண்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருமடத்திற்கு எழுந்தருளி இருப்பிடத்து மாடியில் அமைந்துள்ள கீற்றுக் கொட்டகையில் இருந்து ஜபம் செய்துகொண்டிருந்தார்கள்.

ஆலயத்தில் அறுமுகப்பெருமானது திருவருளை அள்ளி உண்டு தேக்கெறிந்து மௌனமாக இருந்து தியானத்தில் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஒரு மயில் தன் நீலத் தோகை விரித்த நிலையில் நீண்டநேரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமவர்கள் திருமுன் நின்றுகொண்டிருந்து மறைந்தது. தியானம் கலைந்ததும் இதனை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களிடம்

தொண்டர் திரு. மருணீக்கியார் தெரிவித்தார்கள். பின்னர் எல்லோருமாகச்சென்று மயிலைத் தேடிப்பார்த்தார்கள். காணவில்லை. பின்னர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் பழவகைகள் முதலியவற்றை அதற்கெனவைத்துக் காத்திருந்தார்கள். மயில் மறுநாளும் வரவில்லை. இந்நிகழ்ச்சி எல்லோருக்கும் ஒரு அற்புத நிகழ்ச்சியாக இருந்தது. திருச்செந்தூர் சென்ற அன்று இக்காட்சி நடைபெற்றது. முருகனே மயில் மீது வந்து ஆட்கொண்ட கருணைக்குறிப்பாக இருந்தது இது. பின்னர் ஆதீன ஓதுவாமூர்த்திகள் திரு. சம்பந்த ஓதுவார் அவர்கள் திருச்செந்தூர்த் தலபுராணம், கந்தர் கலிவெண்பா, திருப்புகழ், முருகன்புகழ்மாலைகள் இவைகளை ஓத, ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் கேட்டுச்சிந்தித்து மகிழ்ந்திருந்தார்கள். இரவிலும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி வழிபட்டார்கள்.

31-10-54 ஞாயிறுவிடியல் விதிப்படி தீர்த்தமாடித் திருக்கோயிலுக்கு ஸ்ரீ குமரகுருபரருக்கு அருளிய திருவாயிலிடமாக எழுந்தருளிக் கொடிமரத்தினருகே சென்று 1 மணிநேரம் ஜபம் செய்துகொண்டிருந்தார்கள். விசுவரூப தரிசன காலம் நெருங்கியதும் உள்ளே சென்று தரிசித்தார்கள். அன்று மாலை பெருமானுக்கு ஆறுமுக அர்ச்சனைகள் சிறந்தமுறையில் செய்விக்கப்பெற்றன.

1—11—54 திங்கட்கிழமை கந்தசஷ்டித் திருநாள். விடியற்காலம் தீர்த்தமாடி விஸ்வரூப தரிசனம் செய்தார்கள். அபிஷேகத் திரவியங்கள் சகல சாமக்கிரியைகளுடன் தயாரிக்கப் பெற்றன. அபிஷேக ஆராதனைக்குப் பின் சகஸ்ரநாம அர்ச்சனை செய்விக்கப்பெற்றது. மாலை சூரசம்ஹாரக் காட்சி நடைபெற்றது. சுவாமி முருகதாஸ் அவர்களின் பஜனை எல்லோரையும் முருகன் திருவருள் வெள்ளத்தில் ஆழ்த்தியது.

2–11–54 செவ்வாய்க்கிழமை ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சூரியபுஷ்கரணியாகிய சமுத்திரத்தில் ஸ்நானம்

திருச்செந்தூரில்



சூரசங்காரம் செய்ய செவ்வேள் எழுந்தருளிய திருக்காட்சி.

பாரணைநாளில் 1500 ஏழைகளுக்கு அன்னதானம் அளித்த தோற்றம்.

செய்து ஆறுமுகப்பெருமானின் அபிஷேக தரிசனம் செய்து வள்ளிதெய்வயானையம்மையார்களின் திருவருளுக்கு இலக்காகித் திருமடத்துக்கு எழுந்தருளிப் பாரணை செய்தருளினார்கள். மாகேசுரபூசை நடைபெற்றது. சைவ அன்பர்களுக்குப் பொருளும் புதிய ஆடைகளும் வழங்கப்பெற்றன. 1500 ஏழை மக்களுக்கு அன்னதானங்கள் செய்விக்கப் பெற்றன. இவ்வாறு செந்தில்மாநகரில் சீரொடுபோந்து சேவற்கொடியான் தன் திருவருளுக்குரியவர்களாய் அன்று மாலை ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மாலை 4 மணிக்கு நெல்லைமாநகரை வந்தடைந்தார்கள்.

3—11—54 ஸ்ரீ சிவசைலத்துக்கு எழுந்தருளித் திருக்கோயில் சென்று வழிபட்டார்கள். இத்தலத்தில் பதினாறுவது மகாசந்நிதானம் அவர்களின் குருமூர்த்தம் உள்ளது.

நெல்லை :

4—11—54 வியாழன் மாலை 'செருந்தி செம்பொன் சொரியும் திருநெல்வேலியுறை செல்வர்' சேவடி பணிந்து காந்திமதியம்மையின் கருணையைப் பெற்றுக் களிகூர்ந்தார்கள். மார்க்கண்டேயர் செய்த ஷண்முகார்ச்சனையால் நெல்லையிலுறையும் வில்லுடைவேலனும் முருகவேளுக்கு அர்ச்சனைகள்செய்து அகம் மகிழ்ந்தார்கள். அன்று மௌனவிரதத் திருநாள் அல்லவா ?

உண்டிநீத்த ஒரு பெருங்கிழவர் நீராடலின்றியே நீண்டநாள் வாழும் அமாவாசைசுவாமி என்பவர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வந்து தரிசித்து இன்புற்றார்கள்.

5—11—54 வெள்ளிக்கிழமை பாரணை முடித்துத் தென்குமரிக்கு எழுந்தருளினார்கள். தமிழ்நாட்டின் தென் எல்லை குமரி. எழுநூற்றுக் காவதநாடுகளை இரையாகக் கொண்டது இக் குமரிமுனை தான். இன்பத்தமிழ் ஏடுகளின் இனிப்புச் சுவையைக்கொண்டு இன்றும் கண்ணுக்கு

792

விருந்தாகிக் காட்சி தருகின்றது கன்னியா குமரி முனை இங்கு எழுந்தருளியிருந்து கடலின் சீற்றந் தணிக்கும் கோயில் குமரிக்கோயில். வேங்கடத்தில் தமையனும் குமரியில் தங்கையுமாக இருந்து தமிழகத்தைக் காத்து வரும் இத் தமிழ்க் குமரியைத் தரிசித்து அபிஷேக அருச்சனை ஆராதனைகளை முடித்துக்கொண்டு நெல்லைக்கு எழுந்தருளியானார்கள்.

6—11—54 சனிக்கிழமை இந்துக்கல்லூரி ஆசிரியர்களுக்கும் சைவப்பெருமக்களுக்கும் அறுசுவை உண்டி அளிக்கப் பெற்றது.

மதுரை :

6—11—54 சனிக்கிழமை மாலை 4 மணிக்குப் புறப்பட்டு மதுரை வந்தடைந்தார்கள். மதுரை, தருமையின் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானின் உறைவிடம். அங்கயற்கண்ணி சமேத ஆலவாயண்ணலைப் பட்டுப் பரிவட்டங்கள் சார்த்தி வழிபட்டுப் பரமானந்தம் பெற்றார்கள். ம. க, சுந்தரேசபட்டர் அவர்கள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களை வரவேற்று வழிபாடு செய்வித்தருளினார்கள்.

7—11—54 ஞாயிறு விடியற்காலம் 3 மணிக்குத் தல யாத்திரையை முடித்துத் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

நிழற்படங்கள்: திரு. மீனாட்சிசுந்தரம், தருமபுர ஆதீனம்.

ஸ்ரீ சிவசைலம் தருமபுர ஆதீன மடாலயத்தில்

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்

ஸ்ரீ சிவசைலம்: தருமபுர ஆதீனத்துக்குரிய மடாலயத்தருகில்



ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் கருணையாற்றைக் கடக்கும் காட்சி

ஸ்ரீ சிவசைலம் திருக்கோயிலில்

திருநந்தி

அதிகார நந்திதேவர்

793

*கல்வெட்டுத் திறப்புவிழா முன்னுரை

தலைவர் திரு. A. இராமநாதம் பிள்ளை, M. A., அவர்கள்
அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்,

சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வர் கழல் ஏத்தும் சித்தாந்த சைவப் பெரியோர்களே!

தோத்திரம் என்பது இறைவனது பெருமை, அவனுடைய உயர்வு, அடியார்க்கு அருளை உய்விக்கும் தன்மை. முதலிய பொருள்கள் அடங்கத் துதித்துப் பாடுவதற்கு உரியதாகும். அத்தோத்திரங்கள் எவற்றினும் சிறந்தது தமிழ் மறைகளாகிய நால்வர் திருமுறைகளும், ஏனைய திருமுறைகளுமாம். இவற்றைத் துதிக்கும்பொழுது மனம் ஒன்றி, இறைவன் திருவருளில் பதிந்து பேரின்பம் அடைகின்றது. இவற்றை அனைவரும் கண்கூடாகக் காணலாம். இறைவன் வழிபாடுகள் பலவற்றிலும் மிக அவனை உவப்பிக்கச் செய்வது தோத்திரப் பாக்களைத் தவிர பிறிது இல்லை.

''அளப்பிலகீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே'' எனத் திருநாவுக்கரசரே கட்டளையிட்டருளினர். பின் வந்த சிவப்பிரகாச அடிகளும்,

''படியிலா நின்பாட்டில் ஆரூர நனிவிருப்பன் பரமனென்பது அடியனேன் அறிந்தனன்'' எனக் கூறியிருக்கின்றார்.

சாத்திரம் என்பதை (Philosophy) என்று ஆங்கிலத்தில் கூறுவர். உலகத்திலுள்ள மதத் தத்துவங்கள் எவ்வளவு உண்டோ அவற்றைக் காட்டிலும் மேலான, ஆழ்ந்த மறுக்க முடியாத, நன்கு நிறுவப்பட்ட உண்மையை உடையது சைவ சித்தாந்தம் ஒன்றேயாகும். தற்காலத்தில் தோன்றிய பிர்ம சமாஜம், ஆரிய சமாஜம்போன்ற மதக்கொள்கைகளும், இனிப்

---

* 54 ல் சிதம்பரம் சபாநாயகர் கோயிலில் கொடிமரத்தருகில் தருமையாதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களால் அமைக்கப்பெற்ற தேவாரத் திருப்பதிகக் கல்வெட்டுத் திறப்புவிழாவில் நிகழ்த்திய திறப்புரை.

794

புதிது புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுத் தோன்றும் சமயங்கள் எவையாயினும் அவை எல்லாம் நமது சைவசித்தாந்தத்தின்கீழ் ஒரு பகுதியாய் அடங்குமேயன்றி மேலாகாது என்பது நமது அறிஞர் பெருமக்கள் கண்டு துணிந்த துணிபு. இதனை நானுகக் கூறவில்லை. திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுகின்ருர். அது. "விரிவிலா அறிவினுர்கள் வேருெரு சமயஞ்செய்து எரிவினுற் சொன்னுரேனும் எம்பிராற்கு ஏற்றதாகும்" என்பதாகும்,

சாத்திரங்களாவன:- திருவுந்தியார் முதலாக, சங்கற்ப நிராகரணம் முடிய பதினுன்கு நூல்களாகும். இவை மெய் கண்ட சாத்திரங்கள் எனவும் பெயர்பெறும்.

கல்வெட்டு என்பது ஒரு அருமைவாய்ந்த செய்தியைப் பொதுமக்கள் பலருங்காணத் திருக்கோவிலின் புறச்சுவர் முதலான இடங்களில் வெட்டி வைப்பதாகும். இங்ஙனம் கல்லில் வெட்டிவைக்கும் வழக்கம் தமிழ் நூல்களில் மிகப் பழையதாகிய தொல்காப்பியத்தில் கூறப்பெற்றுள்ளது, அதில். போரில் புறங்காட்டி ஓடாது இறந்த வீரர்களுக்குக் கல்நட்டு, அவர்களின் பெயர்களும் பெருமைகளும் எழுதப்பெற்றுவந்தன. ஆனுல் அறச்செயல்களைப்பற்றி எழுதிவைக்கும் வழக்கம் அப் பழங்காலத்தில் இல்லை. அவை. நம்நாட்டைக் கி. பி. மூன்ருும் நூற்ருண்டின் இடைப் பகுதியிலிருந்து ஒன்பதாம் நூற்ருண்டின் இடைப்பகுதிவரை ஆண்ட பல்லவ மன்னர்களின் காலங்களில்தான் ஏற்பட்டன, இவ்வறச் செயல்களைப்பற்றி வெட்டப் பெற்ற கல்வெட்டுக்களின் தொடக்கத்தே அக்காலத்து அரசனது மெய்க்கீர்த்தியும், பின்னர் இன்னுர், இன்ன அறத்தின் பொருட்டு, இன்னது செய்தார் என்பனவும் குறிக்கப்பெற்றிருக்கும்.

இக்கல்வெட்டுக்களினுல் அரசர்களுடைய வீரச்செயல், அவர்களுடைய தேவிமார், அவர்களின் ஆட்சிக்காலம், அவர்களைப் பாடிய புலவர்கள், அவ்வரசர்களின் காலங்களில் விளங்கிய அரசியல் தலைவர்கள் முதலியவைகளையும், அக்காலம் அரசியல் நடந்தவிதம், திருக்கோவில் நிர்வாகம். நாகரிக மேம்பாடு முதலான எத்தனையோ அரிய செய்திகளையும் அறியலாம்.

இங்ஙனம் கல்லில் வெட்டிவைத்தால் அது பன்னெடுங் காலம் நிலைபெற்றிருக்கும். அதுபற்றியே ஔவையாரும் "கல்மேல் எழுத்துப்போல் காணுமே" என்றார். மேலும் அதைப் பார்ப்பவர்களுக்குத் தாமும் அவ்வாறு அறம்செய்து புகழும் புண்ணியமும் ஈட்டவேண்டும் என்னும் எண்ணத்தையும் உண்டாக்கும். சுருங்கக் கூறுமிடத்து, உண்மை வரலாறுகளை உணர்ந்து கொள்வதற்கு உயிர்நாடிகளாய் விளங்குவன கல்வெட்டுக்களே யாம்.

பேரன்பர்களே!

இதுகாறும், தோத்திரம், சாத்திரம், கல்வெட்டு இவைகளின் பெருமை பயன் முதலியவைகளைச் சுருங்கக் கூறினேன். இப்போது அத்தோத்திர சாத்திரங்களுள் சிலதிருப்பாடல்களைக் கல்லில் வெட்டி வைத்திருப்பதைத் திறந்துவைக்கும் விழாவிற்கே நாம் இங்கே கூடியுள்ளோம்,

சிதம்பரம், காணமுத்திதரும் தலம். மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றும் பொருந்தியது, இதற்குத் தில்லை, பெரும்பற்றப்புலியூர் முதலான வேறுபெயர்களும் உண்டு. சைவ சம்பிரதாயத்தில் இது கோவில் என்று வழங்கப்பெறும். இங்கும் கல்வெட்டு அமைந்திருக்கும் இடம் குலோத்துங்கசோழன் திருமாளிகைப் புறவாயில் தென்புறச்சுவர் ஆகும். நாம் எல்லோரும் கூடியிருக்கும் இடம் விக்கிரமசோழன் திருமாளிகை ஆகும். இங்கே இக் கல்வெட்டை ஏற்பாடு செய்தருளியவர்கள் திருக்கயிலாய பரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்தில், 25-ம் பட்டத்தில் இனிது வீற்றிருந்து அருட்செங்கோல் நடத்திவரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். இவர்கள் பட்டத்திற்கு எழுந்தருளிய எட்டு ஆண்டிற்குள், தங்கள் கீழுள்ள தம்பிரான்களை வித்துவான் பட்டம் பெறச்செய்தும், அவர்களைச் சமயபோதனையில் ஈடுபடச் செய்தும் வருவது, தருமபுரத்தில் நாட்டு மொழிகளுக்குக் கல்லூரியை நிறுவியது, தங்கள் ஆதீனக் கோவில்களில் பல இடங்களில், தேவாரப்பாடசாலைகளை நிறுவிச் சிறுமிகளையும், சிறுவர்களையும், தேவாரங்களை ஓதச்செய்து, பரிசில் வழங்கி, அவர்களை ஊக்கிவருவது. மாயூரத்தில் மகப்பேறு மருத்துவச்

சாலை நிறுவியது, புள்ளிருக்குவேளூரில் ஆதுலர்சாலை ஏற்படுத்தியது, தலைநகராகிய சென்னையில் பிரசாரநிலயத்தை உண்டாக்கியது, திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடுகளை அடிக்கடி கூட்டிவருவது, ஆதீனக் கோவில்களில், நித்திய நைமித்திகங்களைக் குறைவறச் செய்துவருவது, ஆகிய தொண்டுகளை எல்லாம் நடத்தி அருளுகின்றார்கள். சுருங்கக்கூறுவேனேயானால் ஆதீனத்தின் பெருமை நாடு எங்கணும் இவர்கள் காலத்தில்தான் பரவிவருகின்றது. இத்துணைப் பெருமை வாய்ந்த நம் மகா சந்நிதானத்திற்கு நம் நன்றி உறியதாகும். இங்குக் கல்வெட்டைத் திறப்பதற்கு எழுந்தருளியிருப்பவர் நம் மதிப்பிற்குரிய நிதியமைச்சர், கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள் ஆவார். விரிவுரையாற்ற வந்திருப்பவர் என் அரிய நண்பரும் முன்னாள் மேயருமாகிய திரு இராமசாமிநாயுடு அவர்கள்.

இத்தகைய, பெருமை வாய்ந்த ஒரு சீரியபணியில், தலைமை ஏற்று நடத்தித்தரும் ஆற்றல் எனக்கு இல்லையாயினும், ஸ்ரீ ல ஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவருள் ஆணையை மறுத்தற்கு அஞ்சி இதை ஏற்றுக்கொள்கிறேன். குருமகாசந்நிதானம் அவர்கள் திருவருள் இருந்தால் என்போன்றவர், இதுபோன்ற பன்மடங்கு பெரிய பணியையும் தாங்கி நடத்தும் ஆற்றல் உடையவராவர். ''துரும்பும் படைத்தளிக்கும் அகிலாண்டத் தொகுதியையே'' என்ற குமரகுருபர அடிகளார் வாக்குத்துணை கொண்டு இப்பணியை ஏற்றேன். ஒன்று என் நினைவிற்கு வருகின்றது. இங்கு விக்கிரமசோழன் காலத்தில், தொண்டை மண்டலத்து மணவில் கோட்டத்து மணவில் என்ற ஊரில் இருந்தவனும் காலிங்கராயன் என்னும் பட்டத்தை உடையவனும், விக்கிரமசோழனது அரசியல் தலைவனுமாய் இருந்தவனுமாகிய, கூத்தன் என்பான் மூவர் தேவாரங்களையும் செப்பேடுகளில் எழுதி இக்கோவிலில் வைத்துள்ளான். அதன்பிறகு, தோத்திர சாத்திரப்பாடல்களுள் சிலவற்றை இக்கோவிலில் பொறித்து வைத்தவர்கள் நம் மாண்புமிக்க மகாசந்நிதானம் அவர்கள் ஆவார்கள். தில்லை ஆளுடைய நாயகன் திருவருள் முன்நிற்பதாகுக. உங்கள் அனைவர்க்கும் எனது நன்றி உரியதாகுக.

'தென்னாடுடைய சிவனேபோற்றி'

797.

கிழவனைப் புணர்ந்த குமரி

சித்தாந்த ரத்நாகரம், புலவர்,
திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள்,
துணைத்தலைவர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

கிழவன் என்னும் பெயர்க்குப் பொருள் உரியவன் என்றும் வயதில் முதிர்ந்தவன்என்றும் ஆம். 'தாமரைக் கிழவன்' (சூரியன்) என்றும் 'தள்ளாத கிழவன்' என்றும் அப்பொருளில் வழங்குதல் அறிந்ததே. புணர்தல் - கூடுதல்; கலத்தல்; மணஞ்செய்து கொள்ளல். குமரி - குமாரீ என்ற வடசொல்லின் திரிபு. குமாரன் என்பதன் பெண்பாற்பெயர். அது குமாரத்தி என்று வழுவுற்றும் வழங்குகின்றது. குமரி என்பது இளமகளைக் குறித்தது. கிழவனை மணந்த குமரி என்பது, முதியவனை மணந்த இளையவள் என்னும் பொருளுடையதாகும்.

கிழவனைக் குமரி மணக்கப் பல காரணம் இருக்கலாம். காரணம் இல்லாமல் காரியம் இராது. குமரி கிழவனுக்கு வாழ்க்கைப்படுதலைக் காண்கின்றோம். அக்காரியத்திற்குக் காரணம் உண்டு. செல்வப்பெருக்கத்தால் இளம்பெண்டினை முதுமகனுக்கு அளிப்பர் சிலர். மணப்பவர் பிறர்வாய்க்காததால், விரும்பி முயன்ற கிழத்துக்குக் கொடுப்பர் சிலர். கிழவனது செல்வத்தைத் தம்பகைவரான பிறர் அடையலாகாது, தமக்கு அச்செல்வமிகுதி வேண்டாததாயினும் தம்பகைவராகிய பிறர்க்குப் பயன்படலாகாது, தம் மகளை அக்கிழவனுக்கு மணம் செய்விக்காமல் கழித்தால், அதை அக்கிழவன் அப்பகைவர்க்கு உரிமையாக்கிவிடுவான் என்று தெரிந்து, அத்தகாத செயலைச் செய்யத் துணிவர் சிலர். கிழவனையோ குமரியையோ கெடுக்க எண்ணும் தீயோர் முயற்சியும் அவ்விருவர் மணத்திற்குக் காரணமாகும். கல்வி, அதிகாரம், குலநலம் முதலிய சிறப்பு நோக்கியும் அக்கலப்பு உண்டாகும். சொத்துக்களைத் தம் வழியினரே நுகரவேண்டி நிகழ்வதும் உண்டு. கற்பழிந்து பெற்றாலும் பெறலொட்டும். பிள்ளைபிறந்தால்போதும் என்ற பரோபகாரசிந்தையும் சிலர்க்குத் தோன்றுகின்றது. பெற்ற தாய், தன் தமையன் மூப்பைப் பொருட்படுத்தாமல், தன்மகளை அவன்கண்சார்த்தி, வாணிகப்பொருளாக்குவதும் உலகில் உண்டு. கிழடுகளை மணக்கக் குமரிகளும், குமரிகளை மணக்கக்

கிழடுகளும் எக்காலத்திலும் உண்டு. வாய்ப்புத்தான்வேண்டும். இன்னோரன்ன பல காரணங்களுள், இங்குக் குறிக்கின்றது யாதோ? இதைக் கற்கும் அறிஞரே தேர்ந்துகொள்வாராக. ஆனால், எந்தக் குமரியும் கிழவனை அதிலும் குருட்டுக் கிழவனை உளமார எண்ணி விரும்பி மணம்புணரமாட்டாள்.

இங்கு அடியேன், உணர்வால்நோக்கி மகிழ்ந்த மணம் மிக்க வியப்பை ஊட்டும். அந்தக் குமரியே வந்து குருட்டுக்கிழவனை நெஞ்சார நினைந்து மணம்புணர்ந்தாள். அக்கிழவன் மூத்தவனாக மட்டும் இல்லை. குருடனாகவும் இருக்கின்றான். குமரியோ ஓர் இருட்டறையுள்ளே ஒருமூலையிலே இருக்கின்றாள். இருந்தாள், இருப்பவள். யாரிடம்? உயிர்களது அறிவின் வளர்ச்சிக்குத் தக்கவாறு அவள் இருப்பு வேறுபடும். கிழவனுக்குக் குமரிமேல் ஆசை உண்டாயிற்றோ? குமரிக்குக் கிழவன்மேல் காதல் எழுந்ததோ? குருட்டுக்கிழவனைக் கூடவேண்டும் என்று இருட்டறையின் ஒரு மூலையிலே இருந்த குமரிக்குத்தான் காதல் தோன்றிற்று; பெருகிற்று. அதன் தோற்றமும் பெருக்கமும் வீணாகப்போகவில்லை. தனக்குப் பெருகிய காதலால்தான் அந்த இருட்டறை மூலையைவிட்டு வெளிப்பட்டாள். அவ்வெளிப் பாடே கிழவனுக்கு நல்லகாலத்தின் பெரும்பயனாயிற்று. குமரி தன்முன் வந்து வெளிப்பட்டாள் என்று கேட்டாலேபோதும், எத்தனையோ யுகமாகக் குருடாயிருந்தகண்ணும் சடக்கெனத் தானே திறந்துபார்க்கும் அன்றோ? நான் என் இளமைக் காலத்தில் கண்மூடி மௌனியாகித் தனியே இருந்து கடவுளைக் கருதி வழிபட்டுக்கொண்டிருப்பேன். அப்போது, எதுவந்தாலும் யார்வந்தாலும் கண்களைத் திறப்பதில்லை என்று முடிவுசெய்து கொண்டுதான், தியானம்செய்யத் தொடங்கிக் கண்களை மூடிக் கொள்வேன். வீம்புக்காரர் பாம்பு பாம்பு என்று அச்சம் உறுத்தினாலும் திறப்பதே இல்லை. அப்போதே ஒரு பெண்குரல் கேட்டதோ இல்லையோ உடனே என் கண்கள் என் தீர்மானத் தையும் அவமானத்தையும் பொருட்படுத்தாமல் திறந்துகொள் ளும். எனக்கிருந்த ஆசையால்மட்டும் இக்கண் திறக்கும் தொழில் நடந்தது. அங்குவந்து எதிரில் நின்ற பெண்ணுக்கும் என்பால் காதல் மிகுந்து, அன்பாலும் இன்பாலும் திறக்கச் செய்யவேண்டும் என்ற வன்பாலும் முயன்றால், என்கண்களைத் திறக்கக் கேட்கவாவேண்டும்?

குமரிக்கே குருட்டுக் கிழவனை விழிக்கச்செய்யவேண்டும் என்று பேருக்கமும் பெருமுயற்சியும் உண்டாய்விட்டன. அதனால் கிழமும் குருடும்போய் இளமையும் பார்வையும் தாமே உண்டாயின. அப்படிச்செய்யும் குமரி ஒருத்தி எங்கு இருக்கின்றாள்? அவள் எவள்? அவளைப்போல வேறு ஒருத்தியும் இல்லையோ? இவைபோலப் பல கேள்விகள் எழலாம். அவற்றிற்கெல்லாம் ஒரே விடைதான் உண்டு. அவள்தான் குமரி என்னும் பெயருக்கு உரியவள். மற்று யாரும் எப்போதுமே குமரியாக இருக்கமுடியாது. சிலகாலம் குமரியாயும் சில காலம் கிழவியாயும் இருந்து மாய்கின்றவரே பிறர் எல்லாரும். அவள் ஒருத்தியே என்றும் அழியாக் கன்னியாங்குமரி. இது நான்சொல்வதாயிருந்தால் நம்பவேவேண்டா. ஸ்ரீ அருணந்திதேவ நாயனுர் "உலகு உயிர் எல்லாம் ஈன்றும் பவன் பிரமசாரி ஆகும் பால்மொழி கன்னி ஆகும்" என்றருளினுர். குமரகுருபர முனிவரும் அதற்கு மற்றொரு சாட்சியாக இருந்து சொல்வதைக் கேளுங்கள். "எழுபெரும் புவனம் முழுதுஒருங்கு உதவும் இறைவி என்று மறை(கள் எல்லாம்) கை எடுத்து ஆர்க்க (ஒலிக்க)வும் இடை நுடங்கும் மடநடை இளங்குமரி என இருந்த கன்னி" (-பெரிய திருடி). (முத்துக். பிள்ளைத். 4) "அலைப்பாய் புனல் தெண்கடல் வைப்பும் அகிலாண்டமும் பன்முறை ஈன்றும் அழகு முதிர முதிரா என் அம்மை அமுதுசூல் கொண்டமுலை" (ஷ 41). "உலகம் ஓர் ஏழும் பலமுறை பயந்தும் முதிரா இளமுலை முற்றிழை மடந்தை" (காசிக்கலம்பகம் 38) என்று வேளூர்ப் பாலாம்பாவும் காசி விசாலாட்சியுமாகிய குமரியை ஆசையே இல்லாத முனிவரும், ஆசையுடையவரும் அறிவிக்கமுடியாத அளவில், மிக்க அழகுற, கிழவரும் ஆசைக் கிழவராகும்வண்ணம் விளக்குவதை அறியுங்கள்.

அந்தக்குமரி அந்தவிருத்தாப்பியனை (-குருட்டுக்கிழவனை) எந்தவகையிலும் ஆட்கொள்ளவல்லவள். அவள் எண்ணிவிட்டாள் கிழவனைக்கூட. அவன் குருடனுனால்தான் என்ன? கிழத்தனத்தைப் போக்கிக் குமரனுக்கவும் இருட் குருட்டைத் தீர்த்து ஒளிப்பார்வை அளிக்கவும் அவளுக்குத்தான் முடியும். "இவ் வாழ்க்கையெல்லாம் அவளால் வந்த ஆக்கம்" என்று அருளினுர் நம் அருணந்திசிவாசாரியார். எங்கும் பாய் இருளாகி மூட இருகண் புதைக்கவும் சுடரொளி உலகினுக்குக் கொடுக்க

ஒரு நெற்றிவிழி திறக்கவும் அந்நாயகிக்கே முடியும். அவ்வாறு தன் கணவன் கண்ணை மூடவும் திறக்கவும் செய்யும் அவள், அக்குருட்டுக்கிழவன் கண்ணைத் திறப்பதில் என்ன வியப்பு இருக்கின்றது?

இவ்வுடம்பு மாயையின் காரியம். மாயாகாரியதேகமாகிய இதுவே ஓர் அறை. இந்த அறையிலுள்ள இருட்டோ ஆணவம் ஆகும். ஆணவத்தால்தான் மாயாதேகம் மாயாத்தேகம் ஆயிற்று. அதனுல் அத்தேகத்திற்குள் ஆன்மாத் தங்கியிருக்கின்றது. ஆன்மா அத்தேகத்தில் ஒரு மூலையில் இருந்துவருகின்றது. அம்மூலைக்குள் இதுவரையில் நாம் பேசிவந்த குமரி இருந்து வந்தாள். பிறவுயிர்கள்பால் இருக்கின்ருள். மேலும் இருப்பாள். ஆன்மாக்களுக்கு அளவே இல்லை. ஆணவத்தின் சார்பும் மாயாதேகமும் கன்மபந்தமும் தனித்தனியோ கூடியோ உள்ளவரை எல்லா ஆன்மாக்களும் குருட்டுத்தன்மையுடையனவே ஆகும். மூலை - உயிரிருக்கும் உள்ளிடம். கேவலம் என்றலுமாம். அங்கு அவ்வுயிர்க்கு உயிராக இருந்த சிவசக்தியே குமரி, அதனுல், அவளை "இருட்டறை மூலை இருந்த குமரி" என்று குறிக்கலாயிற்று. ஆணவமாகிய இருட்டு நிறைந்த மாயையின் காரியமாகிய தேகம் என்னும் அறையில் இருக்கும் உயிர்க்குக் குருட்டுத்தன்மை இல்லையானுல், அவ்விருட்டறையை விட்டு அப்பால் போகாதது ஏன் ? அவ்விருட்டறையின் ஒரு மூலையிலேயிருக்கும் ஒருகாரணமே அது குருடு என்று காட்டப் போதியதாகும். அக் குருட்டாத்துமாவுக்கு விழித்து ஒளியில் செல்லும் பக்குவம் அக்குமரியின் நல்லெண்ணத்தால் உண்டாய்விட்டது. அவனருளாலே அவன்தாள் வணங்குதல் வேண்டும். அவனருளே கண்ணுகக் காணவேண்டும் என்றெல்லாம் நம் குருமார்கள் சொன்ன உண்மையை மறக்க முடியுமா ?

இருட்டறை மூலையிலிருந்த குமரி அங்கு இருந்த குருட்டுக் கிழவனைக் கூடவேண்டும் என்று எண்ணுவது என்ருல் என்ன? சிவசக்தி நிபாதமே அது. அச்சத்திநிபாதம் சும்மா கிடைக்குமோ? சிவபுண்ணியம், இருவினையொப்பு, மலபரிபாகம் எல்லாம் உடன் நிகழ்ந்தால்தானே கிடைக்கும்? மூன்றும் ஒருசேரவே நிகழும்.

801

கரிய ஆணவம் தேயுமா கலந்தநம் சத்தி
உரிய தாம்சிவ புண்ணியம் உடன்விராய் ஊட்டும்
பெரிய வாட்கணுய் பின்மல பாகமாம் பின்னர்
விரியும் சத்திநி பாதம்பின் வினையொப்பு மேவும்

—திருவானைக்காப்புராணம்.

அக்குமரியாகிய சிவசக்தி ஆணவமாகிய இருட்டை நீக்கி ஒழித்துவிட்டாள். விடவே அவள் குணமாக விளங்கினாள். அவள் குணம் ஆனால், அக்குணத்தை உடைய குணியாக வேறு ஒன்று இருக்கும் அன்றோ? குணம் எனப்படும் எல்லாம் குணியைப்பற்றித்தான் நிற்கும். வெண்மை முதலிய குணம் சுண்ணாம்பு முதலிய குணியைப்பற்றாது நில்லா. அக்குமரியாகிய குணம் தனக்கு முதலாகிய குணியைக்காட்டி நின்றது. குருடு நீங்கிய ஆன்மா, குணமாகிய குமரியைக் கண்டதும் அன்றி, அக் குணத்திற்கு முதலையும் கண்டது. காட்டியவள் குமரி. கண்டவன் குருடனாயிருந்து குருடுநீங்கி ஒளிபெற்ற கிழவன். காணப்பட்டது குண முதல் ஆகிய குணி. அதாவது சிவம். ஆணவம் மாயை கன்மம் எல்லாம் பாசம், இருட்டும் அறையும் குருடும் மருளும் ஆகச் சொல்லிய அனைத்தும் அப்பாசத்தின் விளைவே. அதனால் அவை ஒன்றாகச் சேர்த்துப் 'பசுத்துவம்' என்று சொல்லப்படும். பாசத்தில் மயங்கியிருந்த ஆத்துமாவைச் சிவநேசத்தில் திருப்பிவிட்டாள் குமரி. பாசப்பற்று, சிவப்பற்று ஆக மாறிவிட்டது. குருடாகிய பசுத்துவம் தொலைந்தது. விழிப்பாகிய சிவத்துவம் விளைந்தது. அச்சிவமாகிய ஆனந்தத்திலேயே மயல் வளர்ந்தது. அம்மயல் வளரச்செய்ததே மருட்டியதாகும்.

எந்தக்குமரியும் மருட்டாமல் மணந்துகொள்ள முடியாது. அந்தக் குமரியும் கிழவனது குருட்டையும்நீக்கிக் குணமுதலாகிய சிவத்தையும் காட்டி, மருட்டி மணம் புணர்ந்தாள். அம் மணம் தருகின்றது பவபோகமோ? அன்று; அன்று; சிவபோகம். குமரி கிழவனைக்கூடி அடைந்த போகம் ஆனது பதினாறுண்டுடைய பையலும் பன்னீராண்டுடைய தையலும் கலந்து அடைந்த அழிகின்ற பவபோகம் போலவோ இருக்கும்? இருந்தால் அதற்கு என்ன சிறப்பு? அழியாத சிவபோகமாக இருக்கின்ற மிகப்பெருஞ் சிறப்பை உணர்த்தும் பொருட்டே தான், கிழவனை அதிலும் இருட்டுக்கிழவனை மணம்புணர்ந்த குமரி என்று குறிக்கத் திருவுளங்கொண்டார் அவர். யார்?

அவர் தாம் திருமூல தேவநாயனார். எங்கே குறித்தார்? பார் இங்கே. இருட்டறையில் பார்க்காதே.

இருட்டறை மூலை இருந்த குமரி
குருட்டுக் கிழவனைக் கூடல் குறித்துக்
குருட்டினை நீக்கிக் குணமுதல் காட்டி
மருட்டி அவனை மணம்புணர்ந் தாளே

—திருமந்திரம்.

இருட்டு-ஆணவம், அறை-மாயாதேகம், மாயாத்தேகம் அன்று. மாய்ந்து மாய்ந்து மீண்டும் மீண்டும் வெவ்வேறு வருதல்பற்றி மாயாத்தேகம் என்றலும் அமையும். மூலை-உயிர் இருக்கும் இடம். கேவலம். அங்கு உயிர்க்குயிராயிருந்தது சிவசக்தி. மூலையிருந்தாரை முற்றத்தே விடும் ஆற்றல் அத் திருவருளுக்குத்தான் உண்டு. காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப்போல் கட்டுண்டிருந்த கிழவனை வெளியில்விட்டு அல்லல் ஆம் காப்பு இட்டு, அதற்கு இசைந்தபேர் இட்டு உடல் பெலக்க அமுதம் ஊட்டிப் பெரிய புவனத்திடை போக்கு வரவு (ஆகிய) பெரிய விளையாட்டு அமைத்திட்டு, சுருதிமொழி தப்பில் நமனைவிட்டு இடர் உற உறுக்கி, இடர்தீர்த்து, இரவுபகல் இல்லாத பேரின்பவீட்டினில் துயில் கொள்மின் என்று சீரிட்ட உலகன்னை அவளே. அவளைத்தான் உயிர்கள்,

''காரகமாம் கர்ப்ப அறைக் கண்ணூடும் என் கண்ணே
வாரம் வைத்துக் காத்தனை நீ வாழி பராபரமே''

(காரகம் - காராகிருஹம்) என்றுநெஞ்சார நினைந்து, தலையாரக் கையாரக் கும்பிட்டு, வாயார நாவார வாழ்த்தவேண்டும். ஒளியாகிய அவளுக்கும் இருளாகிய ஆணவத்திற்கும் உயிரே இடம், 'ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம் ஒன்றுமேல் இடில் ஒன்று ஒளிக்கும். இருள் அடராது, உள்ளுயிர்க்கு உயிராய்த்தெளிக்கும் அறிவு திகழ்ந்துளது', அத்திகழ்வையே குமரி இருட்டறை மூலையில் இருந்ததாகக் குறித்தருளினார் திருமூலர்.

குருடு அறியாமை, அறியாமை ஆணவத்தின் காரியம். கிழவன்—உயிர், ஆன்மா, குணம்—திருவருள், சிவசக்தி. குணமுதல்—சிவம் மருள்—சிவாநந்தத்தில் ஆராவேட்கை. மருட்டல்—சிவாநந்தத்தில் பெரும் பற்றை விளைத்தல். மணம் புணர்தல்—ஞானயோகம், சிவயோகம், திருவருளுறவு. அதன்

பயன் சிவாநந்த போகம். சிவபோகமும் அதுவே. அச்சிவபோகம் ஆகிய பயனைச் சிவயோகமே விளக்கும். அச் "சிவயோகமே யோகம், அல்லாத யோகம் அவயோகம் என்றே அறி" என்றது திருக்களிற்றுப்படியார். சிவயோகம் பெற ஞானயோகம் வேண்டும். அந்தயோகம் வாய்க்க ஆன்மயோகம் இன்றியமையாதது. ஆன்மயோகத்தைமட்டும் ஓரளவு பெற்றவர் 'நாமே கடவுள்' என்று நிச்சயித்துக்கொண்டுவிடுகின்றனர். அவரை, நம் தாயுமானவர் "யாங்களே கடவுள் என்றிடும் பாதகத்தவர்" என்றார். எனவே அதுவேண்டாதது. சிவபுண்ணியத்தால்வரும் சிவயோகமே நமக்குப் பயனாகும்.

தமிழிசைப் பாடல்

இராகம்-சுருட்டி] [தாளம்-சாபு

பல்லவி

நாவரசு திருவடி
நற்றுணையெனப் பிடி (நாவ)

அநுபல்லவி

தேவரசாம் பசுபதி
தெய்வமெனத்தேர்ந்த நிதி (நாவ)

சரணம்

இருகடலுந் தாண்டிய
இன்பக்கரை யீண்டிய
அருகமதம் தீண்டிய
அரியசைவம் வேண்டிய (நாவ)

அப்பனெனச் சிறந்த
ஆமூரினில் பிறந்த
தப்பென்பதைத் துறந்த
சாகுந்தேவரை மறந்த (நாவ)

ஆலயங்கட்குச் சென்ற
அரும்பதிகம் புகன்ற
சூலையெனும்நோ யகன்ற
சுந்தரன்மனத்தில் நின்ற (நாவ)

(மு. சுந்தர முதலியார் அவர்கள்)

504

பெருந்தேவனார் கண்ட விசுவரூபம்

பல்கலைச்செல்வர்,
திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள்
M. A., B. L., M. O. L.
தமிழ்த்துறைத்தலைவர், அரசினர்கல்லூரி, சென்னை.

உலகம் நம் எதிரே தோன்றுகிறது. காலையில் கடலருகே விழித்தெழுகிறோம். என்ன அழகு! செக்கச்சிவந்த செவ்வானம். கதிரவனை எதிர்கொண்டழைக்க அமைத்த தோரணக் கோலமாகக் காட்சி அளிக்கிறது. மிகப் பரந்த கடல்—அப்பாலைக் கரையே தெரியாது முடிவிலாது ஓடும் கடல்—இமய மலையையே தன்னுள் மறைத்து விழுங்கி விடக்கூடிய பேராழம் மிக்க பெருங்கடல் அதோ எதிரில் தோன்றுகிறது. அதனோடு சேர்ந்தாற்போல அதனைத் தொட்டுக்கொண்டு மேலே நீல வானம் கண்ட இடமெல்லாம் கண்குளிரக் காட்சி அளிக்கிறது. நிறை திங்கள் முற்றி நின்ற திருநாள் இன்று. கண்குளிரக் காணும் பைங்கதிர்ச் செல்வனும் சந்திரன் மேலைப் புறத்தில் மறைந்து கொண்டிருக்கிறான். கீழைக்கடலின் வண்ணப் பெருமுகட்டில் உலகுக்கெல்லாம் ஒரு கண்ணும் சூரியன் எழுகின்றான். ஒருங்கு நிற்கும் இருகண் என இவை தோன்றுகின்றன. கதிரவனார் ஒளி பட்டதும் புத்துயிர் பெற்று உலகம் எழுகிறது; பரவைகள் பாடுகின்றன. விலங்குகள் மூரி விட்டெழுகின்றன. மக்கள் தத்தம் தொழிலின்மேல் செல்கின்றனர். ஒளி குன்றி இருட்டிக்கிடந்த உலகம் பல பல நிறங்களுடனும் பலபல வடிவங்களுடனும் மெல்ல மெல்லப் பனிப் படலத் திரையை நீக்கிக்கொண்டு தோன்றுகிறது.

இவ்வாறு எல்லோரும் ஒன்றாக விழித்து ஒன்றாகப் புற இருள் நீங்கப்பெற்று விளங்குகின்றனர்; எல்லாம் விளங்குகின்றன. இப்படி ஓர் ஒற்றுமை எங்கும் வெளியாகிற வியப்பில் நாம் மூழ்குகிறோம். இந்த அற்புதச்சக்தி கதிரவனாய் எதிரே வடிவம் கொண்டு நம்மை வாழ்வித்துக் காட்சி அளிக்கிறது, அம்மட்டுமா? குழவிப் பருவம் முதல் நாம் வளர்ந்த வளர்ச்சியும் நாம் அறிவோம் அன்றோ? கருவிலிருந்த குழவிக்கும் கம்பனுக்கும் என்ன வேற்றுமை! என்ன

வேற்றுமை! புன்னுனைப் பனிபோல நின்ற உயிர்ச்சாறு, கம்பராய், வள்ளுவராய், சேக்கிழாராய், தொல்காப்பியராய் வளர்ந்த வளர்ச்சி கடவுள் வளர்ச்சியே ஆம். நம் முயற்சியால் எழுந்ததே நம் வளர்ச்சி! நாம் அறிவோமா நம் மயிர்த்துளையின் எண்ணிக்கையை? நம் உடலமைப்பின் விசித்திரத்தினையேனும் முற்று மறிந்தோர் யார்?

வளரும் மரமும் அறியாது; நாமும் அறியோம்; சக்தியே அறியும். உலகில் எங்கு எங்கும் இந்த வியத்தகு செயலைக் காண்கிறோம், சிறுமீன் சினையினும் சிறியதான ஆலம் வித்தும் பெரியதொரு மரமாய் வளர்ந்து அரசர்கள் தம் பெரும்படையும் உள்ளடங்கித் தங்க நிழல் தரவில்லையா? ஒரு புல்நுனைப் பனிநீர்த்துளிபோன்றதே யானையாகவும் திமிங்கிலமாகவும் பெருகவில்லையா? எங்கும் ஓரே சக்தி இவ்வாறு இயங்குகின்றது. மலையின் பெருமை திண்மை வானத்தின் பரப்பு நிறைவு நீரின் தண்மை நெகிழ்ச்சி—மின்னலின் விளக்கம் ஆற்றல்—அணுக் குண்டு வெளியிடும் பரமாணுவின் ஊழிக்கூத்து இவை எல்லாம் அந்த அற்புத சக்தியின் பேராற்றற் பெருவெள்ளம். பலநிறம் கொண்டு பலபல வடிவாய்ப் பலபல மணத்துடன் தேன்விருந்து ஊட்டும் மலர்களின் அழகே அழகு! செவ்வானத்தின் செவ் விய அழகு—மானின் மருண்ட பார்வையில் வெள்ளமிடும் அழகு—மயிலின் தோகையோடு விரியும் அழகு—பெண்ணின் ஐம்புல விருந்தாம் பேரழகு—இவை எல்லாம் அந்த அற்புத சத்தியின் அன்புவெள்ளம். இதுவே தாய்மையாய் உலகினை வளர்க்கிறது. அம்மையப்பன் என இவ்வாறு ஆற்றலும் அன்புமாய் நிறைந்த பெரும்பொருளைப் போற்றலாகாதா?

இவ்வாறு உயிருள்ள பொருளிலும் உயிரில்லாப் பொருளி லும் ஒருங்கு நிறைந்து நீக்கமற நிறைகின்ற இந்த ஒற்றுமைக் காட்சியை என் என்பது? இதனையே விசுவரூப தர்சனம் என்பர் முன்னோர். இதனை அர்ச்சுனன் கண்ணனிடம் கண்டான். கொடிய சூரபன்மனும் போர்க்களத்தில் எதிர் நின்ற முருக னிடம் கண்டான். பெருந்தேவனார் என்ற பெரும் புலவரும் காண்கிறார் இந்த ஒற்றுமைக் காட்சியை. அவர்கண்ணாக இதனை நாமும் காண்போம்.

கடலையும் தாங்கி நிற்கும் கற்றரை கண்ணுக்கும் தோன்ருது. கடலடியில் பாதாளமே என்று சொல்லப்படலாம். பரந்துகிடக்கும் பார்நிலம்—இதுவே—இம்மாநிலமே—எல்லாமாய் நிற்கும் பெரும்பொருளின் அடிநிலை செவ்விய திருவடி—சேவடி எல்லாம் நிற்பதற்குள்ள இடமே நிலம் எனப்பெயர் பெறும் சிவன் திருவடி அன்ருே? அத்தகைய நிலையான இடம் ஓரடியால் மண்ணினை அளந்தான் மாயன் என்று புராணம் பேசவில்லையா? கருத்தும் கலங்கும். ஆழத்தில் எங்கும் பரந்து மேலும் கீழும் ஒன்ருக நிற்கும் நிலம் நாம் காணும் தரையும் காணுத்தரையுமாம் இந்த நிலம். விளங்குகின்ற காட்சி மலையும் ஆழமுமாகக் கண்ணைக்கலக்கும் தோற்றம் இதே ஆற்றலின் அடிப்படை ஆனல் அங்கும் ஒரு செம்மை-- ஓர் அழகு—ஒரு தாய்மை அன்பு—தோன்றுகிறது. அகழ்வாரைத் தாங்கும் நிலம் அன்ருே அது? அறிவும் ஆற்றலுமாம் அடிப்படையில் அனைத்தும் மலர்கின்றன. ஆனல் மலர்வது தாய்மை அருள். சேவடியின் அடிப்படை நிலையையும் செம்மையாம் அழகிய இன்ப அன்பினையும் இவ்வாறு உய்த்துணர்தல் வேண்டும்.

இயங்குகின்ற அப்பெரும்பொருள்—அவன்தான். அது உடுத்துக்கொள்ளும் உடையாம். ஆடையும் படபட என அசைகின்றது; முழங்குகிறது, ஆம் நம் காதுக்கும் கேட்கிறது. சேவடியைத் தீண்டி மேலே தோன்றுகிறது. செவ்வான் ஒளியில் திகழும் நீல பொன்னுடை. அவனைப்போல அவனுடையும் அளவற்று எங்கும் விரிந்து கிடக்கிறது. பவ்வம் என்ருல் பரந்து கிடப்பது. எது அது? கடலே ஆம். அதுவே அவன் ஆடை வானைப் பாயைப்போலச் சுருட்டுவது ஒரு மாயை வித்தை. நீரை ஆடையாகச் சுருட்டிக் கட்டிக் கோலம் கொள்ளுவதும் ஒரு மாய வித்தையே. அவன் உடுக்கை உடுக்கும் கடலே ஆம். நீரால் உலகினை வாழ்விக்கும் சிறப்பும் ஆற்றலும் இங்கே தோன்றவில்லையா? என்ன ஒளி, வானநீர் இது. கருங்கடல் நீர் ஆனலும் கையில் அள்ளினல் தெள்ளத்தெளிந்த நீர்—அற்புதம்! அற்புதம்! கடலருகே நிற்கும் நம்மீது கடவுள் நீரைத் தெளித்து உள்ளமும் உயிரும் குளிர்ந்து தூய்மையாகும் படி தூவுகின்ற நீர் அன்ருே இது. இதோ இச்சிறு துளியில் சூரியனும் உலகமுமே நிழலிடுகின்றன. அழகே அழகு! மழையாய்த் தூவுகின்ற நீரும் இந்தக் கடல்நீரே அன்ருே?

அப்பெரும்பொருளின் இயக்கமும் கேட்டோம். உயிரிலாப் பொருள்கள் நின்ற நிலைக்கு மேலாக உயிருள்ள பொருள்கள் தோன்றி இயங்கி முழங்குகின்றன. அப்பெரும் பொருளின் ஆற்றலை முழங்குகின்றன. வளை—சங்கு—நரல்கிறது—ஒலிக்கின்றது. ஈதன்றோ கடலின் பெருமை! நமக்குக் கடல் தரும் பரிசில்—அப்பேராற்றல் தரும் பரிசில் இப்பொருளுலக வாழ்க்கையே. முத்தும்சங்குமாய்ப்பொருளுலகவாழ்வு பொலிவுபெற்று அழகுபெற வில்லையா ?

கடல் என நிற்பது வெறும் தண்ணீர் அன்று. இயக்கமே வடிவமானது அது. காற்றும் நீரும் கலங்கி வீசும் அலைகளால் ஒளிர்வது கடல். அந்த அலைவீசும் தூநீர்அன்றோ நம்மேல் படுகிறது. எனவே காற்றும் அங்கே தோன்றுகிறது. இயக்கமே காற்று என்ற பூதத்தின் வடிவம், உயிரிடையே தோன்றும் பஞ்சப்பிராணனும் இயக்க வடிவமே இயங்குகின்ற உயிர்களும் இங்கே முழங்குகின்றன. இயங்குகின்ற ஆட்சியின் கோலமன்றோ இவ்வாறு முழங்குகிறது? காற்றிடையே அன்றோ அந்த ஒலியும் பரவி நம் காதில் வந்துவிழுகிறது?

காற்றினும் நுண்ணிதாக அமைந்த விசும்பே இவ்வொலியலை வீசும் இடம் என்பர் இந்நாளைய மக்கள். அந்த விசும்பே இவ்வொற்றுமைக் காட்சியில் தோன்றுகிறது.

அரசர்க்கு அரசனும் பெரும் பொருளின் சங்கொலி கேட்டோம். அவன் திருவுருவம் முழுதும் தோன்றுகிறது. பருப்பொருளின் நின்றும் நுண்பொருளில் செல்கின்றோம். உருவத்தினைத் தாண்டி அருவத்தை எட்டுகிறோம். எங்கும் நீக்கமற நிறைகின்ற வெட்டவெளி—வானம்—விசும்பே அவனது திருமேனி. இந்த விசும்பு பூதாகாயமாய் மனோகாயமாய் சிதாகாயமாய் வளர்ந்தோங்கும். எந்நிலையிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணானந்த சிற்சுகோதயவிலாசம் இதுவே. வானத்தினை நீலவானத் தோற்றமாகக் கொண்டு அந்த நீலக் காட்சியே அவன் திருமேனி எனக் கண்ணுக்கரியவனைக் கண்டும் களிக்கலாம். நீலவானம் வெறுந் தோற்றம். ஆனால் அழகிய கடவுட்காட்சி. அதற்கும் உள்ளாக அவனும் அப் பெரும் பொருளின் உண்மைவடிவம் ஒளிர்கின்றது. விசும்பு மெய்யாகத் திகழ்கின்றது அது.

எங்குமாய்ப் பரந்த இப் பெருவெளியை இடமாகக் கொண்டு விளங்குபவை எத்தனை? எத்தனை விண்மீன்கள்? எத்தனை கோள்கள்? அக்கோள்களில் எத்தனை உயிர்கள்? முன் என்றும் பின் என்றும் மேல் என்றும் கீழ் என்றும் வலம் என்றும் இடம் என்றும் கற்பனைகள் பல எழுகின்றன. திசைகள் என்றும் பேசுகின்றோம். பல பல உலகக் காட்சிகள் பல உயிர்களின் தோற்றம்—அவற்றின் இயக்கம்—அவற்றின் வரலாறு—உலக வரலாறு இவ்வாறு எல்லாம் எழுகின்றன. எங்கும் நிறைந்த பெரும்பொருளின் செயற்பாடே இவை அனைத்தும் ஆயிரம் கையுடையான் அன்றோ அவன்? அப் பெரும்பொருள் அவன் கைத்திறமே இவை எல்லாம். எட்டுத் திசையும் எட்டுக்கையாக எண்டோள் வீசிநின்றாடும் கூத்து இது. திசை கையாகும் காட்சி கருத்துக்கும் எட்டாக் காட்சி. விஞ்ஞானத் துறைகள் பலவும் கூறும் கருத்தின் ஒருமைக் காட்சி இது.

கற்றரை—கருங்கடல்—கருவானம்—என்று இவ்வாறே அடுக்கினால் இங்கு ஒளி வேண்டாவா. கண்ணாகி நின்று காட்டி உள்நின்று காண்பவனும் அவனே-அப்பெரும்பொருளே. பெருந்தீச்சுடராம் சூரியன் உலகுக்கு எல்லாம் பெருவிளக்கு. பைங்கதிர் மதியம் முதலானவை அந்த விளக்கின் எதிர் ஒளிகள். இவை இரண்டாலும் உலகம் ஒளிபெற்றுக் கண்பெற்றுக் காண்கிறது. பெரும்பொருளாம் அவனும் அவையாய் எல்லாவற்றையும் காண்கிறான். பைங்கதிர் மதியமும் சுடரும் அவன் கண்கள். காண்கிறவன் அவன் நாமும் காண்கிறோம் என்கிறோம். கண்ணாக நின்று காட்டிக்காண்கிற நுட்பம் என்னே என்னே?

இயக்கம் என்றோம். முன்பின் என்றோம். இங்குத்தான் காலம் என்ற கருத்தும் பிறக்கிறது. வரலாறு பிறக்கிறது. காலமும் இடமும் கலந்த மயக்கமே உலகம். கண்ணாய் நிற்கும் சுடரும் திங்களும் காலம் காட்டும் உலகப் பெரும் கடிகாரங்கள். எனவே காலமாய் அமைந்து காலத்தையும் கடந்து அப்பெரும் பொருள் களிநடம் புரிகிறது. அவன் புரிகிறான்: இவ்வாறு இடமும் காலமுமாக எல்லாம் இதனுள்ளே—இவனுள்ளே விரிகின்றன. இயன்று வரும் படைப்பும் காப்பும் வரலாறும் இவ்வாறு முக்காலக் காட்சியாக விளங்க இப்பெரும்பொருள்

ஒளிர்கின்றது. இவன் ஒளிர்கிறான். எல்லாப்பொருளும் எல்லாக்காலமும் எல்லாக் காலநிகழ்ச்சியும் ஒருங்கே தோன்று கின்ற அற்புதக் காட்சியாக இப்பெரும் பொருள்—இவன் தோன்றுகின்ற வியப்பே வியப்பு. இயன்று வரும் பொருள் களோடு எல்லாம் பயின்று இது நிற்கிறது. இவன் நிற்கிறான். இவ்வாறு அனைத்தையும் தனக்கு இடமாகக்கொண்டு உலவி வருகிறது இப்பெரும் பொருள்; உலவி வருகிறான் இவன்.

அவை தனக்கும் தன் திருவிளையாடலுக்கும் இடமாகும் நிலை ஒன்று. தான் அவற்றிற்கு இடமாக—ஆதாரமாகும் நிலை மற்றொன்று. இது அனைத்தினையும் முடிவில் ஒடுக்கி அவைஎல்லாம் தன்னிடத்திருக்க நிற்கின்றது. இவன் நிற் கின்றான். ஒருங்கி நிற்கும் நிலையாம். ஒடுங்கியாக இவன் ஒளிர்கின்றான், சர்வசம்ஹார மூர்த்தியாக மிளிர்கின்றான். பின்னும் இவ்வாறே தோன்றி மறையும் உலகத்திருவிளையாடல் இந்த மாயாவியின் வழியே நடந்து வரும். "ஒடுங்கி மலத் துளதாம் அந்தம்ஆதி என்மனார் புலவர்" என்பர் மெய் கண்டார்.

நாராயணன் என்பதற்கு நாரம் அல்லது உயிர்ப்பொருள் களை இடம் ஆகக் கொண்டவன். அவற்றிற்கு இடமாக இருப்பவன் என்ற இருபொருள் இண்டு. இந்த இரண்டு பொருளையும் விளக்குவதுபோல இயன்றன எல்லாம் பயின்றும் அகத்தடகசியும் பெரும்பொருள் விளங்குகிறது. அவையே யாகியும் வேறே தானே ஆகியும் அவையும் தானுமாய் உடனாய்க் கலந்தும் பெரும்பொருளாம் அவன். நிலைத்து நிற்கிறது. அவன் நிற்கிறான். அவையே ஆகி நிற்கும் நிலையும் உடனாகி நிற்கும் நிலையும் இதுவரை கூறப்பெற்றன. "என்னை இன்றி நீ இல்லை" என்று ஆழ்வார் பாடுவதன் பொருள் இவ்வாறு விளங்குகிறது. யான் இல்லையானால் அவன் மூளி.

உயிரில் பொருள்கள் இவனின்றி இல்லை உயிர்களும் இவ னின்றி இல்லை இவற்றினைப் படைப்பவனும் காப்பவனும் அழிப்பவனும் மறைப்பவனும் இவர்களை அருள்பவனும் அப் பெரும்பொருளாம் முதல்வனே. பெரும் பொருளின்றி ஒன்றும் இயங்குவது இல்லை. இப்பொருள் அறிவிலாப் பொருளாக இருத்தல் இயலாது. சிற்றறிவுடைய பொருளாகவும் இருத்தல்

இயலாது. பேரறிவுடைய பொருளாதல் வேண்டும். இந்த அறிவு நாம் அறிந்த சுட்டறிவு அன்று. அனுபவமாய் விளங்கும் மெய்யுணர்வே இங்கு வேண்டும். சித்து வடிவம் இது. அனைத்து உணர்வையும் இயக்கி வைக்கும் இப்பேருணர்வு உணர்வின் தலையாய் மணிமுடியாய் அனைத்துணர்வின் பிழம்பாய் விளங்குதல் வேண்டும். மனிதன் தன் அறிவினைப் பாராட்டிக் கொள்கின்றான் ஆதலின் எல்லாம் ஆய் விளங்கி ஆளும் இப்பொருளை அவன் எனப் பேசுதல் மனிதப்பிறப்பின் இயல்பு. பேருணர்வுப் பிழம்பினை வேத முதல்வன் என்ப. அனைத்து அறிவு நூலுக்கும் இவனே முதல்வன் என்று எங்கு உள்ளாரும் கூறுவர். "சாஸ்திர யோனித்வாத்" என்று பிரஹ்ம சூத்திரமும் கூறவில்லையா? எத்தகைய அறிவும் அவனிடமே அவனாக முடியும் "கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழா அர் எனின்" என்பர் திருவள்ளுவர். எல்லா வேதங்களின் ஒற்றுமை இங்கு விளங்குகிறது.

ஆண்டவன் எண்வடிவினன் என்பர். இக்கொள்கை இது வரைகூறிய உண்மையையே வற்புறுத்துகிறது எனலாம். நிலம் என்பது பிருதிவிஆம். காற்றிலையும் கடல் என்பது அப்புவும் வாயுவும்ஆம். சுடர் என்பது சூரியனை அன்றித் தேசசும் ஆம். விசும்பு என்பது ஆகாசம் ஆம். இவ்வாறு பஞ்ச பூதமுமாய் ஆண்டவன் அமைந்துள்ளான் என்பது கூறப் பெற்றது. திங்களும் கதிரவனுமாக அவன் விளங்குகிறான் என்பதும் சுட்டப்பெற்றது. இயன்ற எல்லாம் ஆம் உயிர்வகை என்னும் இயமானனாகவும் இறைவன் நிறைந்துள்ளான் என்பதும் விளக்கப்பெற்றது. எனவே எண்வடிவினன் என்ற உண்மை பேசப்பெற்றுள்ளது.

"எல்லாமாய் மாறிவருவனவற்றின் அடிப்படையாய் உள்ளான். அவன் என அவனது சத்துநிலையாம் உண்மை நிலையும் அனந்தமாய் முடிவிலாது நீக்கமறநிறைகின்ற பரிபூரண நிலையும் கண்டோம். வேதமுதல்வன் என்பதனால் சித்துநிலையாம் அறிவுநிலை விளங்குகிறது. ஆனந்தநிலையாம் இன்ப நிலையும் கூறுவதே இங்கு முடிந்த முடிவு. சத்தியம் ஞானம் அனந்தம் பிரஹ்மம் என்றும் சத்சித் ஆனந்தம் என்றும் கூறப் பெறும் உண்மைகள் இவ்வாறு இங்கே வற்புறுத்தப் பெறுகின்றன. உண்மை எங்கும் ஒன்றாகத்தானே விளங்கும்.

811

இன்பம் எங்கே? அடியின் செம்மையும் இயக்கத்தின் அருளும், கருவினைத் தாய் காத்தல்போல் காக்கும், அன்பும் இன்பத் திருவிளையாடல்களே ஆம்- பிரஹ்மானந்தத்தைக் கூறவந்த உபநிடதங்கள் அரசன் இன்பம், பேரரசின் இன்பம், தேவ இன்பம் என்று படிப்படியாய் இன்பம் உயர்வதுகாட்டி மேலும் முயன்று உயரமுடியாதவாறு எல்லாமாய் முற்றிநிற்கும் இன்பமே கடவுள் இன்பம்என முடிக்கக்காண்கிறோம். கட்டற்ற தட்டற்ற அதிகார நிலைகளின் இன்பங்களாக இவை உயர்ந்து வருமாறு உபநிடதம் அமைந்திருப்பதைக் காண்கிறோம். பேரின் பத்தைக் குறிக்கத் தட்டற்று உருளும் ஆக்ஞா சக்கரம் கொண்டு திகழும் திகிரியோனாக இவ்வாறே ஆண்டவனைக் காண்கிறார் பெருந்தேவனார். தட்டற்று விளங்குகிறது. அச் சக்கரம். அரசன் இறைமையை ஒளி எனப் பேசவில்லையா வள்ளுவர்? ஆனால் எப்போது இதன் ஒளிவிளங்கும்? ஈதொரு சிறப்பு ஒளி. தீமை அற்றொழிய நன்மையே இன்பமாய் வெள்ளமிகும்போது ஒளிர்கின்றது இந்தக் கடவுளாணை, எனவே இன்பமும் இவ்வாறு விளக்கப்பெறுகிறது. இந்த இன்பம் அன்பாய்ப் பாய்வதன்றோ தீதற விளங்கும் நிலை.

எண்வடிவமாம் காட்சி-சச்சிதானந்த வடிவம்-என்ற இவை எல்லாம் உலகமும் உயிரும் உடலாய்க்கொண்டு அவற்றின் உயிராய் விளங்கும் இந்தப் புதிய கடவுட் சமுதாயத்தின் ஒற்றுமை விளக்கத் தோற்றமாய், அண்டப்பேரரசின் இன்பப் பேரொளியாய், இறைவன் கோலத்தினைக் காண்கிறார் பெருந் தேவனார். உயிர்க்கு உயிருமாய் இருக்கின்றான் அவன். உயிருக்கு உடலுமாய் அமைகின்றான் அவன், மன்னன் உயிர்த்தே மலர்தலையுலகம் என்பது பழைய கொள்கை. உயிரெலாம் சென்றுலவும் உடலும் ஆய் அரசன் விளங்குவது கம்பன்கண்ட புதுக்கொள்கை. கடவுட் பேரரசினிடம் இந்த இரண்டு தன்மையும் விளங்குதலான் அன்றோ உயிர்களுக்கு உடலாயும் உயிர்க்கு உயிராயும் இறைவன் உள்ள நிலைமையைப் பெருந் தேவனார் குறிக்கின்றார். குடியரசும் முடியரசுமாய் நிற்கின்ற நிலையின் பெருமையே பெருமை. இத்தனை கருத்தினையும் கடவுட் காட்சியில் உள்ளடக்கி உயிர்ச் சமுதாய கடவுள் ஒற்றுமையாகவும் உலக வரலாற்றொருமையாகவும் இதனைப் பெருந்தேவனார் காண்கின்ற சிறப்பினைச் சங்கப்பாடலில் சிறப் பாகவே கூறலாம்.

மாநிலம் சேவடி ஆக, தூநீர்
வளை நரல் பவ்வம் உடுக்கை ஆக,
விசும்புமெய் ஆகத் திசை கை ஆக,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்று அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

(நற்றிணை-கடவுள் வாழ்த்து)

திகிரியான் என்பது எழுவாய் அறிந்ததே எழுவாய் வருதல் இயல்பு. அதனைப்பற்றிப் புதியதாகக் கூறுவதே பயனில்லை. திகிரியோன் அறிந்த பொருளாவது எப்படி? நாம் அறிந்த அற்புத இயற்கைச் சக்தியே எங்கும் தன் ஆணையைச் செலுத்திவருகிறது. ஆதலின் இந்த ஆணை நாம் அறிந்தது ஒன்றே ஆம் ஆனல் பெருந்தேவனார் காட்சியில் இந்த ஆணை தீதற விளங்குவதாகத் தோன்றுகிறது. அவர்கண்ட காட்சி; அவர் அறிந்த உண்மை தீமை அறுதற்காக விளங்குவது தீமை அறுதலால் பொழிவுபெற்று விளங்குவது தீது அற்று அற்றுவர விளங்கிக் கொண்டே வருவது என்று பொருள்படும் இத்தொடர், நம் அனுபவத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளலாம். இயற்கைத்திருவிளையாடல் இவ்வாறு தீதறுத லோகி இன்பவிளக்கமாதலையே முடிந்த முடிபாம் பயனுகக் கொண்டது என்று தாம் அறிந்த உண்மை வற்புறுத்து கின்ருர். இந்தத் திகிரியோனே வேதமுதல்வன் ஆக ஆக ஆகப்பயின்று, அசத்தராகிய முதல்வன் என்று முடிக்கின்ருர் வேதமுதல்வன் ஆண்டவனது ஸ்வரூப இலக்ஷணமாகவும் அதற்குமுன் கூறப்பெறுபவை ஆண்டவனது தடத்த இலக்கணமாகவும் கொள்ளலாம். நாம் அறிந்த நல்ல இன்ப் இயற்கைச் சக்தியே அத்தகைய தடத்த இலச்சணமும் சொரூப இலச்சணமும் உடையதாகக், கூறப்பெறும் பொருள் என முடிக்கின்ருர் பெருந்தேவனுர்.

இப்பாட்டின் சொற்ருெடர் அமைப்பினையும் பாவோசை நயத்தினையும் துய்த்துணர்ந்து இன்புறுதல்வேண்டும். "மாநிலம் சேவடியாக" என்பதனை மூன்று சீராய்க் கூறினுர் புலவர். மா எனவே பெருமை தோன்றுகிறது. நிலம் என நிலைநிற்றல்

விளங்குகிறது. அடியின் செம்மைக்கு ஏற்ப நிலத்தின் மா என்பதால் வளந்தரும் பெருமை குறிக்கப்பெறுகிறது. மா சே என நெடில் பெருமையை நீட்டிக்காட்டுகின்றது. மாநிலத்தினும் பெரிதாய்ப் பரந்துதோன்றுகின்ற கடலின் இயக்க ஆற்றலையும் அன்பினையும் பெரிதும் ஈடுபட்டுக் கடல் பரந்து இருப்பதுபோல ஐந்து சீராகக் கடலினைப் புனைந்துரைக்கின்றார். சங்கின் ஒலி வளைநரல் என்ற ஒலியாகக் கேட்கின்றது. தூநீர் என நெடிலாகவும் வளைநரல் எனக் குறிலாகவும் பவ்வம் என வகரத்தோடொன்றுபட்ட இதழ் ஒலிகளாகவும், உடுக்கை என வல்லோசையாகவும் இவ்வாறு பலவற்றின் கலப்பொலியாக அலைகடல் ஒலி பாட்டில் அமைகிறது. பருப்பொருளின் நின்றும் நுண்பொருளுக்குச் செல்வார் விசும்பு மெய்யாக என இருசீரில் வன்மை மிக்குத் தோன்றுதபடி மென்மையும் இடைமையுமாம் அருவநிலை தோன்றக்கூறினார். எல்லாமாய் இயங்கும் நிலையை வற்புறுத்த மேலும் இருசீரில் திசை கையாக என்றார். தொழில் செய்வதன்றோ கை திசைகை என வல்லெழுத்து இகர ஐகார ஒலிகளோடு இயைந்து, தொழிலொலி முடிவின்றிப் போவதனைக் காட்டுமாறு செய்தார். சந்திரனது அழகில் ஈடுபட்டு இருசீரால்கூறினார். ஒப்புயர்வற்ற சூரியனை அடைவயேதும் இன்றிச் சிடுசிடுஎன ஒளிவிட்டெரியும் தீயின் நினைப்பும் சுடு விளக்கத்தின் நினைப்பும் வரச் சுடர் என்று ஓரே அசையில் கூறியமைந்தார். மதியமும் கண் ஆனாலும் உண்மையில் உலகுக்கு ஒருகண் சுடரே எனக்குறிப்பார்போலச் சுடர்கண் என ஒருசீராக்கினார். உம்மையும் கொடுத்திலர்; தனி நிற்பது சுடர். அதனால் விளங்கி அதனோடு தொடர்ந்தெண்ணப்படுவது மதியம் என்பது போலக் கூறுகின்றார். வேதமுதல்வன் என்ற என்ற உண்மையைத் தனியடியாக்கினார். நாம் விரும்பும் இன்ப நிலையை நம்மையடக்கியாளும் நன்மை பெருக்கும் ஆணையாகக் கூறி முடிக்கின்றார். இத்திகிரியின் சிறப்பியல்பு தீதற விளங்குதல் எனச் சிறப்பித்தார்.

மாநீர் என்பதனோடு கடலின் தொடர்பு விளங்க அந்த அடியிலேயே தூநீர் என எதுகை தோன்றக் கடலைப்பாடத் தொடங்குகின்றார் பெருந்தேவனார். கடலைப் புனைந்துரைக்கும் இரண்டாம் அடியில் வேறொன்றன் தொடர்பும் வேண்டாமையால் மோனையோ எதுகையோ வரப்பாடினார் இல்லை.

அருவத்திற் புகுதலின் உருவத்தோடு ஒட்டிவரத் தொடுக்க வில்லே. விசும்பும் திசையும் என்ற இரண்டு நிலேயுமாகப் பிரிந் தாலும் ஒன்றெனக்கொள்ள எதுகை நயம்கொண்டு ஒன்றுபடுத் தினர். விசும்பில் செல்லும் ஒளிகள் என ஒற்றுமைப்படுத்த விசும்பொடு பசுங்கதிர் என எதுகைத் தொடைவரப் பாடினர். சுடர் என வேறு பிரித்து உயர்த்துகிருர். "அனைத்தும் அதற்கு இடமாம்; அனைத்திற்கும் அது இடமாம்" என்ற வேற்று நிலேயின் அடிப்படை ஒற்றுமையை இயன்றன பயின்று என வரும் எதுகை நயத்தோடு "பயின்றகத்து" என ஒருசீராக்கிப் பாடுகிருர். இயன்றன பயின்று நிற்றல் படைத்தல் காத்தல் என்ற இரண்டு நிலேயில் அகத்தடக்கல் அழித்தல் என்ற ஒரு நிலேயில் என்பதும் இவ்வாறு சுட்டப்படுகின்றது, இயன்றன பயின்றபோதும் அகத்துவைத்துக் காத்துக் கொண்டே உள்ளன என்பதும் இத்தொடர்பால் விளங்குகிறது. வேத முதல்வன் என்ற நிலேயும் தீதற விளங்கிய திகிரியோன் என்ற நிலேயும் எழுவாயும் பயனிலேயுமாய் நிற்கின்ற தொடர்பினே எதுகைத் தொடையாலும் ஒன்றுபடுத்தி விளக்கி வற்புறுத்து கிருர். தீதற விளங்குவதே திகிரியின் சிறப்பியல்பென்பதனே வற்புறுத்தி இரண்டும் மோனேயாய் அமையப் பாடுகின்ருர் பெருந்தேவனர். திகிரியான் என ஒரு சீரால் கூறத்தக்கதனேத் தம் ஈடுபாடும் அதன் பெருமையும் தோன்ற இருசீராக்கித் திகிரி யோனே எனநீட்டுகின்ருர். இவ்வாறு பொருளும் பா ஓசையும் அமைந்திருப்பது ஓரழகாம்.

விசுவரூபம்

உலகமே உருவம்ஆக யோனிகள் உறுப்ப தாக
இலகுபேர் இச்சா ஞானக் கிரியையுட் கரணம்ஆக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினே ஆக்கிஐந்து
நலமிகு தொழில்க ளோடும் நாடகம் நடிப்பன் நாதன்.

(சிவஞானசித்தியார் ஐந்தாஞ்சூத்திரம் பா-7)

815

அணிக்கலை

திரு. கே. இராமலிங்க முதலியார் அவர்கள், M. A.,
நகராட்சி ஆணையர், திருச்சிராப்பள்ளி.

மனித வாழ்விலே முதல் இடம்பெற்ற கலை அணிக்கலையே ஆகும். இக்கலை வரலாற்றுக் காலத்திற்கும் மூந்தியது என்கிறார்கள். மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளவும், தட்ப வெப்பநிலை தன்னைத் தாக்காது காக்கவும், மனிதன் உடுத்துக் கொள்வதற்கான ஆடைகளை நெய்யத் தெரியாதிருந்த அந்தக் காலத்திலேயே அணிக்கலையிலே அவன் மூளை சென்றது என்று தெரிய வருகிறது

உடுத்தத் தெரியாவிட்டாலும், ஆடைவாங்க முடியாவிட்டாலும், பலநிற மணிகளாலே அணிகலங்கள் செய்து, காதிலும் கழுத்திலும் விரல்களிலும் நிரம்ப அணிந்து கொள்ளுகின்ற இக்காலத்துக் குருவிக்காரர்களை, அவர்களிலும் ஆண்களைப் பார்க்கும்போது ஆடைக்கலைக்கு முன்பே அணிக்கலை தோன்றியிருக்கவேண்டும் என்று கூறுவது பொருத்தமாகக் காண்கிறது. பற்றும் பற்றாத சிறு கோவணத்துண்டை மட்டும் அணிந்து கொண்டு, கழுத்தும் மார்பும் காதும் விரல்களும் நிறைய மணி அணிகலங்களை பூண்டுகொண்டு இருக்கும் குறவர்களைக் காட்டிலும் இந்த உண்மையை விளக்க வேறு சான்று தேவையில்லை அல்லவா?

அக்காலம் பழங் கற்காலம் என்கிறார்கள். அப்போது மனிதனுக்குப் பயிர்த்தொழில் தெரியாது. விலங்குகளைப் பழக்கி வேலைக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் அறியான். உணவுப் பண்டங்களைச் சமைக்கவும் சேமித்து வைக்கவும் மண்பாண்டங்கள் வனைவதற்கும் தெரிந்துகொண்டான் இல்லை. ஆனால், அவ்வளவு பழைய காலத்திலேயே எலும்புகளாலும், பற்களாலும், கிளிஞ்சல், சிப்பிகளாலும், உலர்ந்த பழக் கொட்டைகளாலும், பலநிறக் கற்களாலும், இறகுகளாலும், மாலைகள் கட்டித் தலையிலும், கழுத்திலும், கைகளிலும், கால்களிலும், கைகால் விரல்களிலும் அணிந்துவந்தான்.

பண்டைக்கால மனிதன் வசித்துவந்த குகைகளிலே காணப் பெற்ற எலும்பு அணிகலங்களின் மீது ஓவியக்கோடுகளும் காணப்பெற்றன. இந்தப்பொருள்கள் எவ்வளவு காலத்திற்கு என்று எளிதில் சொல்ல இயலாது. ஆனால், சில பழம்பொருள் ஆராய்ச்சியாளர்கள், அப்பொருள்கள் முப்பதாயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டனவாக இருக்கவேண்டும் என்று கணக்கிட்டுக் கூறுகிறார்கள்.

இதனால் பழங்காலத்து மனிதன் அணிகலங்கள் செய்து அணிந்துகொள்ள வேண்டும் என்று முதன்முதலில் அவாவிய போது அவனுக்கு அந்த அணிகலங்களை அமைக்க உதவியாக இருந்தன எலும்புகள் என்று தெரியவருகிறது. இதில் ஒரு பெரிய உண்மை விளங்குவதை எடுத்துக்கூறாமல் இருப்பதற் கில்லை. இந்த எலும்பு அணிகலங்களும் இந்தியாவை ஒட்டிய பகுதிகளிலேயே கிடைக்கப் பெற்றிருப்பது அவ்வுண்மையை வலியுறுத்துகின்றது. மனிதன் கடவுள் உண்டு என்பதை உணர்ந்து அருவுருவமான அப்பொருளுக்கு உருவமும் பேரும் கற்பித்து, அவ்வுருவத்திற்குத் தான் சூட்டிக் கொண்டது போலேயே எலும்பு மாலைகளைச் சூட்டினான் என்பதே அந்த உண்மையாகும். எலும்பு மாலை அணிந்த கடவுள் உருவம் சிவன் உருவம் என்பது வெளிப்படை. எனவே, சிவவழிபாடே மனிதன் முதன்முதலில் மேற்கொண்ட கடவுள் வழிபாடு என்று புலனாகிறது. பின் அச்சிவமாம் பெரும் பொருளுக்கு வேறு பல அணிகலங்களையும் சூட்டி வழிபட்டானாயினும் எலும்பு அணியை இன்றுவரையில்கூடச் சிவபெருமானுக்கு உரியதாகவே கொண்டு இருக்கிறான். நம்நாட்டிலோ அல்லது பிறநாட்டிலோ இறைவனுக்கு அமைத்துக்கொண்ட திருவுருவங்களின் அணி கலங்களிலே எலும்பு அணி எந்த உருவத்திற்கும் உரியதாக இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. உலோகங்களாலும் ஒளி நிறக் கற்களாலும் அணிகலங்கள் செய்ய மனிதன் கற்றுக் கொண்ட காலத்திலே அமைத்து வணங்கிய இறைவன் உருவங் களுக்கு அந்த உலோகங்களாலும் கற்களாலுமே அணிகலங்கள் செய்து பூட்டியிருப்பான். இச்செய்திகள் சிவவழிபாடு எவ்வளவு மிக மிகப் பழையது என்பதைக் குறித்துக் காட்டுவதாகின்றன.

மனிதன் தன்னைக் கீழ்க்கண்ட மூன்றுவகையிலே அணி செய்துகொள்ளுகிறான் என்று சொல்லலாம்.

முதல்வகை:- உடம்பையே ஒரு அணிகலன்போல ஆக்கிக் கொள்வது முதல்வகை. ஒடுங்கிய இடை அழகுதருவதாமெனக் கருதி, அதை வரித்துக்கட்டிக் கட்டிச், செயற்கை முறையிலே அதனை ஒடுக்குவது; பற்கள் முத்துப்போல் ஒத்த வடிவினவாக ஆதல்பொருட்டு, அரம்கொண்டு அவற்றை அராவிவிடுதல்; காதின் மடல்களில் அணியும் நகைகள் தொங்கி ஊசலாடுவதற்காகவேண்டித் துளைகளைப் பெரிதாக்க இரும்பு வளையங்களை மாட்டித் தொங்கவைத்தல் முதலியனவும் இவ்வகையால் அடங்கும். அப்படி அழகியதொரு அணிகலன்போலவே அமைந்த உடம்பினை நக்கீரனர் தமது திருமுருகாற்றுப் படையில்,

"கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர்தீர்மேனி"

என்று சிறப்பித்துக் கூறுகிறார்.

"கைக்கொண்டு செய்யப் பெறுகின்ற அணிகலங்களைப் போலாது, கையால் செய்யப்பெறாமல், இயற்கையிலேயே அமைந்ததும், அழகு மிக்க அழகு உடையதும் உயர்ந்த பொன்னால் ஆகியது போன்றதும், தொலைவிலே இருப்பவரும் அதன் ஒளியைக்கண்டு போற்றுதற்குரியதும், குற்றமற்றதுமான மேனி" என்று மேற்கண்ட மூன்று வரிகளில் நக்கீரர் கூறுகின்றார்.

இரண்டாவதுவகை:- தோலின்மீது தழும்புகளை உண்டாக்குவதாலும், பச்சைக் குத்திக் கொள்வதாலும், வர்ணங்களைப் பூசிக் கொள்வதாலும் உடலை அணிசெய்து கொள்ளுதல் இரண்டாவது வகை. இக்காலத்தில் இதழுக்குச் செவ்வண்ணம் தீட்டிக்கொள்ளல், கைவிரல் கால்விரல் நகங்களுக்கும் அவ்வண்ணமே செய்தல், முகத்திற்குப் பனிபோன்ற மெழுக்குகளைத் தடவிக்கொள்ளல், பலவகை மணம்பொருந்திய பொடிகளை ஒத்திக்கொள்ளல், முதலிவையும் இத்தலைப்பில் அடங்கும். நம் நாட்டின் பழைய முறைகளான, புருவத்திற்கும் கண்ணுக்கும் மை இடுதல். கைகால் விரல்களுக்கும் உள்ளங்கால் உள்ளங்கைகளுக்கும், காலடியின் சுற்றுப் புறங்களுக்கும் மருதாணித் தழையை அரைத்து அப்பிச் செந்நிறம் ஊட்டுதல் முதலியவும் இவ்வகையைச்சேரும்.

மூன்ருவதுவகை:- உடலின் உறுப்புக்களில் அணிகலங்களைப் பொருத்துதல் மூன்ருவது வகையாகும். உலோகங்கள், ஒளி நிறக்கற்கள் முதலியவற்ருலும் பிறவற்ருலும் அணிகலங்கள்செய்து தலையிலும், கழுத்திலும், இடுப்பிலும், கைகளிலும், கால்களிலும் கட்டிவிடுதல்; காதிலும் மூக்கிலும் துளைகள் செய்து தொங்கவிடுதல், செருகிவிடுதல், போன்றவை இத் தலைப்பில் அடங்கும்.

அணி செய்வதற்காக உடுக்கும் ஆடைகளும் இப்பகுதிக்கு உரியவாகுமாஞலும் அவை தனியே ஆடைக்கலை என்ற தலைப்பில் பேசுவதற்கே பொருத்தமுடையவாகும். நம்நாட்டில் மூக்குக் குத்துவது, காது குத்துவது ஓர் சடங்காக வைத்து செய்யப்பெறுகிறது. காதணிவிழா என்ற பெயராலும் கர்ண பூஷணம் என்ற பெயராலும், பெரும் பணம் செலவுசெய்து இச்சடங்குகளை நடத்துபவர்களும் உண்டு. நம்நாட்டு நாகரிகத்தை ஒத்த நாகரிகமுடையதும், சுமத்ரா, ஜாவா தீவுகளைச் சேர்ந்ததுமான மேலநேசியாவிலே, மூக்குத்தண்டில் துளை போடுவதை ஒரு சடங்காக நடத்தி, அந்தத் துளையின்வழி உயிர் உள்ள நாகப் பாம்பையும் நுழைத்து இழுக்கிருர்கள் என்று, 'நியூ யூனிவர்ஸல் என் ஸைக்ளோமீடியர்' என்ற ஒரு புதுப் பல்கலைக் களஞ்சிய ஆங்கில நூலில் எழுதப் பெற்றிருக்கிறது. அப்படிப் பாம்பு நுழைக்கப்பெருத மூக்குத்துளையுடையவர்கள் இறந்துபோஞல், அவர்களுக்கு மறு உலகத்தில் தொல்லை ஏற்படுமாம். அங்ஙனம் அவர்கள் தொல்லைப்படாதிருப்பதற்காக வேண்டி, அவர்களது பிணங்களுக்கு இச்சடங்கைச் செய்து பிறகே அடக்கம் செய்வது வழக்கம் என்று அதேநூல் கூறுகிறது.

ஏதாவது ஒரு தெய்வத்தின் மனநிறைவுக்காக ஆண்பிள்ளைகளுக்கும் மூக்குக்குத்துவது என்றும், அப்படிக் குத்தாவிட்டால் கெடுதிநேரும் என்றும், நம் நாட்டிலும் சில பகுதிகளில் நம்பப் பட்டு வருகிறது. பிள்ளைகள் தங்காமல் இறந்துபோஞல் பிறகு பிறக்கும் ஆண்பிள்ளைக்கும் மூக்குக் குத்திக் குப்பையில் புரட்டிக் 'குப்பன்' என்று பெயரிடுகிற வழக்கம் இன்னமும் நம்மை விட்டபாடில்லை. மூன்ருவது பிறக்கும் பிள்ளைக்குக் கட்டாயம் மூக்குக் குத்தவேண்டும் என்னும் பழக்கம் இன்னும் சில இடங்களில் இருந்து வருகிறது. பெண்கள் ஒவ்வொரு

காதிலும் 12, 13, துளைகள்போட்டு, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வகையான நகையை அணிந்துகொள்ளும் ஆசை நம்நாட்டில் பெண்களிடம் இக்காலத்திலும் இருக்கப் பார்க்கிறோம். வெளி நாட்டுப் பெண்களில் ஒரு சிலர், ஒருகாதில் ஐம்பது துளைகள் போட்டு ஐம்பதுவகை அணிகளை அணிவதாகவும் அறிகிறோம்.

மேற்கண்ட மூன்றுவகைகளில் உடலை அணிசெய்து கொள்ளுவதற்குப் பல காரணங்கள் சொல்லப்பெறுகின்றன. அவற்றில் சிறப்பாக ஆறு காரணங்களைத் தொகுத்துக் கூறு கின்றது ஒரு சமுதாய அறிவியற் களஞ்சிய ஆங்கில நூல். அந்த ஆறு காரணங்கள் பின்வருமாறு:-

1. ஆண்பாலர் பெண்பாலரையும், பெண்பாலர் ஆண் பாலரையும் கவரவேண்டும் என்பதே அணிகலம் அணிவதின் ஒரே நோக்கம் என்கிறார் வெஸ்டர் மார்க் என்ற ஒருமேல் நாட்டு அறிஞர்.

தன் கொள்கையை வலியுறுத்தும்பொருட்டு அவர் சொல் கிறார்; இளமை ததும்பும் பருவத்தில்தான் அணிசெய்து கொள்ளும் பழக்கம் உச்சநிலையில் இருக்கிறது என்று.

2. பேய் பிசாசுகளைத் தவிர்க்கவே மனிதன் அணிகலன் பூணுகிறான் என்பது மிகப் பழைய கருத்து.

தாயத்துக்கள், குளிகைகள், குழந்தைகளுக்கு நரிப்பல் முதலியன கட்டுகின்ற பழக்கம் இன்றைக்கும் இருந்து வரு கின்றது. ஐம்படைத்தாலி அணிவதும் காப்பாகவே என்று இலக்கியங்களில் இருந்து அறியலாம்.

3. ஒருவரது இனம், செல்வவளம், அலுவல், பட்டம், வாழ்க்கைநிலை இவற்றைக் காட்டுவதற்கே அணிகலங்கள் அணியப்பெறுகின்றன என்பது இன்னொரு கருத்து. இன்றைக் குக்கூட ஒருவர் போட்டுக்கொண்டு இருக்கும் நகைகளைக் கொண்டு அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவரென்று ஓரளவு கண்டு கொள்ளலாம். ஆனால், படித்தவர்களிடையே நகைகளைக் கொண்டே இத்தகைய வேறுபாட்டைக் காணமுடியாது.

மணமான பெண்கள் என்று அறிந்துகொள்ள இன்றைக்கும் அவர்கள் கழுத்தில் அணியும் தாலி துணையாக இருக்கின்றது. காதோலையும் கரிமணியும், காலாழியுங்கூட மணமானவர்கள் அணியும் பொருள்கள் என்று கருதப்பெற்றுவந்தன. ஆனால் இக்காலத்தில் கணவனை இழந்தவர்களும் காதில் கம்மல், தோடு முதலியவற்றை அணிந்து கொள்ளுவது வழக்கமாய் விட்டது. முற்காலத்தில் கணவனையுடைய மகளிரே காதோலை அணிந்து இருந்தார்கள் என்பது ஆனந்தலகரி என்ற ஓர் அரிய நூலில்வரும் ஒரு பாட்டினாலும் தெரியவருகிறது. அப்பாட்டின் பொருள் வருமாறு: "பிரம்மன் இந்திரன் முதலிய தேவர்களுடைய உணவெல்லாம் நரைதிரை முதலியவற்றைத் தவிர்க்கும் நல்ல அமுதமேயாகும் அல்லவா? ஆனால் ஒருவரும் தங்கவில்லையே? உன் கணவன் சிவன் உண்டது நஞ்சு அல்லவா? நீடூழி வாழ்கின்றானே! உன்னுடைய காதோலையின் சிறப்பல்லவா இது?" இக்கருத்துள்ள பாட்டு வருமாறு.

உ

"ஞானசம்பந்தம்"

அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையானது.

ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0.

செயலாளர்,
"ஞானசம்பந்தம்" காரியாலயம்
தருமபுரம், மாயூரம் P.O.

ஓ21

வேதப்பொருள்

பிர்மஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L.,
தருமபுர ஆதீனக் கல்லூரித் தலைவர்.

"தபோதனர்" "மானதனர்" என்பதுபோல் "வேததனர்" என்பது விப்ரர்களின் பெயர். அவர்கள் வேதத்தையே தம் சொத்தாக உடையவர்கள். ஆதலால்தான் அந்தணர்கள் வாழ வேண்டும் என்று பிரார்த்தனைகளில் சொல்லப்படுகிறது;

गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यम्

"கோப்ராம்ஹணேப்யச் சுபமஸ்து நித்யம்" என்று. வேதம் ரக்ஷிக்கப்பட்டால் வேதத்தினால் ஓதப்படும் யக்ஞம் முதலிய கர்மாக்கள் ரக்ஷிக்கப்பட்டு உலகம் க்ஷேமத்தை அடையும். இந்தப் பொறுப்பு பிராமணர்களிடம் வைக்கப்பட்டிருந்தது. ஆதலால் அந்தணர்கள் வாழவேண்டும் என்று பிரார்த்திப்பது வழக்கம். காளிதாஸரும்,

सरस्वती श्रुतिमहती महीयताम्

"ஸரஸ்வதீச்ருதிமஹ்தீமஹீயதாம்" என்பதால், எந்தப் பாஷை வேதத்தினால் பெருமைபெற்றதோ அந்தப் பாஷை லோகத்தில் போற்றப்படட்டும் என்றார்.

அந்த வேதம் விப்ரகுலங்களில் பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய் வர்ணத்திலோ ஸ்வரத்திலோ இம்மி அளவு கூடப்பிசகாமல், பெரிய அரிய தனமாகக் காப்பாற்றப் பட்டு வந்திருக்கிறது.

வேதத்தின் உரைக்கு "பாஷ்யம்" என்றுபெயர். விஜய நகரராஜ்ய காலத்தில் ஸாயணாசாரியரால் வேதபாஷ்யம் எழுதப் பட்டது. நான்கு வேதங்களுக்கும் எழுதப்பட்டது. அதற்கு முந்திய உரைகளைப்பற்றி அதிகம் தெரியவில்லை. வேங்கட மாதவீயம் என்ற ஒரு பழைய உரை கிடைத்தது. சமீபத்தில்

822

அச்சிடப்பட்டிருக்கிறது. பாணினிக்கு முந்திய யாஸ்கர் சுமார் 3000 வருஷங்களுக்குமுன் வேத மந்திரங்கள் சிலவற்றிற்கு வியாக்கியானம் செய்து வழிகாட்டியிருக்கிறார். வேதநிகண்டு களும் அவர் எழுதியிருக்கிறார். அவர்காலத்திலேயே வேத மந்திரங்களுக்கு அர்த்தம் புரிந்துகொள்வது சுலபமல்ல என்று தெரிகிறது,

மேல்நாட்டவர்கள் ரோத், மாக்ஸ்முல்லர், மாக்டோனல் முதலியவர்கள் வேதப்பொருள் ஆராய்ச்சியை மேற்கொண்டு உரைகளும், மொழிபெயர்ப்புக்களும் எழுதியிருக்கிறார்கள். நான்குவேதங்களும் ஜர்மன் ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டுவிட்டன.

"வேத" என்பதற்கு "அறிவேன்" என்பது பொருள். "எதை" என்றகேள்விக்கு "எது அறியத்தக்க தெல்லா வற்றிற்கும் முக்கியமாக அறியத்தக்கதோ அதை" என்பது பதில். அதுதான் பிரும்மம் "வேதா ஹமேதம் புருஷம்மஹாந்தம்" என்று சுருதி சொல்லுகிறது. பிற்காலத்தில் பிரும்மத்திற்கு அடுத்தபடியில் அறியத்தக்கது தர்மமாதலால் அந்தத் தர்மத்தை போதிக்கும் புராணாதிகளுக்கும் வேதம் என்றபெயர் வழங்கப் பெற்றது.

"வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே. வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மனா"

वेदवेद्ये परे पुंसि जाते दशरथात्मजे ।
वेदः प्राचेतसादासीत् साक्षाद्रामायणात्मना ॥

பாரதம் பஞ்சமோ வேத:

भारतं पञ्चमो वेदः ॥

என்றவாக்கியங்கள் இதற்கு அத்தாக்ஷிகள். வேதம் காரணங் கூறாமல் லோகத்தைக் கட்டளையிட்டுக் கார்யங்களைச் செய்விப் பதால் அதற்கு பிரபுஸம்மிதம் என்று பெயர்வந்தது, காரணம் கேட்காமல் உடனடியாகப் பெண்களின் கட்டளைகளைச் சிரமேற் கொண்டு கலியில் புருஷர்கள் நிறைவேற்றுகிறார்கள்

823

என்பதால் கலியில் பார்யையின் வாக்கு வேதவாக்கு என்று பரிகாசமாய்ச் சொன்னார் ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதகவி.

यत्र भार्यागिरो वेदाः ।

வேதத்தின் குறிக்கோள் என்ன என்பது அடுத்த பிரச்னை. வேதத்தின் குறிக்கோள் அல்லது வேத பிரதிபாத்யமான வஸ்து பரம்பொருள். மதுரையில் ஸுந்தர பாண்டியராக இருந்து ஸுமீனாக்ஷியுடன் அரசு புரிந்துவந்த சிவபெருமானின் பேரனான வீரபாண்டியன் காலத்தில் கண்வர் முதலிய முனிவர்கள் ஸுந்தரேச்வரரிடம் வந்து வேதப்பொருள் அறிய விரும்பினார்கள். அவர்கள் ஒருவருடம் தவம்புரிந்து பின் ஈசனைப் பார்க்கும் பேறு பெற்றார்கள்.

"வேதம் பல தேவதைகளைத் துதிக்கிறது. ஒவ்வொரு தேவதையையும் முறையே உயர்த்திப் பேசுகிறது. வேதத்திற்கு அந்தரங்கப் பொருளான கடவுள் யார்? மேலும் வேதத்தில் வழக்கொழிந்த பதங்களும் அர்த்த வாதங்களும் நிரம்பியிருக்கின்றன. இவற்றால் எல்லாம் உண்மை காணமுடியாமல் குழப்பம் ஏற்படுகிறது. ஆதலால்தான் வேதப்பொருள் அறியத் தங்களிடம் வந்தோம். வேறு யாரிடத்திலும் அதைக் கேட்டு அறிந்துகொள்வது அரிது" என்றவாறு அவர்கள் ஸுந்தரேச்வரரிடம் தெரிவித்துக் கொண்டார்கள். வேதம் பரமேச்வரனுடைய மூச்சுக் காற்று என்று சொல்லப்படுகிறதல்லவா?

பகவான் விப்ரவேஷத்தில் வெளிவந்து முனிவர்களுக்குக் கருணைகூர்ந்து வேதப்பொருளை எடுத்துக்கூற முன்வந்தார். முதலில் ஓம் என்ற சப்தத்திலிருந்துதான் லோகத்திலுள்ள எல்லா சப்தங்களும் உண்டாயின என்று உபதேசித்தார்.

அதாவது "ஓமி"லிருந்து பூ: புவ: ஸ்வ: என்ற வ்யாஹ்ருதிகளும் பின்பு காயத்ரீயும் பின்பு வேதங்களும், உபவேதங்களும் புராணேதிஹாஸங்களும், காவ்ய நாடகங்களும், சாஸ்திரங்களும் எல்லா லௌகிக சப்தங்களும்கூட வெளிவந்தன. ஓம் என்ற சப்தம் ஆகாசவெளியில் நக்ஷத்திர மண்டலங்கள் நிமிஷத்திற்குப் பலகோடி மைல்கள் விகிதம் ஓடிக்கொண்

டிருக்கும்போது உண்டாகும் அகண்ட ஆகாயம் நிறைந்த ஒரு த்வனி என்று கூறலாம்,

"ஓம் காரத்தினின்று உற்பத்தியான சப்த பிரபஞ்சம் எல்லாம் பிரும்மத்தையேதான் கூறுகிறது. அந்த பிரும்மம் இந்த ஸுந்தரநாத லிங்கத்தில் மறைவாக நிற்கிறது. சமயம் வந்தபோது வெளிப்படும்.

अस्ति यत्परमं ज्योतिः अस्मिन् लिङ्गे तिरोहितम् ।
तदेव सकलैः शब्दैः तात्पर्यविषयीकृतम् ॥
अंगानि मन्त्रास्तन्त्राणि शास्त्राणि निगमा अपि ।
अन्ततो लोकगाथा अप्यत्रैवायान्ति विश्रमम् ॥
इमा गिरः समस्ताश्च रुद्राय स्थिरधन्वने ।
इति ब्रुवाणा वाणी वः प्रमाणमकुतोभया ॥

இந்தத் தத்துவம் அம்பாளின் பிரஸாதம் இல்லையே யெனில் ஒருவருக்கும் புலனாகாது.

सर्वानुग्राहिणी शक्तिः शम्भोरनतिरेकिणी ।
तामप्रपद्य तत्तत्त्वं न शब्दैरवधार्यते ॥'

சப்தம் அம்பிகையின் ஸ்வரூபம். சப்தத்தின் மூலமல்லாமல் அர்த்தத்தை எப்படி அறியமுடியும். ஆகையால்தான் பிரும் மத்தை அறிய, பரதேவதையின் கருணை அவசியமாகிறது.

सव्यं वपुः शब्दमयं पुरारेरर्थात्मकं दक्षिणमामनन्ति ।

இந்த உபதேசத்தைச் செய்துவிட்டு மூலலிங்கத்தில் அந்தர் தானமடைந்தார் ஸுந்தரநாதர்.

8245

முக்கனிகள்

திருமதி ''குகப்ரியை'' அவர்கள்

முக்கனிகளைப்பற்றி எண்ணுந்தோறும் இவை சிறப்பாகத் தமிழ் நாட்டுக்கே உரியவைகள் என்ற எண்ணமும், இவைகளின் இனிமையும் நமது மனத்துள் எழுகின்றன. பூவும் பழமுமின்றிப் பூசனை ஏது? மலரின் நறுமணமும் மாம்பழத்தின் சுவைக்கும் ஈடு ஏது? நம்முடைய புராணங்களிலும் கனிகளும் மலர்களும் அங்கங்கே இடம் பெற்றிருப்பதைக் காண்கிறோம்.

கனியினும் கட்டிபட்ட கரும்பினும் இனியன் இடைமருதன் என்று பேசுகின்றார் நாவுக்கரசர் பெருமான். நாம் காணும், சுவைக்கும் பொருளின் இனிமையைச் சுட்டி அதனினும் இனியன் என்று பேசுகின்றார். மற்றொருவர் எம்பெருமானைக் குறித்து நாம் பாடும் பாடல்கள் எல்லாமே,

> சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய
> வந்த இருவினைக்கு மாமருந்து

என்கிறார்.

எம்பெருமானது புகழைப் பாடுவது மேலும் இனிமையாகி விட்டது அவருக்கு. கம்பர் அயோத்திமாநகரைப்பற்றிப் புகழும் பொழுது அங்கே தெய்வமணம் கமழும் பாடல்கள், சொற்பொழிவுகள் எல்லாம் நடந்துகொண்டே இருக்கின்றன என்பதை

> 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்'

என்று பேசுகிறார்.

அதாவது கனிகளிலே இனிமையைத் தவிர, கோது, கொட்டை, தோல் என்ற பெயராலே சிற்சில தள்ளக்கூடிய பகுதிகள் இருக்கலாம். ஆனால் இந்தச் செவிநுகர் கனிகளிலே அந்தப் பொருள்களும் இல்லை. அப்படியே கனிந்தகனி முழுமையும் சுவைத்துச் சுவைத்து இன்பநிலையிலே பக்திப் பெருக்கிலே ஆழ்ந்துவிட வேண்டியவைதான் என்று சொல்லுவது போல அமைந்திருக்கிறது கவிதை.

826

இத்தகைய செவிநுகர் கனிகளை ஏராளமாக நமக்கு வழங்கியிருக்கிறார்கள் நமது முன்னோர்களான சிவநேசச் செல்வர்கள். அவைகளுள் ஒன்றுதான் காரைக்கால் பேயம்மையார் நமக்கு அளித்துள்ள பெருஞ் செல்வமாகிய கவிதைக்கனி. வைணவத்திலே ஆண்டாளது பாடல்களுக்கு எத்தகைய அருமை பெருமைகளுண்டோ அதற்கும் மேலான ஒரு பெருமையைச் சிவநேசர்களிடையே வகிக்கின்றார் அம்மையார் என்றால் அது மிகையாகாது.

பரமனைப் பாடிப் பரவிய நம் நாயன்மார்களின் திருக்கூட்டத்திலே இடம்பெற்ற பக்தமணி இவர், இவரது பெருமையை வாடா மலர்களாலாகிய பாமாலைகள் இன்றும் நமக்கு எடுத்துரைத்துக்கொண்டே இருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லாவிலேயுள்ள காரைக்கால் என்னும் துறைமுகப் பட்டினத்திலே, வருடந்தோறும் ஆனிமாதத்திலே மாங்கனித் திருநாள் என்னும் விழா மிகமிகச் சிறந்தமுறையிலே நடைபெறுகிறது.

காரைக்கால் என்னும் அழகியநகரம் தமிழ்நாட்டிலேயுள்ள சிறந்ததொரு துறைமுகப்பட்டினம். அவ்வூரிலே நல்வழியிலே வாணிபம் நடத்திப் பொருள்தேடி வாழ்ந்துவந்த ஒரு குடும்பத்திலேதான் இவர் தோன்றினார். சிவபெருமானிடம் எல்லையற்ற பேரன்புபூண்ட குடும்பம் அது. சூழ்நிலையும் அத்தகையதே. தனதத்தர் என்னும் பெயர்பூண்ட இவளது தந்தையார் சித்தத்தைச் சிவன்பாலே வைத்த பெரியார். இத்தகைய சூழலிலே பிறந்து வளர்ந்தகுழந்தையாகிய புனிதவதியாருக்குக் குழந்தைப் பருவத்திலேயே சிவபெருமானிடம் அன்பு பிறந்தததில் ஆச்சர்யமென்ன?

அந்த அன்பானது இவளது உடல் வளர்ச்சியைப்போலவே நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. கல்வியிலே சிறந்த தனதத்தர் தம் அருமை மகளுக்கு அணிகள் அணிவித்து அழகு செய்ததோடு நில்லாமல் கல்வியினாலும் அழகு செய்தாராம்! தனதத்தரது வீட்டிலே ஓயாமல் சிவபெருமானது திருநாமம் ஒலித்துக்கொண்டே இருக்குமாம்! சிவனடியார் திருக்கூட்டம் வருவதும் போவதுமாகவே இருக்குமாம்! அத்தகைய பண்பட்ட வாழ்க்கை.

சிவனடியார்களது கூட்டுறவும் கல்வி கேள்விகளும் இவரது பிற்காலப் பெருவாழ்விற்கு ஒரு வித்தாக அமைந்தன. இவரது நெஞ்சிலே தோன்றிய அன்பு மெல்லமெல்ல அரும்பி மலர்ந்து கனியத் தொடங்கியது. இந்தச் சமயத்திலேதான் நாகப்பட்டினத்து உறையும் நிதிபதி என்பாரது செல்வன் பரமதத்தன் என்னும் கட்டிளங்காளையை இவளுக்குக் கொழுநனுகத் தேர்ந்தெடுத்தனர் பெரியோர்.

அறிவிலும் ஆற்றலிலும் மிக்க இப்புனிதவதி இறைவன்பால் அன்பு செய்வதற்கு இல்லறம் இடையூறென்று நினைக்கவில்லை. பரமதத்தனது கரம்பற்றி வாழ்க்கைத்துணையாகி, இல்அறத்தை நல்அறமாக்க வேணுமென்ற ஆவலுடன் மணம் புரிந்தார். தனிப்பட்டதொரு அழகிய புதிய வீட்டிலே குடிபுகுந்தனர் இம்மணமக்கள். மலரும் மணமும்போலச் சொல்லும் பொருளும்போல வாழத் தொடங்கினர்,

பரமதத்தர் தமது கடமைகளை அழகுபெறச்செய்து மேன்மேலும் பொருள்தேடிக் குவிக்கலானுர். இங்கே புனிதவதியார் மேலும் மேலும் சிவபக்தியிலே ஈடுபட்டு "இறைவனே தொண்டர் உள்ளத்தொடுக்கம்" என்ற வாக்கிற்கு இணங்க மனைக்கு வரும் சிவனடியார்களுக்கு அமுதளிப்பதிலேயே ஈடுபட்டார். உணவும் உடையும் பொருளும் அளிப்பார். அவர்களது இனிய வாழ்க்கை தெய்வமணம் நிறைந்து விளங்கியது.

*** ஒருநாள் நடுப்பகல். புனிதவதியார் அப்பொழுதே சமையல் செய்யத் தொடங்கியிருந்தார். வயது முதிர்ந்த சிவனடியார் ஒருவர் பசியினுல் வாடிக்களைத்து வந்துசேர்ந்தார். உடனேயே அவருக்கு அமுதுபடைக்க நினைத்தார் அவர். அன்னம் மட்டுமேதானிருந்தது. கறிவகைகள் ஒன்றும் செய்து முடியவில்லை. வெஞ்சனம் ஒன்றுமில்லாமல் எப்படிப் படைப்பது என்ற சிந்தையில் ஆழ்ந்தார். பளிச்சென்று தன் கணவர் காலையில் கடையிலிருந்து அருமையாக யாரோ கொணர்ந்து கொடுத்தார்கள் என்று இரண்டு மாங்கனிகள் அனுப்பியது நினைவில் எழுந்தது. உள்ளேசென்று ஒருகனியை எடுத்துவந்து பரிமாறலானுள். அடியார் உண்டு களைதீர்ந்து விடைபெற்றுச் சென்றுர். ஆயிற்று. சற்று நேரத்திற்கெல்லாம் பரமதத்தர்

528

வீட்டிற்கு வந்தார். நீராடிப் பூசைமுடித்து இலையில் உட்கார்ந் தார். உண்டி வகைகளைப் பரிமாறியபின் மாங்கனியும் வந்தது. கனியை உண்ட அவர் அதன் சுவையிலே ஈடுபட்டு எங்கே இன்னொரு பழத்தையும் கொண்டுவா! என்ருர். அவள் திகைத்துப்போனுள். பழத்தை எடுத்துவரச் செல்லுவதுபோல் உள்ளே சென்ருள். எம்பெருமானது திருஉருவின் முன் நின்ருள்.

'அம்மருங்கு நின்று அயர்வார்! அருங்கனிக்கு என் செய்வார்?' என்கிருர் சேக்கிழார்பெருமான்.

அடியவர்க்கு அளித்தேன் என்று சொல்லுவதற்குப் பயம். கொடுக்கும் பொழுது இந்த இரண்டிலே ஒன்று நமக்குண் டல்லவா? என்று எண்ணியே கொடுத்துவிட்டார். தன் கணவர் மற்ருென்றையும் கேட்கக்கூடுமென்று அவர் நினைக்க வில்லை. இப்பொழுது என்ன செய்வது! காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி வேண்டிளுள்! வேண்டிளுள்! வேண்டிய உடனே கையிலே ஒரு அழகிய மாம்பழம், மணம் வீசியது. எடுத்து வந்து அவர்கலத்திலிட்டாள். அதன் இனிமையிலே மெய்ம்மறந்து போனுர் பரமத்தர். "இது வேறுபழமன்ருே? இது ஏது" இதன் சுவை இதற்குமுன் நான்சுவையாததாகவல்லவோ இருக் கிறது. அமுதம் என்பது இதுதானே என்று எண்ணியவராய் புனிதவதியாரை நோக்கி இது ஏது? என்ருர். உத்தமியின் வாக்கிலே பொய் எழுமா? உள்ளது உள்ளபடி உரைத்து விட்டார் புனிதவதியார். அப்படியா? ஆனுல் இன்னொரு பழம் கொண்டுவா என்ருர் மீண்டும். ஒரு மாங்கனி கையிலே. எடுக்க வும் அது மறைந்து விட்டது. இந்த அற்புதக் காட்சியைச் சேக்கிழார் பெருமான்

வணிகனும் தன்கைப்புக்க மாங்கனி பின்னைக்காணுன்
தணிவரும் பயம் மேற்கொள்ள உள்ளமும் தடுமாறெய்தி
அணிகுழல் அவரை வேருேர் அணங்கு எனக்கருதி நிற்கும்
துணிவு கொண்டு எவர்க்கும் சொல்லான் தொடர்வின்றி
ஒழுகும் நாளில்

என்று பேசுகிருர்.

அருளின் அற்புதத்தைக் கண்டதும், அவர் மனந்தடுமாறிப் போனுர் என்றும், சிவபெருமானது திருவருளுக்குத்தான் தகுதியற்றவளென்று நினைத்தாரென்றும். ஆகவேதான் தெய்வ

மாகக் கருதி மனைவியுடன் வாழாமல் நீங்க விரும்பினார் என்றும் புராணம் சொல்லுவதிலிருந்து பக்தியும் ஞானமும் பக்குவமுள்ளவர்களுக்குத்தான் என்ற உண்மை இனிது விளங்குகிறது.

இதன்பின் நடந்தவைகளைப்பற்றிப் பேசவேண்டுவதில்லை. தெய்வத்தின் திருவருளுக்கு உரியவராகிய புனிதவதியாரை மனைவி என்று உரிமைபாராட்ட அவர் மனம் இடந்தரவில்லை. தெய்வமாகவே கருதிவிட்டார். ஆகவே மெல்ல மறைந்து விடுகிறார் வாணிபம் என்ற பெயரைக்கொண்டு. பாண்டிநாட்டிலேயுள்ள ஒருதுறைமுகப் பட்டினத்திலே குடியேறி இன்னொரு பெண்ணை மணந்து வாழ்கிறார்.

காலம் பறந்தது. உறவினர்கள் இவன் வேற்றூரிலிருப்பதைச்சொல்லி புனிதவதியாரை அங்கே அழைத்துச்சென்றனர். இவளது வருகையை அறிந்த பரமதத்தர், மனைவியையும் குழந்தையையும் உடனழைத்துக்கொண்டுவந்து இவளது தாள்களிலே வீழ்ந்து வணங்குகிறார். உறவினர்கள் திகைத்துப் போனார்கள். இதென்ன இது? மனைவியை வணங்குவதும் உண்டோ? என்று கேட்க,

மற்றவர் தம்மை நோக்கி மானுடம் இவர்தாமல்லர்
நற்பெருந் தெய்வமாதல் நான் அறிந்து அகன்றபின்பு
பெற்றஇம் மகவு தன்னைப் பேரிட்டேன் ஆதலாலே
பொற்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின்.

என்றாராம். சுற்றத்தார் என்னசெய்வார்கள்? இதுகண்ட அம்மையான புனிதவதியார் இதுகாறும் என் துணைவர் பொருட்டே இந்த அழகிய உடலைச் சுமந்தேன். இனி இந்த அழகு எதற்கு என்று அழகையெல்லாம் உதறிவிட்டாராம் மேல்வீழ்ந்த மழைத்துளிகளைச் சிலிர்த்து உதறுவதுபோல. இந்த அற்புதத்தை, "வானமும் மண்ணும் எல்லாம் வணங்குபேய் வடிவம் ஆனார்" என்று விவரிக்கிறது புராணம். சுற்றத்தார்களெல்லாம் அஞ்சி விலகிப்போனார்களாம். உலக இன்பங்களை எல்லாம் வெறுத்த அவரது உடல் நாளடைவில் நலிந்து மெலிந்து பேய்க்கோலமாக ஆகியிருக்கவும்கூடும். யாருக்குத் தெரியும்? இப்படி ஞானவடிவம் பெற்ற அம்மையாரது பாடல்கள் செவிநுகர் கனிகளல்லவா?

அம்மையார் பலநூல்களைக் கற்றறிந்தவர். சிவகதைகளைக் கேட்டுக்கேட்டு அவற்றிலுள்ள சாரமான பொருளையும் அடிப்படையான தத்துவங்களையும் நன்றாய் அறிந்தவர். இன்பத்துன்பங்களை தனது நல்லாசிரியனாகக்கொண்டு தமது பக்திச் செல்வத்தை மேன்மேலும் வளர்த்தவர். 'சிவபெருமானது திருவருள்தான் உலகத்தையெல்லாம் ஆள்விப்பது' என்ற உண்மையை நன்றாய் உணர்ந்தவர். இவரது கவிதைகளிலே இந்தப் பண்புகளையெல்லாம் பரக்கக்காணலாம். அவைகளுள் இரண்டொன்றைப் பார்ப்போம்.

சிறுகுழந்தையான மார்க்கண்டனுக்கு அருள்செய்த வசீகரமான கதை இவருடைய நினைவில் எழுகிறது. சிவபெருமானது திருவருளுக்குமுன் எமன்தான் என்னசெய்துவிடுவான்? நமனை அஞ்சோம்! நமக்கினி எமபயம் ஏது? நடராஜனிருக்கும்போது என்று நினைத்த அவருக்கு இராவணனது அகந்தையுடன்கூடிய பக்தி நினைவில் எழுகிறது. பணிவோடு செய்வதுதான் பணி; பணிவில்லாமல் செருக்கித்திரிந்த இராவணன் என்னபாடு பட்டுப்போனான்!

செருக்கினால் வெற்பெடுத்த எத்தனையோ திண்தோள்
அரக்கனையும் முன்னின்று அடர்த்த—திருத்தக்க
மால்அயனும் காணாது அரற்றி மகிழ்ந்தேத்தக்
காலனையும் வென்றுதைத்த கால்.

என்று நமக்கு செருக்கோடுகூடிய இராவணனது கர்வபங்கத்தை நினைவூட்டுகிறார். அவனுடைய இருபதுகைகள், எத்தனையோ திண்தோள் என்று சொல்லும்படி தோன்றுகிறதாம். ஆனால் அவ்வளவு ராக்ஷஸபலமும், அருள்வலிக்கு முன்னே தோற்று ஒடுங்கிப் பணிந்துவிட்டதாம்! காலனை வென்ற காலின் ஒரு விரலின் அழுத்தத்தைத்தாளமுடியாமல் தவித்துப்போகிறான் இராவணேசுவரன். ஆனால் என்ன நேருகிறது? கர்வத்தை விட்டுப் பணிந்த உடனேயே எம்பெருமான் அருள்செய்துவிடுகிறாராம்; தியாகமூர்த்தியல்லவா? கேட்ட வரங்களை எல்லாம் வாரிவாரி வழங்கிவிடுகிறார்.

தவிர, எவ்வளவுக்கெவ்வளவு நமது சிந்தை தெளிவடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவனது அருள் நம் சிந்தையிலே பிரதிபலிக்கிறது. கோபம், பொறாமை, கர்வம், இவைகளெல்லாம்

சிந்தையை மாசுபடுத்தும் அசுரக்குணங்கள். அவைகளை எல்லாம் போக்கி நமது மனத்தைத் தூய்மையாக்கிக்கொண்டால்தான் எம்பெருமானது அருள் கிட்டும் என்பதுதான் இவர் கண்ட உண்மை. அசுரவதங்கள் எல்லாம் இதேகருத்தைத்தான் அறிவுறுத்துகின்றன. தீக்குணங்களையெல்லாம் துடைத்த "தெளிவுள்ள சிந்தையினில் சேர்வாய்" என்கிறார்.

கடவுளை வழிபடவேண்டும்; உனக்கு வேண்டியவைகளை எல்லாம் கொடுப்பார் என்பதுபோல தனது விருப்பத்தை வேண்டி இவர் பக்திசெய்யவில்லை. அப்படிக் கேட்பதை பக்தி உலகிலும் ஒரு வாணிபம் என்றே சொல்லலாம். வணிகர் மரபிலே தோன்றிய இந்த அம்மையார் பிறவிப்பெரும்பிணிக்கு மருந்தென்றுகூட நினைக்கவில்லை. சுயநலங்கருதாத பேரன்பு தான் அவர்கொண்டிருந்தார் என்பதற்குப் பல பாடல்கள் சான்றாகக் காட்சிதருகின்றன.

இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும்
படரும் நெறிபணியாரேனும்—சுடர்உருவில்
என்பருக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்பறாது என் நெஞ்சு அவர்க்கு.

என்று பேசுகின்றார். மேலும்,

சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே ஒத்திலங்கிச் சாராது
பேர்ந்தார்க்குத் தீக்கொழுந்தின் பெற்றியதாம்—நேர்ந்துணரில்
தாழ்சுடரோன் செங்கதிரும் சாயும் தழல்வண்ணன்
வீழ்சடையே என்றுரைக்கும் மின்.

மேலும் இப்படிப் பலவிதமாகக் காட்சிதரும் பெருமானது பெருமையை,

ஏதொக்கும்? ஏதுஒவ்வாது? ஏதாகும்? ஏதாகாது?
ஏதொக்கும் என்பதனை யார் அறிவார்?

என்று அறிவுக்கும் சொல்லுக்கும் அப்பாற்பட்ட அவரை யாரறிவார் என்று கேட்கிறார் வேதாந்திபோல. என்னை யார் அறிவார் என்கிறாரே, இவர் திருவாலங்காட்டிலே எம்பெரு

மானது திருவடிநீழலிலே சேர்ந்திருக்கவில்லையா? அந்தக் குழை நக்கும் பிஞ்ஞகன் தன் கூத்தைக் காணவில்லையா? என்ற கேள்வி நம்மகத்தே எழுகின்றது. அதற்கு அம்மையார் கூறுகிறார்.

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்"

ஆனால்,

சொல்முடிவு ஒன்றில்லாத
சோதியாய்ச் சிந்தையுளே தோன்றுமே !

என்று ஞானக்கண் கொண்ட பெரியோர்களுக்கும் பக்திக் காதலால் கசிந்துருகும் அடியார்களுக்கும் சிந்தையுளே செழுந் தேனாய்த் தித்திக்கும் என்கிறார்.

காரைக்கால் அம்மையார் கண்ட உண்மைகளும் பக்தி அனுபவங்களும், அருள்நெறியாகிய அன்புநெறியும் இவர் இயற்றியுள்ள திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திரு இரட்டைமணிமாலை. அற்புதத் திருவந்தாதி இவைகளிலே அழகாகக் காட்சிதருகின்றன. இவர் அருளால் அழைத்த மாங் கனிகள் இரண்டென்று புராணம் பேசுகிறது. இவரது வாழ் விலே கனிந்து வந்த இந்த மூன்று பிரபந்தங்களையும் "அருளால் அழைத்த முக்கனிகள் என்று பக்தர் குழாமும், ரஸிகர் குழா மும், போற்றிப் பாராட்டி வழிபடுகின்றன.

கடவுளை மறவாதீர்கள்

ஆப்பிரிக்காவின் வடபாகத்திலுள்ள அல்ஜீரியா நாட்டில் இம்மாதம் முதல் வாரத்தில் நிகழ்ந்த பூகம்பத்தால் விளைந்த சேதம் கோடிக்கணக்கில் மதிப்பிடப்படுகிறது ஆர்லீன்ஸ் நகரத்தில் மாத்திரம் 1324 மனிதர்கள் இறந்தார்கள். (நகரத் தின் ஜனத்தொகை 12,000) என்றால், இருக்கின்றவர்களின் உடல்நிலை எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்தறியலாம். உடையும், உணவுப்பொருள்களும் அன்புடைய அறப்பணி செய்பவரால் வழங்கப்பட்டு வருகின்றன.

833

ஏர் முனையிலே!

திரு. இராம. சொக்கலிங்கம் IV. u. c
பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

விஞ்ஞானத்தேர் பவனிவரும் இந்நாளில் விந்தை பலபுரியும் கலப்பையின் பெருமையையும் இன்றியமையாமையையும் பேசுவோரில்லை. எழுதுவோரில்லை. காரணம் மக்களல்ல. மக்களை இழுத்துச் செல்லும் காலதேவனின் திருவிளையாடல்.

அந்தக் கலப்பையின் பெருமையை மேலது கீழும் கீழது மேலுமாகமண்ணைப்புரட்டிச் சமுதாயவாழ்விற்கு உயிரளிக்கும் கொழுமுனையை நாம் அடியோடு மறப்பதற்கில்லை. விஞ்ஞானத் தேர் விரைந்துவரினும் உழுதற்றொழிலில் அது தன் முழு ஆதிக்கத்தையும் செலுத்துவதற்கு இந்நாட்டுப் பொருளாதாரம் இடமளிக்காது என்பது திண்ணம். ஆதலால் நாம் உழவின் உயர்வை, இன்றியமையாமையை உணர்ந்து அதன்வழி நடக்க ஆவனசெய்தல் வேண்டுமன்றோ?

இலக்கியம் இத்துறையில் நமக்கு நல்கும் இன்னுரைகளை உழவுத்தொழிலில் ஊக்கம் குறைந்த இந்நாளில் நினைவூட்டுவது "பழங்கதை பேசும் பண்பா"காது.

தமிழரின் தனிப்பெரும் ஏடு கலப்பை புரியும் முன்னேற்றப் பணிகளைத் தெற்றெனப் படம் பிடித்துக் காண்பிக்கின்றது.

ஐயோ உழவுத்தொழிலா? சேற்றில் இறங்கவேண்டுமே! வெயிலெனப் பாராது, மழையென முனியாது வரப்பிற்கும் அண்மையிலே புரியவேண்டிய கடும் பணியாயிற்றே அது! என்று உழவுத்தொழிலைக்கண்டு அஞ்சியோடினன் உட்கார்ந்தே உண்ணுகின்ற உன்மத்தன் ஒருவன். ஓடினன் எங்கு? நாகரிக உடையணிந்து நாசூக்காக வேலைபுரிந்து இல்லம்நோக்கி மீளலாமென்று உல்லாசபுரியை நோக்கி ஓடினன்!

ஒரு மாதம் உருண்டோடியது. அவனுடைய இலேசான உழைப்புக்குச் சில வெள்ளி நாணயங்கள் அவன் கரங்களில் உருட்டப்பட்டன. வந்தவழியே திரும்பினன். வரப்படியிலே பணிபுரியும் கந்தனிடம் அரிசிவாங்குவதற்கு. கந்தன் ஒரு புன்முறுவலோடு அவனிடம் அரிசியைக் கொடுத்தான். அந்தப் புன்முறுவலுக்குத்தான் என்ன பொருளோ யார் கண்டார்கள்? ஆனல் பின்வரும் பொய்யா மொழியாரின் பொதுக் குரலிலிருந்து நாம் ஒருவாறு அதன்பொருளை உணரமுடிகின்றது.

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனுல்
உழந்தும் உழவே தலை"

இற்றை நாளிலே வயலிலே கலப்பை பிடிப்பவன் ஒருசாதாரண மனிதனுக மதிக்கப்படுகின்ருன் பொதுமக்களால்,

உழைத்து உழைத்து உருக்குலேந்தஉருவம் என்று அவனேச் சார்ந்த அரசியல் கட்சிகள் வர்ணிக்கின்றன.

ஆனுல் உலக கவி வள்ளுவன் கருத்திலே அவனே வாழ் வாங்கு வாழ்பவனுகவும், ஏனேயோர் அவனேப்பின்தொடர்ந்து தொழுது வாழ்பவராகவும் கருதப்படுகின்றனர். 'எனவே இன்று சுயநலத்துடன் மட்டுமின்றி பொதுநலத்துடனும் வாழ்பவன் உழவன்' என்று சுருக்கமாகக் கூறிவிடலாம்

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்."

இன்று உழவன் கந்தையை உடுத்தித்திரியலாம். வாழவகை யின்றியிருக்கலாம் ஆனுல் இவை அரசியல்வாதிக்குரிய வாக்கு வாதங்கள். ஆனுல் நமக்கு வேண்டியவை?

உழவன் இன்றி உலகு இல்லே. உழவன் கரங்கள் கலப் பையைப் பிடியாதொழியின் உலகம் மாண்டொழியும். ஆத லால் அவன் மேற்கொண்ட பணியின் இன்றியமையாமையை நோக்கி நம்மால் இயன்றவரை உழவனின் பெருமையை உல கறியச்செய்து அவன் வாழ்வை வளமாக்குவதுதானே யன்றி அவனுடைய வறண்ட வாழ்வைக் காட்டி நம் வாழ்வை வளம் படுத்தும் அரசியல் நோக்கமல்ல.

நாட்டிற்கு வேண்டியது நல்ல வேளாண்மை, கொழுமுனே தந்த செல்வமாகிய பொன்னிற நெற்குவியல் பெருகிய நாடு ஒருபெரிய வல்லரசாகத் திகழுமென்பது திண்ணம், ஏனேய நாடுகள் யாவும் அவ்வல்லரசின் குடைக்கீழ் தானேவந்து தங்கும், இவ்வெல்லாவித முன்னேற்றத்திற்கும் காரணம் யார்? எது? என வினவின், அலகுடை நீழலவனும் அவன் கலப்பையும் என விளக்கியுரைக்கலாம். இதோ கீழே, இக் கருத்துக்களே நல்கும் குறுகத்தறித்த குறள்,

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

எனவே உலகமக்கள், நாஞ்சிலல்லது படையறியா வண்ணமும் உழவனல்லது இன்றியமையாதான் இல்லே என்னும் எண் ணமும் கொண்டு உழவனது முன்னேற்றத்திற்கு உழைக்குங் காலமே பொற்காலமெனப் போற்றப்படும். வாழ்க! உழவனும் அவன் கலப்பையும். வளர்க வேள்ாண்மை;

835

திருக்கோவையார்

வித்துவான், பாலூர், திரு. கண்ணப்ப முதலியார் அவர்கள்
தமிழ் விரிவுரையாளர், புதுக்கல்லூரி சென்னை.

(சென்ற மாதத் தொடர்ச்சி)

திருக்கோவையார் பாடிய ஆசிரியர் யார்?

இந்த வினாவும் எழுதற்கு இடனுண்டோ என்று சிலர் ஐயுறலாம். ஆம். எழுதற்கு இடனுண்டு. இவ்வையம் இரண்டொரு காரணங்களால் எழுவதாகும். தொன்றுதொட்டுப் பரம்பரையாக எவரும் கூறிக்கொண்டு வருவது திருக்கோவையாரைப் பாடியவர் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் என்பதாகும். நூல் வழக்கும் இதனை நன்கனம் வலியுறுத்தும்.

"பிறைமுடித்த பிரான் எழுதக் கோவைதிரு
வாசகப் பேர் பிறங்குபாடல்
மறைவகுத்த வாதவூர் மாணிக்க
வாசகர்தாள் மனத்துள் வைப்பாம்"

என்று மச்ச புராணமும்,

"தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை
நானூறும் அமுதூற மொழிந்தருளும் நாயகனை
வானூறும் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை இருபோதும் இறைஞ்சிடுவேன்"

என்று செவ்வந்திப் புராணமும்,

"சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்முகிலை
மற்றெரு்ப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்தூருக்கும் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே"

என்று திருவெண்காட்டுப் புராணமும், "மாணிக்கவாசகர் அறிவால் சிவனே என்பது திண்ணம், அன்றியும் அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர்வாக்கில் கலந்திருந்து அருமைத் திருக்கையால் எழுதினர்" என்று, இலக்கணக்கொத்து உரையும்,

"பாவை பாடின வாயால் கோவை பாடுக" என்று இறைவனே கேட்டுக் கொண்டதாகக் கூறும் செவிமரபுக்கு தொடரும் அறிவிப்பதினின்றும் அறியலாம். இக்காரணங்களால் திருவாசகம் பாடிய மாணிக்கவாசகரே திருக்கோவையாரைப் பாடினர் என்பதை அறிந்தோம். ஆனல், இவை அனைத்தும் புறச் சான்றுகளாகும் என்று சிலர் புறக்கணிக்கவும் கூடும். அகச் சான்றுகளாலும் இக்கருத்தை நன்கு வலியுறுத்தலாம். அதனையும் ஈண்டு நோக்குவோமாக.

திருவாசகம் மாணிக்கவாசகரால் பாடப்பட்டது என்பதில் எவர்க்கும் ஐயம் எழாது என்று எண்ணுகிறேன். அத்திருவாசகத்தில் காணும் சொல்லும் பொருளும், திருக்கோவையாரில் ஆங்காங்குச் சிதறிக் கிடக்கின்றமையின், அவற்றை எடுத்துக் காட்டின் மணிமொழியாரே திருக்கோவையார்க்கும் ஆசிரியர் என்பது வெள்ளிடைமலை எனவிளங்கும் என்க. திருக்கோவையாரில் வழிவிணுதல் என்னும் துறைகூறும் பகுதியில்,

"சிலம்பணி கொண்டசெஞ் சீறடி பங்கன் தன்சீரடியார்
குலம்பணி கொள்ள எனைக் கொடுத்தோன்"

என்னும் தொடர், திருவாசகத்தில் திருப்பூவல்லிப் பகுதியில்,

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்துவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்தெம்பெருமான்"

என்னும் அடியை நினைவு படுத்துகிறது.

"பொருளா எனைப்புகுந்தாண்டு புரந்தரன் மாலயன்பால்
இருளாய் இருக்கும் ஒளிநின்ற சிற்றம்பலமெனலாம்
சுருளார் கருங்குழல் வெண்ணகைச் செவ்வாய்த் துடியிடையீர்
அருளா தொழியின் ஒழியாதழியும் என் ஆருயிரே"

என்னும் ஆற்றுதுரைத்தல் என்னும் துறையை உணர்த்தும் கோவையார்ப் பாடல்,

637

"அருளாதொழிந்தால் அடியேனை அஞ்சேல் என்பாரார் இங்குப்
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே பொன்னம்
பலக்கூத்தா
மருளார் மனத்தோடுனைப் பிரிந்து வருந்துவேனை வா என்றுன்
தெருளார் கூட்டம் காட்டாயேல் செத்தேபோனால் சிரியாரோ"

என்னும் திருவாசகக் கோயில் மூத்த திருப்பதிகத்தின் சொல்லை யும் பொருளையும் தழுவி நிற்பதை உணரலாம்.

"மைத்தழை யாநின்ற மாமிடற் றம்பல வன்கழற்கே
மெய்த்தழை யாநின்ற அன்பினர் போல விதிர் விதிர்த்து"

என்பது திருக்கோவையாரில் இரக்கத்தொடு மறுத்தல் என்னும் துறையைச் சார்ந்த பாடல். இதில், விதிர்விதிர்த்து என்று பெய்யப்பட்ட தொடர்,

'மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்

என்னும் திருவாசகத் திருச்சதக முதற்பாட்டில் மிளிர்வதைக் காண்க.

மாணிக்கவாசகர் தம்மை நாயினும் கடைப்பட்டவன் என்று அடிக்கடி கூறிக்கொள்வதைத் திருவாசகத்தில் பல இடங்களில் காணலாம்.

'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு' —சிவபுராணம்.

'கடையவனை நாயினேன் ஆதலையும் நோக்கி'
—திருச்சதகம், சுட்டறுத்தல்.

'நாயிலாகிய குலத்தினும் கடைப்படும் என்னை'
—திருச்சதகம், ஆத்மசுத்தி.

'ஈறிலாத நெஞ்சுடைய நாயினேன்'
—திருச்சதகம், ஆனந்தாதீதம்.

'நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை'
—திருக்கோத்தும்பி.

இந்தக் கருத்தைக் கருத்தில் கொண்டேதான் திருக்கோவை யாரிலும்,

538

'நாய்வயின் உள்ள குணமும் இல்லேனை நற்ளெண்டு கொண்ட தீவயின் மேனியன்'

என்று ஆசிரியர் மொழிவார் ஆனுர். இவ்வாணித்தரமான அகச்சான்றுகளில் மாணிக்கவாசகரே திருக்கோவையாரின் ஆசிரியர் என்பது உள்ளங் கை நெல்லிக்கனிபோல விளங்கு கிறது என்பதில் இன்னமும் ஆசங்கை எழ எண்ணம் வருமோ.

இங்ஙனம் அசைக்க ஒண்ணுத அகப்புறச் சான்றுகள் இருக்க ஆசிரியர் யார் என்பதைப்பற்றி ஆசங்கை நிகழ் வானேன் எனின், அதனையும் இங்கு அறிவோமாக. நம்பி யாண்டார் நம்பிகள்,

'திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச்சிற்றம்பலப்
பொருளார் தருதிருக் கோவை'.

என்று குறித்துள்ளார்.

இதில் மாணிக்கவாசகர் செய் திருச்சிற்றம்பலப் பொரு ளார் தருதிருக்கோவை என்றிராமல், "சிவபாத்தியன் செய் கோவை" என்றிருத்தலின் திருவாதவூரில் வாழ்ந்த சிவபாத்தியர் என்பவரால் பாடப்பட்டதாகும் என்று கருதுகின்றனர் சிலர். நம்பியாண்டார் நம்பிகள் சிவபாத்தியன் என்னும் சொல்லைச் சிவனுக்குப் பாத்யமாக உள்ள மாணிக்கவாசகர் என்றே பொருள் படுமாறு பாடியிருப்பதாகக் கருதுவோமானுல் இவ் வையம் எழ ஏதுவே இல்லாமற்போகும். அன்ருே? ஈண்டு பாத்தியமாவது அன்பினுல் ஏற்பட்ட உறவாகும். இந்த அன்பு உறவுதான்.

மற்ளெரு காரணங்காட்டியும் திருக்கோவையார் மாணிக்க வாசகர் பாடிய எட்டாந் திருமுறையாகிய திருவாசகத்தோடு இதையும் ஒருங்குவைத்துத் திருமுறையாகக் கூருமையே ஆகும். இதற்குச் சான்ருகத் திருமுறை கண்ட புராணப் பாடலாகிய,

"ஆகவளர் திருமுறை ஏழ், அருள் திருவாசகம் ஒன்று"

என்னும் அடியைக் காட்டிச் சாதிப்பர்.

839

திருமுறை வகுப்புமுறையில் பலதடை விடைகள் ஆராய்ச்சியாளரிடையே உலவிவருவதால் எட்டாம் திருமுறையில் திருக்கோவையாரை இணைக்காததை நாம் இங்கு ஆராய வேண்டுவதில்லை. அவ்வாராய்ச்சி தனிப்பட்டது. இதனால் திருக்கோவையார் மணிமொழியாரால் பாடப்பட்டதன்று என்று சொல்லிவிட முடியாது.

மற்றும் சிலர் பேரின்ப நிலையில் திளைத்துத் தேக்கெறியும் மணிமொழியார் சிற்றின்ப நிலையில் திருக்கோவையாரைப் பாடுவரோ? பாடார் ஆதலின் வேறு யாரோ தாம் பாடி இருக்க வேண்டுமெனச் சாதிக்க முன்வருவர். அங்ஙனம் கூறுபவர் மணிமொழியார் திருவாய் மலர்ந்துள்ள திருவாசகத்தை ஆழ அருந்தப் படித்து அதிலும் அகப்பொருட் சுவைக்குரிய அருமைப்பாடல்கள் இருத்தலை உணர்ந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன். இத்துடன் அவர்கட்கு

"பெற்ற சிற்றின்பமே பேரின்ப மாய் அங்கே
முற்றி வரும் பரிசுந்தீபற
முளையாது மாயை என்றுந்தீபற."

என்னும் திருவுந்தியார் பாடற்பொருளை நன்கு சிந்திக்கவிட்டு விடுகின்றேன். அதன்பின் அவர்களே பேரின்ப நிலையில் இருந்தவரும் சிற்றின்பம் பாடும் முறையில் பேரின்பக்கருத்தை இணைத்துப்பாடும் தகுதியுடையவர் என்பதை உணர்ந்து மணிமொழியாரே திருக்கோவையார் ஆசிரியர் என்று அறிந்து ஆசங்கை போக்கிக் கொள்ள ஏதுவாகும்.

ஆனந்த வெள்ளத் தழுந்தும் ஓராருயிர் ஈர் உருக்கொண்டு
ஆனந்த வெள்ளத் திடைதிளைத் தாலொக்கும் அம்பலஞ்சேர்
ஆனந்த வெள்ளத் தறைகழ லோன்அருள் பெற்றவரின்
ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாதுஇவ் அணிநலமே.

தாயாய் முலையைத் தருவானே தாரா தொழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ நம்பி இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாள்அடைந்தேன் தயாநீ என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய் நான்தான் வேண்டாவோ.

———

840.

திருநாவுக்கரசும் திருவள்ளுவரும்

பேராசிரியர், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை M.A., B.L., அவர்கள்
அண்ணுமலைநகர்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

மக்களை மாக்களாகவாழச்செய்வன இவ்வைம்பொறிகளுமே யாகும். உயிர்களை நல்வழியே செல்லவொட்டாமல் அல்வழியே இழுத்துச் செலுத்திப் பேயாட்டம் ஆடுகின்றன பஞ்சேந்திரியங்கள். இவ்விந்திரிய மயக்கினுலே உயிர்கள் தம் கடமையை மறந்து வேண்டாதவற்றைக் கட்டிக்கொண்டு வாழ்க்கையைப் பாழாக்கிவருகின்றன. இவற்றை வென்றவர் திருநாவுக்கரசர். பஞ்சேந்திரியங்களோடும் போர்புரிந்து அவற்றை மடக்கிப் புறமுதுகிட்டு ஓடும்படிச்செய்த சிவஞானச்செல்வர் திருநாவுக்கரசர். அப்படி அவற்றை வென்று வீரட்டியடித்துங்கூட, அவை அவரைச் சும்மாவிடுவதில்லை. இடையிடையே அவை திரும்பிவந்து அவர்முன் நின்றுகொண்டு பெருங்கூச்சலிட்டு ஆரவார முழக்கம் செய்யும். அவர் ஒருநாளாவது சோர்ந்து தம்வலையில் சிக்கி விழமாட்டாரா என்று ஏங்கிநிற்கும். அப்பொழுது அப்பரடிகள் அவற்றை வெகுண்டடர்த்து விரட்டியடிப்பார். எப்படி?

முள்வாய தொழிற்பஞ்சேந் திரிய வஞ்ச
முகரிகாள் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
நடாத்துகின் றீர்க் கமையாதே யானேல் வானேர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணைப் பாதாளக் கருவை ஆரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவேன் நும்மால்
ஆட்டுணேன் ஓட்டந்தீங் கலையேன் மின்னே.

முகரி - ஆரவாரம் செய்வோன்; மம்மர் - மயக்கம், துக்கம்.

இவ்வைம்பொறிகளும் இவ்வுலகில் உயிர்களை எவ்வாறு ஆட்டிவைக்கின்றன தெரியுமா? இந்தியநாட்டு வரலாற்றைப் படித்தவர்கள் தக்கர்களைப்பற்றித் தெரிந்திருப்பார்கள். ஆறலைக்கும் கள்ளக் கூட்டத்தார் இத்தக்கர்கள். ஆறலை கள்வரை

நினைத்தவுடனே அடிவயிறு பக் என்னும். ஆறலைத்துச் சூறை கொள்ளுதல் பல்லாயிரம் ஆண்டுகளாக நம்நாட்டில் பயின்று வந்திருக்கிறது. புகைவண்டிப் பிரயாணம் தோன்றியபின்னர் வழிப்பறி அவ்வளவாகப் பழக்கத்தில் இல்லை. இருந்தாலும், இங்கொன்றும் அங்கொன்றுமாய் இக்காலத்திலும் நடந்து கொண்டுதானிருக்கிறது. தனிவழி செல்லும் வழிப்போக்கர் களைத் தடுத்து நிறுத்தி, அவர்களிடமுள்ள காசுபணங்களைத் தட்டிப்பறிப்பதுதான் ஆறலைத்தல் என்னப்படும். ஆறு என்றால் வழி; அலைத்தல் என்றால் துன்புறுத்துதல். தனிவழி யிலும் காட்டுவழியிலும் துணையின்றிச் செல்லும் வழிப்போக் கனை முரடர்கள் பலர் சூழ்ந்துகொண்டு துன்புறுத்தினால் அவனால் என்ன செய்யமுடியும்? காட்டு வழியிலே கள்ளர் இட்டதுதான் சட்டம்.

எங்கணும் இருள் கவிந்து கிடந்தது. இரவுநேரம். கரடு முரடான காட்டுப்பாதை. தனியே சென்றுகொண்டிருந்தார் திருநாவுக்கரசர். அக்கம்பக்கத்தில் யாதொரு துணையும் கிடை யாது. ஐந்துவேடர்கள் அவரைக் கிட்டிச் சூழ்ந்துகொண்டனர். அவரை இழுத்து வளைத்து முரட்டுத்தனமாய்ப் பேசத்தொடங் கினர். அவர்கள் கையிலே கொலையாயுதங்கள் மின்னிக்கொண் டிருந்தன. திருநாவுக்கரசரை நல்லவழியிலே முன்னேறிச்செல்ல விட்டார்களில்லை. அவர்கள் பண்ணின அட்டகாசம் மட்டுக் கடங்காது. அவர்கள் அடங்காது துள்ளிக்குதித்துத் துயரம் விளைத்தனர். திருநாவுக்கரசரை நல்வழியிலேசெல்லவொட்டாது குறுக்குமறுக்குமாய்ச் செலவிட்டுத் துன்புறுத்தினர். அவரிட மிருந்த பெறுதற்கரிய இன்பப்பொருளைக் கொட்டிக் கவிழ்த்துக் கொள்ளையடித்தனர். அவ்வைந்து வேடர்களின் குதியாட்டங் களைக்கண்டு நாவரசர் நைந்து வருந்தினார். அத்தனிவழியிலே உற்றதுணையாவார் ஒருவருமில்லை. ஆண்டவன் ஒருவனைத்தவிர வேறு யார்தான் அங்கு ஆதரவு அளிக்கமுடியும்? நமது உலகியல் சட்டதிட்டங்களும், அரசாங்கப் பாதுகாவலும், அரசியல் தந்திரங்களும், அருமை பெருமையாய் நாம் போற்றி வரும் உரிமைகளும் ஆறலைகள்வரிடத்தில் அதிகாரம் காட்ட முடியுமா? திருநாவுக்கரசர் செய்வதின்னதென்றறியாது திகைத்தார். மூன்றுகண்ணுடைய மூர்த்தியான முழுமுதற் கடவுளின் திருவடிகளிலே சரண்புகுந்தார். உரனென்னும்

படியான அசையாத அறிவின் திட்பத்தைக்கொண்டு அந்த வேடர்களை வென்றார். அவ்வாறே பிறரும் வெற்றியெய்தலாம் என்பதையெடுத்து மன்பதையுலகிற்கு விளக்கினார் :–

புள்ளுவர் ஐவர் கள்வர் புனத்திடை புகுந்து நின்று
துள்ளுவர் சூறை கொள்வர் தூநெறி விளையவொட்டார்
முள்ளுடை யவர்கள் தம்மை முக்கணன் பாத நீழல்
உள்ளிடை மறைந்து நின்றங் குணர்வினால் எய்யலாமே.

இப்பாடலின் சொல்லும் பொருளும் சிவஞானபோதத்தின் எட்டாவது சூத்திரமாக மிளிர்ந்துள்ளதென்றால் இதன் சிறப்பை வேறு எங்ஙனம் எடுத்து இயம்புதல் கூடும். வஞ்சக வேட்டைத் தொழில் புரியும் பாலைநிலமாக்களாகிய கீழ்மைத் தொழில் புரிவோர் புள்ளுவர் எனப்படுவார். இங்கே புள்ளுவர் ஐவர் கள்வர் என்றது ஐம்புலவேடர்களை. இந்த ஐம்புல வேடர்களின் சேட்டையாலே ஆட்டம் ஆடிக் களியாதவர்கள் உலகத்தில் யாருமில்லை. தூய்மையான ஒழுக்கநெறியிலே செல்லவொட்டாது தடுத்து ஆறலைக்கும் தொழிலுடையனவா தலின் ஐம்புலன்களும் புள்ளுவர் எனப்பட்டன. அவை உயிருக்குள் அடங்காது நிற்றலால் துள்ளுவர் என்றும், உயிரை உலகவிடயங்களின் ஈர்த்துச் செல்லுதலால் சூறைகொள்வர் என்றும் கூறினார். சிற்றின்பத்தைத்தரும் மல அழுக்கு விரவிய உலக நெறியினின்றும் வேறுபட்டு, சிவமே மெய்ப்பொருள் எனத் துணிந்து அப்பொருளை அடையச்செல்லும் பேரின்ப வீட்டு நெறியினைத் தூநெறி என்றார். வீட்டுநெறியிலொழுகும் மாந்தராகிய வழிப்போக்கரிடம் மறித்து எதிர்த்துக்குதித்து அவர்களுடைய மெய்யறிவு ஆகிய பொருளை அழித்துவிடுதலின் சூறைகொள்வர் என்றார். சிவபெருமானுடைய திருவடிநீழ லாகிய அருள்வியாபகத்துள் அடங்கினின்றால் அல்லாமல் வீட்டு நெறியிலொழுகும் மாந்தர்கள் உலகப்பற்றுக்களை ஒழித்து மெய்யுணர்வை அடைதல்முடியாது ஆகையால், முக்கணன்பாத நீழலுள்ளிடை மறைந்துநின்று உணர்வினால் எய்யலாமே என் றார். இதனையுட்கொண்டு கூறியதுபோலவே, மெய்கண்டாரும்,

ஐம்புல வேடரி னயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு
அன்னிய மின்மையின் அரன்கழல் செலுமே.

843

என்றூர். ஆசைவன் பாசமெய்தி அங்குமிங்கும் அலைந்துற்று ஊசலாட்டுண்டு வாளா உழந்து உழிதருகின்ற உயிரினிடத்தே இறைவன் திருவருளோடுங்கூடிய குருவடிவத்திலே வந்து காட்டியபின்னரே, தன்னை இந்திரியத்தின் வேருவான் கண்டு அவ்வுயிர் இறைவன் சீபாதத்தையடையும். ஒருவன் ஏறியிருந் தாடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்கு உற்றுழியுதவுந் தாய்போல ஆண்டுத்தாரகமாவது நிலனே யன்றிப் பிறிதில்லாததுபோல் ஐம்புலன்களின் கட்டை அறுத்துக்கொண்ட உயிர் தடையின்றி இறைவன் திருவடிகளை எய்தும் என்று கூறி "ஊசல் கயிறற்ருற்ருய் தரையேயாந் துணையான்" என்று எடுத்துக்காட்டியது சிவஞானபோதம். இதனையே அப்பரும் கூறுகிருர் :—

உறுகயி றூசல் போல வொன்றுவிட் டொன்று பற்றி
மறுகயி றூசல் போல வந்துவந் துலவு நெஞ்சம்
பெறுகயி றூசல் போலப் பிறைபுல்கு சடையாய் பாதத்
தறுகயி றூசலானே னதிகை வீரட்ட னீரே.

(தொடரும்)

அன்பர்களுக்கு

1. மதிப்புரைக்கு நூல்கள் அனுப்பும் அன்பர்கள் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

2. கட்டுரைகள் டிம்மி அளவில் நான்குபக்கங்களுக்கு மேற்படாமல், ஒவ்வொரு பக்கத்திலேயே எழுதப்படல் வேண்டும்.

3. கட்டுரைகளை தபால் பில்லைகள் அனுப்பினுல், வெளியிடுதற்கு முடியாதவைகள் திருப்பி அனுப்பப்படும்.

4. ஒவ்வொரு மாதமும் பதினைந்தாந்தேதிக்குள் கிடைக்கும்படி கட்டுரைகளை அனுப்புதல் வேண்டும்.

5. சமயநூற் கட்டுரை, ஞானனுபவப் பொருள்கள், தமிழிலக்கியம், வரலாறு, மருத்துவம், சமய ஒழுக்கங்களையும் உலகியலறிவையும் வளர்க்கும் தொடர்கதைகள், தலவரலாறுகள், கவிதைகள், வெளியிடப்பெருத ஏட்டு நூல்கள் ஏற்கப்படும்.

544

அலை வீச்சில் வலை வீச்சு

வித்துவான், திரு. மு. இரத்தின தேசிகர் அவர்கள்,
தலைமைத் தமிழாசிரியர்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப்பள்ளி, திருவாரூர்.

(அலை வீச்சு - கடல். வலைவீச்சு - மீன் பிடிப்பு.)

நீர் வாழ் உயிரினங்களில் மீன் ஒன்று. இது மின்னும் தன்மை உடையது. ஆதலால் மீன் எனப்பட்டது. ஆரல் என்பது ஒருவகை மீன். அதன்மூக்கில் ஒளிஉண்டாம். அது சேற்றின் கீழ்தான் இருக்குமாம். புறப்பாட்டின் ஓரடியில் ''கதிர்மூக்கு ஆரல் கீழ்ச்சேற்று ஒளிப்ப'' என்று காணப் படுகின்றது. மீனின் ஒளியிலும், வடிவ அமைப்பிலும் அழகைக் கண்ட புலவர்கள்; பெண்களின் கண்களுக்கு மீனை உவமை கூறினர்கள். ஆலவாயில் அரசுபுரி அங்கயற்கண் அம்மைக் கும் அக்காரணத்தால்தான் மீனாட்சி என்ற பெயர் அமைந்தது. மீனில் பலவகை உண்டு. சிறிய நீர் நிலைகளாகிய குளம், குட்டைகளிலும், ஆறு, ஏரிகளிலும், பெருங் கடல்களிலும் மீனினம் வாழ்கின்றது.

உலகில் வாழ் உயிர்கள் பிராண வாயுவினால்தான் வாழ் கின்றன. மரஞ்செடிகொடிகளும், பகலில் சூரிய வெப்பத்தின் உதவியால் காற்றிலுள்ள கரியமில வாயுவை இலைகளின் வழியாக உணவாக உட்கொண்டு; இரவெல்லாம் அவ்விலை களின் வழியாகவே பிராணவாயுவை உட்கொள்கின்றன. தாவரங்கள் இலையினால் மூச்சு விடுகின்றன. மனிதன் மூக்கி னால் மூச்சு விடுகின்றான். ஆண்டவன் படைப்பில் மீனினம் மூச்சுவிடும் செயல் ஒரு வியப்பானது. தண்ணீரில் பிராண வாயு கலந்திருக்கிறது. மீன் தண்ணீரைத்தன் வாய் கொள்ளும் மட்டும் முகந்து கொள்ளும். வாயின் இருபுறங்களிலும் அமைந் துள்ள செவுள்களின் வழியாக அந்நீரை வெளிவிடும். அப் பொழுது செவுள்களில் அமைந்துள்ள சிறிய நரம்புக் குழல்கள் நீரிலிருந்து பிராணவாயுவை இழுத்துக் கொள்ளுகின்றன. மீனைப் பிடித்துக் கரையில் விட்டால் அது மூச்சுவிடமுடியாது.

நானிலங்களில் நெய்தல் என்பது ஒன்று. கடலும், கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். இந்நிலத்தில் வாழ்வார் பரதவர், நுளையர் முதலிய பெயர்களான் அழைக்கப்படுவர். இவர்களின் தொழில் மீன் பிடித்தல்தான். மீன் பிடிக்கும் தொழில் இன்று உலகு எங்கணும் நடைபெற்றே வருகின்றது. உயிரன்பில் தலை சிறந்தவர்களாய்த் தங்களைக்கூறிக்கொள்ளும் சமணர்களும் மீனுண்டலில் தலை சிறந்தவர்களாவர்.

"கடுக்கள் தின்று கழிமீன்கள் கவர்வார்கள் மாசுடம்பினர்"

என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருக்கேதாரப் பதிகத்தில் ஓரடி. மீன் உணவாக மட்டும் பயன்படவில்லை. மருந்தாகவும் இன்று பயன்படுகின்றது. மேலைநாட்டுக் கடற் கரைகளிலே, ஷார்க், காட் என்ற மீன்கள் பிடிக்கப்படுகின்றன. அவற்றின் ஈரலிலிருந்து எடுக்கப்படும் நெய் சிறந்த மருந்தாக இன்று பயன்படுகின்றது. தூந்திரப் பகுதிகளில் (வட, தென் துருவங்கள்) வாழ்வோர் ஸீல், வால்ரஸ் என்ற மீன்களின் கொழுப்பால் தான் விளக்கெரிக்கின்றனர்.

அறுபான் மும்மை நாயன்மார்களுள் ஒருவராய அதிபத்தர் கூட மீன்பிடித்துத்தான் வாழ்ந்தார். மனம் போன நிலையில் இருக்கப்பெற்ற முக்தர் எத்தொழிலைச் செய்தால் என்ன? ஏது அவத்தைப்பட்டாலென்ன? மதுரைச் சொக்கேசரும் வலை வீசினார் என்றால் மீன் பிடிப்பதைப் பற்றி வேறு சொல்லவா வேண்டும்?

இந்த மீன்பிடிப்பு ஒரு கலை. மகரம், சுறா போன்ற பெரும் மீன்கள் நெடுங் கடலுள் வாழ்கின்றன. இவை தம்மைப் பிடிப்பாரது உயிருக்கே சில சமயங்களில் உலைவைப் பன ஆகும். மீன்பிடிப்பார் அகன்ற கடற்பரப்பில் இரவு பகலாகப்பல நாள் கழித்து மீன்பிடித்து மீள்வதுண்டு. சில இடங்களில் மீன் பிடிப்பார் படகுகளில் செல்வர். தம்மோடு எரியாத தீப்பந்தங்களைக்கொண்டு செல்வர், ஒருவகை மீன்கள் கூட்டமாக இருக்கும் இடத்துக்குச் சென்றவுடன் அப்பந்தங் களில் எரி கொளுவுவர். ஒளியைக்கண்ட மீன்கூட்டம் சினந்து போருக்கு எழும்பி ஆயிரக்கணக்கில் அப்பந்தங்களில் விழும்,

846

பந்தங்கள் அணைய மீனெல்லாம் சூழ்ந்த படகுகளில் விழுந்து நிரம்பும். மறுமுறை பந்தத்தை ஏற்றினால் படகு கடலுக்குள் மூழ்க வேண்டியதுதான். இந்த நிலையில் நிரம்ப மீன்களைப் பெற்ற பரதவர் வீடு மீள்வர்.

ஒரு குளக்கரையிலே வலைஞன் ஒருவன் வலைவீசி மீன்களைப் பிடித்துக்கொண்டிருந்தான்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்."

என்ற அருளுரையில் கருத்தூன்றிய முனிவர் ஒருவர் வலைஞனின் இரக்கமற்ற செயலுக்கு இரங்கி "அப்பா! நீ எப்போது கரையேறப்போகிறாய்?" என்றார். முனிவரின் உட்கிடை அறியாத வலைஞன் நீர்த்துறையில் இறங்குவதற்கல்லவா இவர் வழிதேடுகிறார் என்று கருதி "ஐயா! என்பறி நிரம்பினால் யான் கரை ஏறுவேன் என்றான். முனிவர் எண்ணிய கரை வலைஞனுக்கு எங்கே தெரியப்போகின்றது? திருவருட்பேறாகிய கரையென்றோ அது. வலைஞனுக்கு அந்தக்கரையை அடையும் நிலை எப்பொழுது கிட்டுமோ?

"திடங்கொண்ட இராமபாணம் கண்ட இலங்கைவேந்தன் விடங்கொண்ட மீனைப்போலக் கலங்கினான்" என்று கூறினார் ஒரு புலவர். இங்கே விடம் என்றது தூண்டில் முள்ளை. எனவே தூண்டில் முள்ளால் மீன்பிடிப்பதென்பது ஒரு வகை என்று நாம் அறிகின்றோம். பலவகையான மீன் பிடிப்புகளில் தூண்டிலால் மீன்பிடிப்பதைப்பற்றிய எண்ண அலைகள் இளந்துறவியாய குமரகுருபரரது உள்ளத்தே எழுந்தன. அடிகளுக்கு மீன்கள் பிடிபட்டுப்பாழாவதில் எண்ணமில்லை. தூண்டிற்காரனுக்குத் தப்பி மீன்களெல்லாம் பெருங்கடலில் வாழவேண்டுமென்பது அவர் விருப்பம்- மீன்பிடிப்பவனோ பொல்லாதவன். ஈயும் தன்மையும் இரக்க உள்ளமும் இல்லாதவன். அவன் வேலையெல்லாம் உயிரையும் உடம்பையும் கூறுபடுத்திப் பிரிப்பதுதான். அதனாலேயே அவன் கூற்றுவன் என்று அழைக்கப்படுகின்றான். அடிகள் அவனைக் "கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் நுளையன்" என்கின்றார். அவன்

847

தொழில் கொடிதென்றல் தோற்றமும் கொடியதாகத்தானே இருக்கவேண்டும். அவன் தான் பிடிக்கும் உயிரினங்களாகிய மீன்களை உண்ணவேண்டித் தன்பற்களை நெறுநெறெனக்கடித்த வண்ணம் இருக்கின்றன். அத்தோற்றத்தைத்தான் அடிகள் "அயிறலைத் தொடங்கி எயிறலைத்திருத்தலின்" என்று கூறு கின்றார்.

இந்நூலைக் கூற்றுவன் பிடிக்க முற்படும் மீன்கள் எவை? அவையே உயிரினங்களாகிய மீன்களாகும். இவற்றையே அடிகள் "உயிர்மீன்" "ஆருயிர்மீன்" என்கிருர். உயிர் ஒன்றல்லவே! பலஅன்றே! ஆதலினல்தான் ஆருயிர்மீன் என்கிருர். இந்தமீன்கள் எங்கேவாழ்கின்றன? உப்புநீர்க் கேணியில் வாழ்கின்றன. நல்லநீராயிருந்தால் பயன்படும். உப்புநீரால் யாருக்குப் பயன்? அதில் வாழும் மீன்களுக்குத் தான் பயனுண்டா? அக்கேணி எது? அக்கேணிதான் வலியற்ற ஏழு பொருள்களால் கட்டப்பெற்ற யாக்கையாகிய உடம்பு. இதனையே அடிகள் "ஊற்றமில்யாக்கை உவர் நீர்க்கேணி" என்கிருர். யாக்கையை ஊற்றமில்லாதது என்கிருர். ஏன்? மாந்தர் வாழ்க்கை மண்ணின்கலம் போலச் சாந்தனையும் சஞ்சலமும் தருவதன்றே. உயிருக்கும் உடம்பிற்கும் நெருங்கிய தொடர்புதான் உண்டா? உயிர் உடம்பில் ஒதுக்குக்குடி யிருப்பதுதானே. ஓருடம்பைவிட்டு உயிர் பிரிந்தால் மீண்டும் அந்த உடம்பிற்குத்தான் வருமா? இல்லையே. குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தது போன்றது தானே அப்பிரிவு?.

பரந்த நீரில் மீன்வாழினும் அலைந்து திரிந்து இன்புறலாம். உயிர்மீன் வாழ்வதோ கேணி. கேணிமீனுக்குச் சுகம் எங்கே கிடைக்கப்போகின்றது? அதனல்தான் அது வருந்தும்தன்மை உடையதாக இருக்கிறது என்பதைக்காட்ட "அலை உயிர்மீன்" என்கிருர் அடிகள். உயிர் மீனுக்கு வருத்தம் எப்படி உண்டா கிறது? அவை குடியிருக்கும் யாக்கையாகிய உவர்நீர்க்கேணி யால்தான். மீனுக்குக்கேடு சூழும் ஒரு பொருள் அதனுள் ளேயே இருக்கின்றது. அதுதான் 'அறிவு' எனப்படுவது. சமயநெறிநிற்போர் அறிவை அந்தக்கரணத்தில் ஒன்று என்பர். அவ்வறிவு உயிரை அவத்தைக்கு உள்ளாக்குகின்றது என்பதும் அந்நூன் முடிபே. அறிவு நிலைஉடையதல்ல. எண்ணி

எண்ணி ஏக்கமடையச் செய்வது அது. அதனையே அடிகள் "புலத்து அலை உயிர்மீன்" என்கின்றார். ஈண்டுப் புலம் என்றது அறிவை.

இந்த உயிர் மீன்களைப் பிடிக்க, கூற்றுவனாகிய நுளையன் தூண்டில் முள் அமைத்துவைத்திருக்கின்றான். அந்தமுள் ஒரு முனை உடையதல்ல. மூன்று முனைகளை உடையது. ஏதாவது ஒரு முள்ளில் மீன்பட்டாலும் மீன் மாளும். அம்மூன்று முனைகள் யாவை? அவையே வாதம், பித்தம், சிலேட்டுமம் எனப்படுகின்றன. இம்மூன்றின் ஏற்றத்தாழ்வுகளால்தான் உடம்பிற்கு நோய் வருகின்றது. பின் அந்நோயே ஆவியைப் போக்குகின்றது. வள்ளுவரும்

"மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்
வளிமுதலா எண்ணிய மூன்று"

என்று கூறினார். மீன்பிடிப்போன் தூண்டிலை அடிக்கடி தூண்டிக்கொண்டே யிருப்பான். தூண்டப்படுவதால்தான் அது தூண்டில் எனப்பட்டது. தூண்டில்முள் நீர்மட்டத்தின் உள்ளே இருக்கும். அதில் மீனுக்கு இரை வைக்கப்பட்டிருக்கும். மீன் அவ்விரையை விழுங்கும்பொழுது தூண்டிலை வலித்தால் மீன் தூண்டிலில் அகப்பட்டுக் கொள்ளும். தண்ணீருக்குள்ளிருக்கும் இரையை மீன்விழுங்குவதை மேலிருக்கும் தூண்டிற்காரன் எப்படிக்காணமுடியும்? அதற்குத்தான் தூண்டிற்கயிற்றோடு ஒரு மிதவையைக் கட்டியிருக்கின்றான். மிதவை தண்ணீரில் மிதக்கும். மீன் இரையைக்கவ்வும் போது மிதவை அமிழ்ந்தும். அதைக்கண்ட தூண்டிற்காரன் கோலை மேலே விசிப்பான். முள்ளில் சிக்கிய மீன் கரையில் வந்து வீழும். எனவே மீன் பிடிப்போனுக்கு மிதவை மிக மிக இன்றியமையாக் கருவியாய் இருக்கின்றது.

இங்கே உயிர்மீன் பிடிப்போனுக்கு எது மிதவை? அது தான் வாழ்நாள். அதைத்தான் அடிகளும் "வாழ்நாள் மிதப்பு நோக்கி" என்கின்றார்கள். "தூண்டிற்காரனுக்கு மிதப்பு

மேல் கண்'' என்பது ஒரு உலகப்பழமொழி. ஒவ்வொரு நாளும்; நம் வாழ்நாள் வீழ்வதை நமக்குக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றது.''

''நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள் அஃதுணர்வார்ப் பெறின்''

என்றார் நாயனார், இவ்வாழ்நாள் மிதவையில் நாட்டம் வைத்துக்கொண்டிருக்கும் கூற்றுவ நுளையன் எப்படியும் உயிர்மீன்களைப் பற்றிவிடவே பார்க்கின்றான். நுளையனுக்கு அஞ்சி அஞ்சி அலையும் உயிர் மீன்களிடத்து அடிகளுக்குக் கருணை தோன்றுகின்றது. இந்த மீன்களைக் கூற்றுவனுக்கு இரையாக்க அடிகளுக்கு விருப்பமில்லை. மீன்கள் துள்ளிவிழும் தன்மையன. உயிர் மீன்களும், இறப்பு—பிறப்பு—இறப்பு—பிறப்பு என்று துள்ளியவண்ணம் இருக்கின்றன. மீன்பிடிப்போர் நீர் மடையின் பக்கத்தே ஒரு குழி அமைப்பது உண்டு. நீரோட்டத்தில் வரும் மீன்கள் மடையில் தடைப்படும்பொழுது துள்ளிக் குதித்து பள்ளத்தில் விழும். அப்படியே துள்ளிக்குதிக்கின்ற உயிர் மீன்கள் விழுவதற்காக ஒரு பள்ளம் வெட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அதுதான் கருக்குழி, அக்கருக்குழியிலும் உயிர் மீன்கள் துள்ளிவிழுவதை விரும்பாத அடிகள் ''கருக்குழி கழியப் பாய்ந்து'' என்று கூறுகின்றார்கள். அப்படியானால் உயிர் மீன்கள் எங்கே பாயவேண்டும்? அவை இப்பொழுது இருப்பதோ குறுகிய உவர்நீர்க்கேணி. அதை விடுத்தாலோ நுளையன் கையில் சிக்கவேண்டும். துள்ளிப் பாய்ந்துவிட முயற்சித்தாலோ தள்ளிவிடக் கருக்குழி காத்துக்கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தப்பி அவை இன்படையப் பெருங்கடலுள் பாயவேண்டும். அக்கடலைத்தான் அடிகள் ''இறைவனது அருட்பெருங்கடல்'' என்கின்றார். அப்படி அம்மீன்கள் அருட்பெருங்கடலில் குதித்துவிட்டால் பின்பு என்னசெய்யும்? அலைகளோடு உலாவித்திரியும். அருட்கடலில் பேரானந்தமாகிய அலைகள் எழுந்தவண்ணம் இருக்கின்றன, இவ்வலைகளில் உயிர் மீன்கள் உலாவவிழையும் அடிகள் ''பரமானந்தத் திரையொடும் உலாவி'' என்கின்றார்கள். இப்படிப்பட்ட ஆனந்தத்தை உயிர் மீன்கள் எப்படி அடைவது? நுளையனுக்குத் தப்பியல்லவா ஆனந்தமெல்லாம்? அதற்கு உள்ள வழி ஒன்றுதான். அது

என்ன வழி? நுளைக் கூற்றுவனைவிட ஆற்றல்படைத்த ஒருவர் வந்தால்தான் மீன்களை அவனிடமிருந்து தப்பச் செய்யமுடியும். அப்பொழுதுதான் அவன் முயற்சி தோல்வியுற வெட்கத்தால் விம்மிதம் அடைவான். அவ்வாற்றல்படைத்த பெரியோன் ஆரூர்ப்பெருமானே அவன் சிறிது கடைக்கணித்தால் உயிர் மீன்கள் உய்ந்துவிடும், இங்கே அடிகள் வேண்டுவதும் அது தான். பெருமானே! நீ சிறிது கடைக்கண் நோக்கால் அருள் புரியின் உயிர் மீன்கள் பேரானந்தமடையும் என்பார். "எய் தரும் பெருமிதம் எய்த - ஐயநின் கடைக்கண் அருளுதி" என வேண்டுகின்றார். இக்கருத்தோவியத்தைக் கீழ்வரும் திருவாரூர் நான்மணிமாலை அடிகளில் கண்டு மகிழ்க.

தீநிறக் கடவுள்நின் கான்முறை வணங்குதும்
கூற்றெனப் பெயரிய கொடுந்தொழில் நுளையன்
ஊற்றமில் யாக்கை உவர்நீர்க்கேணிப்
புலத்தலை உயிர்மீன் அலைத்தனன் பிடிப்ப
ஐவளி பித்தென அமைத்து வைத்திருந்த
முத்தலைத் தூண்டில் தூண்டி அத்தலை
வாழ்நாள் மிதப்பு நோக்கித்தாழாது
அயிறலைத் தொடங்கி எயிறலைத் திருத்தலில்
தள்ளா முயற்சி தவறு பட்டொழிந்தன
வெள்குறீஇ மற்றவன் விம்மிதன் ஆக
அருட் பெருங்கடலின் அவ்வாருயிர் மீனம்
கருக்குழி கழியப் பாய்ந்து தெரிப்பரும்
பரமானந்தத் திரையொடும் உலாவி
எய்தரும் பெருமிதம் எய்த
ஐயநின் கடைக்கண் அருளுதி எனவே"

"இந்தியாவில் எல்லா மொழிக்கும் பொதுவான எழுத்துக்கள் தயாரிக்கப்படவேண்டும். அதுதான் நல்லது" என்று ஜஸ்டிஸ் மாக், அண்ணாமலைநகரில் ஓர் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசும்போது சொன்னார்.

'உலகத்துக்கே பொது மொழி கண்டு பிடிக்கப்பட்டு அதில் 18 பத்திரிகைகளும் வெளிவருகின்றன.'

சிவபெருமான் திருவந்தாதி

பதிநொராம் திருமுறை

(பரணர்)

திரு. பண்டித அ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள்,
தமிழாசிரியர், தருமபுரம்.

திருக்கழிப்பாலை யமக வெண்பா

1. தாமென்ன நாமென்ன வேறில்லை தத்துறவில்
தாமென்னை வேருத் தனித்திருந்து—தாமென்
கழிப்பாலை சேருங் கறைமிடற்ருர் என்னே
கழிப்பாலை சேருங் கடன்.

நுதலியது.— "உலகெலாம் ஆகிவேருய் உடனுமாய் நிற்கும்" இறைவனது தன்மை பாராட்டப்படுகிறது. அஃதாவது:— இறைவன் ஆன்மாக்கள்தோறும் கலந்திருத்தலினுல், அவையே யாகியும், பொருட்டன்மையால் அவற்றின் வேறு ஆகியும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனுகியும் நிற்கும் உண்மை.

பதப்பொருள்:- தத்து - கலந்து நிற்கின்ற, உறவில் - சம்பந்தத்தால், கலப்புத்தன்மையால் தாம் என்ன நாம் என்ன வேறு இல்லை - பதியென்றும் பசுவென்றும் வேறு இல்லை (அப்படியிருந்தும் பொருள்தன்மையால்) தாம் - பதியாகிய இறைவன், என்னை-ஆன்மாவாகிய என்னை. வேறு ஆ-வேறு ஆக, தனித்து இருந்து - தான் தனியே இருந்தும், தாம் என் - தானே என்று சொல்லும்படியான, கழிப்பாலை - திருக்கழிப்பாலை யென்னும் பதியில் சேரும் - எழுந்தருளியுள்ள, கறைமிடற்ருன் - சிவபெருமான், (மீளவும்) கழி - வேருக ஒதுக்கப்பட்ட பாலை - பான்மையையுடைய ஆன்மவர்க்கத்தை, சேரும் - சேர்ந்து உடனுய் நிற்கும், கடன் - தன்மை, என்னே - வியப்பாயுள்ளது.

கலப்புத்தன்மையால் - உயிரும் உடம்பும்போல ஒன்ருயிருக்கும் இறைவன், பொருட்டன்மையால் கண்ணும் அருக்கனும்போல வேருக இருந்தும், உயிர்க்குயிராம் தன்மையால், கண்ணொளியும் ஆன்மபோதமும்போல அத்துவிதமாய்க் கலந்திருக்கும் தன்மை யென்னே யெனப் பாராட்டியவாறு.

குறிப்பு:- தத்துதல் - கலத்தல் என்னும் பொருளிலும், கடன் - தன்மையென்னும் பொருளிலும் வந்தது. இலக்கணை - கழிபாலை - வினைத்தொகை எதுகைநோக்கி மிக்கது; கழித்தலை யுடைய பாலையென்று வேற்றுமைத் தொகையாக்கினும் ஆம்.

தாம் என் கழிப்பாலை - என்ற கருத்து - மூர்த்திமானாகிய இறைவன், தீர்த்த ரூபமாயிருப்பது போலவே ("சென்றாடு தீர்த்தங்களானார் தாமே") தலரூபமாகவும் இருக்கின்றான் என்பது. இதனை, "கமழ்புனற் காஞ்சித் தீர்த்தமாய்ப் பேரூர்க் கடி வரைப்பாய்......மூர்த்தியும்......ஆகி......யருளும் வித்தகா" என்ற கச்சியப்ப முனிவர் வாக்காலும் அறிக.

பாலை - பான்மை; ஐ - பண்புப் பெயர்விகுதி, தொன்மை யென்ற சொல் - தொல்லையென்று வருதல்போலப் பான்மை யென்றசொல் பாலையென வந்தது. இருந்தும் - என்ற சொல்லில் உம்மை விகாரத்தால் தொக்கது.

2. கரியார்தாஞ் சேருங் கலைமறிகைக் கொண்டே
கரியாதாஞ் சேருங் கவாலி—கரியாகி
நின்ற கழிப்பாலை சேரும் பிரான் நாமம்
நின்ற கழிப்பாலை சேர்.

நுதலியது.— "குறிகளும் அடையாளமும் கோயிலும், நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்" உணர்த்தி ஆன் மாவை வழிப்படுத்தியது-

குறி - கவாலி யென்பதனாலும், அடையாளம் - கலைமறிக் கைக்கொண்டு என்பதனாலும், கோயில் - கழிப்பாலை என்பத னாலும், நெறி-நாமம் நின்ற என்பதனாலும், அவர் நின்றதோர் நேர்மை - கரியாகிநின்ற என்பதனாலும் உணர்க.

(பதப்பொருள்):- கரியார் தாம் - பாவிகளாகிய தாருக வனத்து முனிவர், சேரும் - சேர்த்திய (ஏவிய), கலைமறி - மான் கன்றை, கைக்கொண்டே - கையில் ஏந்தியே, கரியார் தாம் - பெருமை பொருந்திய மெய்யடியார்கள், சேரும் - சரண்புகு தற்குக் காரணமாய் விளங்கும், கவாலி - கபாலியென்னும் பெயரையுடையவனும், கரியாகி - "மண்ணின்மிசை வாழ்வார் கள் பிழைத்தாலும், வந்தடையில்" காப்பவன் தானேயெனற்கு எடுத்துக்காட்டாகி, நின்ற - விளங்குகின்ற, கழிப்பாலைசேரும் -

853.

திருக்கழிப்பாலையென்னும் பதியில் எழுந்தருளியுள்ள, பிரான் - தலைவனுமாகிய சிவபிரானின், நாமம் - பெயராகிய திருவைந்தெழுத்தில், நின்று - நிற்கும் முறையில் என்று, இப்பாலை - (பாலை நிலம்போல் வெம்மையுடையதும், பயனற்றதும் ஆகிய) இப்பாச வாழ்க்கையில், சேர் - சேர்தலாகிய விருப்பை, அகழ் - நெஞ்சே நீ வேரோடும் கல்லி யெறிவாயாக.

குறிப்பு:- (கரியாகி) நின்ற - பிரான் (கழிப்பாலை) சேரும்-பிரான் நாமம் நின்று இப்பாலைசேர் (தலை) அகழ் எனக் கொண்டு கூட்டுக.

கரியார் - பாவிகள்; கருமையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்; பாவத்தின் நிறம் கருமை, புண்ணியத்தின் நிறம் வெண்மையென்று கூறுதல் மரபு. இரண்டாம் அடியில் கரியார்—என்ற சொல்லில் கருமை - பெருமையென்னும் பொருளது. "கருந்தனம் கைத்தலத்த" என்புழிப்போல (குமர குருபரர்,) முதலடியிற் சேரும்-என்ற சொல்லில் பிறவினை விகுதி தொக்கது.

கொல்லவந்த மானைத் தாங்கிய தண்ணளியை நினைந்து அடியார் சரண்புக நின்றவன் நின்பதனைக் கலைமறிக்கைக் கொண்டே கரியார் சேரும் கவாலி என்பதனாற் குறித்தார்; இன்னும் அடியார்சேரும் கவாலியென்பது - கபாலம் ஏந்திப் பிச்சையெடுப்பானைப் போன்றான் எனினும், "குடங்கை நீரும் பச்சிலையும் இடுவார்க்கு இமையாக் குஞ்சரமும் படங்கொள் பாயும் பூவணையும் தருவான்" என்ற உண்மைத்தன்மையில் ஈடுபட்டுச் சேர்வர் அடியார் என்பது குறித்ததுவுமாம். கவாலி - தலத்து இறைவன் திருப்பெயர் "கழிப்பாலைசேரும் கபாலப் பனூர்" (அப்பர்.)

திருவைந்தெழுத்தின் ஓதும்முறை நிற்கும்முறை இரண்டில் பிரான் நாமம் நின்று என நிற்கும்முறை கூறவே, அதற்குமுன் நிகழ்வதாகிய ஓதும் முறையும் கூறியதாயிற்று, பாலை - பாச வாழ்க்கைக்கு உவமையாகுபெயர், சேர் - என்ற சொல் முதனிலைத் தொழிற்பெயர். அகழ் - என்பது பகுதியே நின்று ஏவற்பொருண்மை யுணர்த்தியது. நிறை - காலவழுவமைதி.

554

கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

கட்டுரை எண். 7.

வரவேண்டும் :

மனோவதி நகரம். இதுதான் பிரமாவினது சத்திய லோகத்தின் தலைநகரம். அங்கே உபபிரமாக்கள், தண்டமும் கமண்டலமும் செபமாலையுந் தாங்கிய முனிவர்கள், அந்தணர்கள் இவர்களின் பெருங்கூட்டம். எங்கும் யாகமும், யோகமும், பாராயணமும். இப்படித் தெய்வக்கலை திகழும் மனோவதி நகருக்கு மீளுகின்றான் பிரமன். அவரோடு இந்திரன், எமன், வருணன், அக்னி, அசுவினிதேவர்கள் முதலிய முப்பத்துமுக்கோடி தேவகூட்டர்களும் வந்தனர். வந்ததும் வாராததுமாகக் காரியத்தில் கண்ணாக இருக்கிறார் பிரமன். மன்மதன் விரைந்து இங்கே வரவேண்டும் என்று எண்ணுகிறான். அவன்முன்னே பரிவாரங்களுடன் வந்து நிற்கிறான் மன்மதன்.

இந்திரன் வானவ ரீட்டமோ டேகி
முந்துறு கஞ்ச முகட்டிடை யுற்றோன்
ஐந்திற னாகிய வாசுக வில்வேள்
வந்திடு மாறு மனத்தில் நினைந்தான்.

(காமதகனப் - 1)

(ஈட்டம் - கூட்டம்; கஞ்சமுகட்டிடை - தாமரைப்பூவின்மேல்; ஐந்திறனாகிய ஆசுகம் - நினைக்கச்செய்வதும், பசலையுறச்செய்வதும், மயங்கச்செய்வதும், சொல்வது முதலாகிய ஐந்து தொழில்களைச்செய்யும் தாமரையும், மாம்பூவும், அசோகமும், முல்லையும், நீலப்பூவும் ஆகிய ஐந்து புஷ்பங்களாகிய பாணங்கள்; ஆசுகம் - பாணம்.)

பிரமதேவன் சபையில் மன்மதன்

855

அண்ணு! வணக்கம். வேதங்களையோதி ஒழுக்கமலையின் உச்சியிலிருந்த தாங்கள் என்னையும் ஒரு பொருளாக எண்ணி நினைத்தது என்பாக்கியமே. நான் செய்யவேண்டிய காரியம் என்ன? என்று கேட்கிருன் மன்மதன்.

தப்பீ! உன்ஞல் ஒரு பெரியகாரியம் ஆகவேண்டியிருக் கிறது. எங்களுக்குத்தான் பெரிது. உனக்கோ மிகச் சிறியது. அதனை முடித்துத்தருவாயா?

அண்ணு! தங்கள் ஆணையை என்றைக்காவது தட்டிக் கழித்ததுண்டா? என்ஞல் முடியுமாஞல் செய்யத் தடை யென்ன?

தம்பீ! முடியாததையாசொல்லுவேன். உன் வல்லமைக்கு இந்தக்காரியம் மிகமிக லேசானது என்பது எனக்குத்தெரியும்.

அண்ணு! அப்படியாஞல் சொல்லத் தடையென்ன?

தம்பீ! ஒன்றும் பிரமாதமான காரியமல்ல! இப்போது பரமசிவன் மேருமலையின் தெற்குச் சிகரத்தில் வடவால மரத்தின்கீழே யோகியாக உட்கார்ந்துகொண்டிருக்கிருரே! உனக்குத் தெரியுமா? பராசக்தி இமயமலையரசன் மகளாகப் பிறந்து தவஞ்செய்துகொண்டிருக்கிருளே! அதுதான்! உனக் குத் தெரியுமா?

ஆம்! ஆம்!

ஆமாம் ஆவது! உன் வெற்றி பலிக்கிறதா? எண்ணிப் பார்த்தாயா?.........! என்ன தம்பீ!

அண்ணு! அதுசரி, தங்களுக்கு இப்போது ஆகவேண் டியது என்ன?

தம்பீ! கொஞ்சம் சிவபெருமானுடைய மௌனத்தைக் கலைத்துவிடவேண்டியதுதான்

அதற்கு என்னசெய்யவேண்டும்?

யோகத்திலிருக்கும் அவர் மனத்தடாகத்தில் காதல் வெள்ளத்தை நிறையச்செய்யவேண்டும்; பார்வதியைத் திருமணம் செய்துகொள்ளும்படியாகத் தூண்டவேண்டும்; இவ்வளவுதான்.

கங்கை மிலேச்சிய கண்ணுதல் வெற்பின்
மங்கையை மேவ நின்வாளிகள் தூவி
அங்குறை மோனம் அகற்றினை யின்னே
எங்கள் பொருட்டினில் ஏகுதி யென்றான்.

(காமதகனப். 4)

மிலேச்சிய - சூடிய; கண்ணுதல் - நெற்றிக்கண்ணராகிய சிவ பெருமான்; மேவ - விரும்ப; வாளிகள் - அம்புகள்.

பிரமன் சொல்லும்போதே சிவபெருமானுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்கக், 'கண்ணுதல்' என்கிறான். மன்மதன் நெற்றிக்கண்ணால் நீறாகப்போவது அவனையறியாமலே அவன் வாக்கில் வந்துவிடுகிறது. பார்வதியைப் பிரிந்திருந்தாலும் உன் பாணம் அவரிடம் பலியாமற்போகாது. தலையிற் கங்காதேவியைச் சூடிக்கொண்டிருக்கிறார் என்று தைரியம் கொடுக்கிறான்.

உரையாலேயே உள்ளம் எரிந்தது:—

பிரமன் சொன்ன வார்த்தையாகிய நெருப்பு காது வழியாக உள்ளே புகுந்தது. உள்ளமே எரிந்தது. இப்படி அருவாகிய மனமே எரிந்துவிடுமானால் பின்னர் உடல் எரிவதைப்பற்றிச் சொல்லவாவேண்டும்?

மன்மதன் இரண்டுகாதுகளையும் பொத்திக்கொண்டான். தகாதவார்த்தையைக்கேட்ட பாவத்திற்காகச் 'சிவ சிவ', 'சிவ சிவ' என்று சொல்லிக்கொண்டான். நெருப்பில் வீழ்ந்து,

 857

வாடிய மலர்போல வாடினான்; அழகு அழிந்தான்; கொஞ்சம் தேறி அண்ணாவைப்பார்த்து அறிவிக்கத் தொடங்குகிறான்.

அண்ணா! எத்தனை தான் ஆகாதவனாக இருந்தாலும் வீடு தேடிவந்தவனுக்கு நற்புத்திசொல்லி நல்லவழிகாட்டுவார்கள் உயர்ந்தோர்கள். உன்னிடம் வந்ததற்கு இந்தத் தகாத வார்த்தையையா தாங்கள் சொல்வது? நான் உயிர்வாழ்வதில் தங்களுக்கு விருப்பமில்லையோ?

உலகத்திலே என்பெருமை பெரிதுதான்! ஆனாலும் இடம்பார்த்துக்கொள்ள வேண்டாமா? எங்கள் தாத்தா பூதேவி, சிதேவி என்ற இருபாட்டிகளைக் கல்யாணம்பண்ணிக் கொண்டிருந்தாலும், என்னம்பைச் செலுத்தினேன். அவ்வளவுதான் அவர் அந்தவயதிலும் பதினாறாயிரம் கோவியர்களைக் கலந்தார்கள்.

தாங்கள் எப்படி? கலைமகள் என்ற எனது மதனியார் இருந்தும் திலோத்தமையாகிய மகளைத் தேடித் தொடர்ந்தது யாரால்? என் வீரத்தாலல்லவா?

வைகுந்தவாசராகிய திருமால்கதி எப்படி? எப்போது பார்த்தாலும் திருமகளாகிய என்பாட்டியைத் தூக்கி மார்பிலேயே வைத்துக்கொண்டிருக்கச் செய்துவிட்டேன். இதோ உங்கள் பக்கத்திலிருக்கிறாரே! தேவராசர். இந்திரன். அவர் உடலே எனக்கு ஒரு நற்சாட்சிப்பத்திரமாயிற்றே! வசிட்டன், மரீசி, காசியபர் முதலிய முனிவர்கள்நிலை எப்படி? இப்படி எல்லாரையும் எல்லாம் செய்துவிட்டேன். இந்த வெற்றி எனக்கு எப்படி உண்டாயிற்று? எல்லாம் இறைவன் என்மீதுவைத்த கருணையினால் அல்லவா? அப்படியிருக்க அவரையே.........

அண்ணா! இது கிடக்கட்டும்; கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள்! பெரிய புயற்காற்றின்முன் பூளைப்பஞ்சா எதிர்த்துப்போராடுவது! இதுவரை இறைவனை எதிர்த்து வென்ற

வர்கள் யார்? தங்களுக்குத் தெரியாததல்லவே! அன்றைக்கு இந்தத் தேவர்கள் எல்லாரும் திரிபுராரிகளிடம் அகப்பட்டுக் கொண்டு விழித்தார்களே! அப்போது அவருடைய புன்சிரிப் பல்லவா அவர்கள் கோட்டையைச் சாம்பலாக்கியது.

ஒருநாள், மார்க்கண்டன் என்ற பிராமணப்பையனுக்காக எமனை உதைத்தாரே! அப்போது எமன்பட்டபாடு நாமெல் லாம் அறியாதது அல்லவே!

அதுகிடக்கட்டும், தாங்களும் தாத்தாவுமாக 'நான்தான் பெரியவன், நான்தான் பெரியவன்' என்று சண்டைபோட்டுக் கொண்டீர்களே! அன்றைக்கு அழல் மலையாக வந்து அறிவு கொடுத்தது மறந்தாபோயிற்று! அவர்கையில் ஒரு கபாலம் இருக்கிறதே! அது தங்களுடைய ஐந்தாந்தலையின் ஓடுதானே! யானையையுரித்துப் போர்த்திய வீரம் மறந்தாபோயிற்று? புலியையுரித்த வீரமும் உள்ளத்தைவிட்டகலவில்லையா?

அகந்தைகொண்டவர்கள் அனைவரையும் அடக்கியாளும் அவரையா என்னம்பு வெல்லும்? நன்றாயிருக்கிறது தங்கள் பணி என்று மறுத்துரைக்கின்றான்.

இதைக்கேட்ட பிரமன், பெருமூச்சு விடுகிறான். கண் எங்கோ நாடுகிறது. கருத்து சுழிகிறது. கவலை முகங்களைக் கதுவிநிற்கின்றது. மூச்சுமில்லை; பேச்சுமில்லை; ஓரேமௌனம். இப்படிக் கொஞ்சநேரம் போயிற்று.

பின்பு, பிரமன்; தம்பீ! நீ சொல்வதெல்லாம் முற்றிலும் உண்மை. இந்தத் தேவர்கள் வெள்ளையறிவு படைத்தவர்கள். விநயம் இவர்களுக்கு இந்தப்பிறப்பில் வரப்போவது இல்லை. விநயமில்லாத வெள்ளைப்புத்திகாரர்களாகிய இந்த விண்ணவர் களுக்கு விடையேறும் பெருமான் அருள் எங்கேகிடைக்கப் போகிறது. அவர்தான் இவர்களுக்கு எங்கே கிட்டப் போகிறார். அதனாலே அவரை வெல்வது வேறுயாராலும் முடியாதகாரியந்தான்,

859

வெண்மை யறிவால் தமைவியக்கும் விண்ணவர்பால்
அண்மையில ஞரு மண்ணலியல் கூறினையால்
உண்மை யிதுவா முவனைப் பொருவதுவும்
எண்மை யதுவோ வெவர்க்கு மரிதன்றே.

(காமதகனப் - 38)

(வெண்மையறிவு - தன்னை வியந்து அறிவை அவமதிக்கும் உள்ளீடில்லாத அறிவு; எண்மை - எளிமை.)

எல்லாம் அவன்செயல்:

ஏதோ! கடவுள் கருணையால் இந்தக்காரியம் உன்னால் தான் முடியும்; மற்றவர்களாலே முடியவே முடியாது. கொஞ்சம் சிந்தித்துப்பார்! யார் எதைச் செய்தாலும் அது அவனியக்கவே நடைபெறுகிறது. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' அல்லவா? ஆதலாலே உன்னை நாங்கள் ஏவுவதும், நீ போவதும், அவர்மேலே பாணம் போடுவதும் எல்லாம் அவன் அருளே.

இன்னும்பார்! அன்று ஒருநாள் இறைவன் ஒரு அன்னியனைப்போல வந்து ஒரு துரும்பை நட்டுவைத்து அதற்குப் பேராற்றலை அளித்து இந்தத் தேவர்கள் எல்லாரும் ஆச்சரியப்படும்படிச் செய்துவிட்டார் அல்லவா?

அவர்சந்நிதியில் நாமெல்லாம் பொம்மைகள். அவர் ஆடச்செய்கிறார் நாம் ஆடுகிறோம்; அவ்வளவுதான். ஆதலால் இறைவன் எங்களை வேண்டச்செய்கிறார். நாங்கள் உன்னை வேண்டுகிறோம் இறைவன் உன்னைச் செய்விக்கிறார். நீ செய்யப்போகிறாய். இவ்வளவே; இதனை மறுக்காதே.

இன்னுங்கேள்; ஒருவன் பெரிய ஆபத்தில் சிக்கிக்கொண்டான். உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறான். அப்போது தன் உயிரைக்கொடுத்தாவது அவனைக் காப்பது தான் வீரன் கடமை. அதைவிட்டுத் தன் உயிரைப் பெரிதாக மதித்து மறுப்பதா அழகு?

எவருக்காயிருந்தாலும் ஏதாவது உதவி தேவைப்படு மாஞல் தானே தெரிந்து முடித்துவைப்பது உத்தமம். 'ஐயா! எனக்கு உதவுங்கள்' என்று அவன் கேட்டுக்கொண்டபிறகு உதவிசெய்வது மத்திமம். அவன் கேட்டுக்கொண்டபிறகும் பலநாள் மறந்தாற்போல இருந்து, 'அதெல்லாம் முடியாது' என்று மறுத்தும் சொல்லி, அவன் விடாக்கண்டஞக மீட்டும் மீட்டும் வேண்டிக்கொள்ள அதன்பின் உதவுதல் அதமம்.

யாருக்கும் உதவிசெய்யாமல் வாழுகின்ற அற்பன் வாழ்க்கை பொய்கையில் மலர்ந்த கொட்டிமலர்போலப் பயன் படாத வாழ்க்கைதான். சிவபெருமான் ஆலாலம் உண்டது எதற்காக? தேவர்களைக் காப்பாற்றத்தானே!

ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்யப்போய்த் துன்பப்பட் டாலும், அல்லது தொலைந்தேபோனுலும் அவர்களடைவது பெரும்புகழே. என்னவோதம்பீ! நாங்கள் சூரபன்மன் ஆட்சியில் அவதிப்படுகிறேம். சிவபெருமானிடம் சேனைத் தலைவனை வேண்டினேம். அவர் ஆகட்டும் என்றருளினுர். காலங்கடந்துபோகின்றது. துன்பம் தாங்கமுடியவில்லை. உன்னைக்கொண்டு அவர்மனத்தை மாற்ற முயற்சிக்கிறேம். ஆதலால் உனக்குச் சாக்காடே வந்தாலும் சரி; சொன்னதைச் செய்; 'போ; எதிர்த்துப்பேசாதே' என்று வற்புறுத்துகிறுன்.

(வரும்)

இனிய சொற்கள் இருக்கும்பொழுது கடுஞ்சொற்களைப் பேசுதல் இனிய கனிகள் இருக்கும்பொழுது இனிமை செய்யாத காய்களை விரும்புவதை ஒக்கும்.

861

அங்கமாலை

வித்துவான் திரு. மு. சண்முகம்பிள்ளை அவர்கள்

இலக்கண மரபு

'அங்கமாலை' என்பது ஒருவருடைய தலைமுதலிய உறுப்புக்களை வரிசையாக வருணித்துரைக்கும் பிரபந்தமாகும். அங்கங்களை அடிதொடங்கி முடிகாறும் வருணித்துச் செல்வதும், முடியிலிருந்து அடிவரை வருணிப்பதும் மரபு. வெளிவிருத்தப் பாவினால் பாடுவதையே அங்கமாலை என்ற பெயரால் இலக்கண நூலார் குறித்துள்ளனர். கலிவெண்பாவினால் பாதம் முதலாகவும் கேசம் முதலாகவும் தொடங்கிப் பாடினால் அவற்றைப் 'பாதாதிகேசம்' என்றும், 'கேசாதி பாதம்' என்றும் தனித்தனிப் பெயரால் அழைப்பர்.

நிறுத்த வெளிவிருத்தம் நீடுறுப்பில் வந்தால்
குறித்தங்க மாலையாக் கொள்க - உறுப்பமைந்த
பாதாதி கேசமும் கேசாதி பாதமுமாம்
ஓதுங் கலிவெண்பா வொன்று

(வெண்பாப்பாட் - செய் 29)

என்பது வெண்பாப் பாட்டியல் விதி. இவ்விதியை ஒத்தே சிதம்பரப் பாட்டியல் முதலிய ஏனைய இலக்கண நூல்களும் கூறுகின்றன: இதனால் அங்கமாலை, பாதாதி கேசம், கேசாதி பாதம் என்பன மூன்றும், மூன்று வேறுபட்ட பிரபந்தங்கள் எனத் துணியலாம். பிற்காலத்தெழுந்த நூலாகிய தொன்னூல் விளக்கத்தில் 'அங்மாலை' என்ற பிரபந்தத்தின் கூறுகவே 'பாதாதிகேசமும்' 'கேசாதிபாதமும்' அமைத்துக் கூறப் பட்டிருக்கின்றன. அதோடு வெளிவிருத்தாலேனும் கலி வெண்பாவினாலேனும் இப்பிரபந்தம் பாடப்பெறலாம் எனவும் இந்நூலாசிரியராகிய வீரமாமுனிவர் தெரிவித்துள்ளார்.

அங்க மாலையே அங்க வகுப்பெல்லாம்
பாதாதி கேசமும் கேசாதி பாதமும்
கலிவெண்பா வாதல் வெளிவிருத்த மாதல்
வலிதெனப் புகழ்ந்து வகுத்த செய்யுளே

(செய். பா 12)

என்பது தொன்னூல் விளக்கச் சூத்திரம். இதன்படி 'அங்க மாலை' என்பதே பிரபந்தப் பெயர் என்பது வெளிப்படுகிறது. 'பாதாதிகேசம்' 'கேசாதி பாதம்' முறையில் அமைந்த வருணனைகளைச் சிறப்பாக உலா, தூது, மடல் முதலிய சிறு பிரபந்தங்களிலும் பிற இலக்கியங்களிலும் காணலாம். இப் பெயர்களால் தனிப்பிரபந்தங்கள் வழங்குவதாகத் தெரியவில்லை. ஆனால், அங்கமாலை என்ற பிரபந்தவகை அங்ஙனமன்று; இலக்கிய வழக்கில் இடம்பெற்றுள்ளது.

நாவுக்கரசர் திருவங்கமாலை

திருநாவுக்கரசரது தேவாரப் பாசுரங்களில் 'திருவங்கமாலை' என்ற ஒருபகுதி உள்ளது. இவரது திருவங்கமாலை மேற்கூறிய முறையில் பாட்டுடைத் தலைவனது அங்க வருணனையாக அமையவில்லை. நாவுக்கரசர் தம்முடைய அங்கம் ஒவ்வொன்றையும் இறைவன் திருப்பணியில் ஈடுபடும்படி ஏவுகின்றார். ஆகவே, இவரது அங்கமாலை பிரபந்த இலக்கண நூல்களில் காணும் முறையில் சிறிது மாறுபட்டுள்ளது. எனினும், என்ற பெயரில் அமைந்த பிரபந்தவகை வேறு புலவர்கள் வாக்கில் உருப்பெற்றதாகத் தெரியவில்லை.

திருநாவுக்கரசர் தெய்வபக்தி

திருநாவுக்கரசர் தம் அங்கங்களையெல்லாம் ஆண்டவன் திருப்பணியில் ஈடுபடுமாறு பாடிய இந்தப் பக்திநிலையைப் பெற்ற வரலாற்றைச் சிறிது பார்ப்போம். நாவுக்கரசர் சைவ சமயாசாரியார் நால்வருள் ஒருவர். பெண்ணையாறு பாயும் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரில் அவதரித்தவர். இந்நாடு இப்பொழுது தென்னார்க்காடு ஜில்லா என வழங்கும். நாவுக்கரசர் வாழ்ந்த காலம் கி. பி. 7-வது நூற்றாண்டாகும். இருடைய பெற்றோர்களாகிய புகழனார் - மாதினியார் இருவரும் இவரது இளமைப் பருவத்தே காலஞ்சென்றனர். பின், இவர் தம் தமக்கையார் திலகவதியார் ஆதரவில் வளர்ந்து வந்தனர். இளமையில் இவர் அறிவு நூல்கள் பலவற்றையும் சந்தேகமறக் கற்றுத் தெளிந்தார்; இக்கல்வியின் பயனாகத் தருமம் பலவும் செய்துவந்தார். சோலைகள் நிர்மித்தல், குளம் அமைத்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல் முதலிய அறங்களை யேற்றினார்.

863

அக்காலத்தில் சமணசமயமே சிறந்தது என்ற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. அதனால் சைவமதம் விட்டுச் சமணமதம் புகுந்தனர். தமது ஊரை விட்டு நீங்கிச் சமணர்கள் மிகுதியாக வாழ்ந்துவந்த திருப்பாதிரிப் புலியூர் சென்று வசித்தார்; அங்குள்ள சமணர்களுக்கெல்லாம் தலைவராகவும் விளங்கினார். திலகவதியாரோ மிகவும் வருத்தமுற்றனர்; தமது தம்பியாரைச் சைவத்திற்குத் திரும்பிவரச் செய்யவேண்டுமென்று, திருவதிகைச் சிவபெருமானை அனுதினமும் வேண்டிவந்தார். இறைவன் இவரது வேண்டுகோளுக்கு இரங்கி அருள் சுரந்து திருநாவுக்கரசருக்குச் சூலைநோய் அருளிப் பின் அதனைத்தீர்த்து அவரை ஆட்கொண்டார். இதன்பின்தான் நாவுக்கரசர் சிவபக்தி மிகுந்து செந்தமிழ்த் திருப்பாட்டுக்களைப் பாடினார்.

தீவிர பக்திநெறி

நாவுக்கரசர் தமது பக்தி முதிர்ச்சியால் ஆற்றிவந்த திருப்பணிகள் பலவாம். சிவபெருமான் கோயில் கொண்டருளும் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று பாமாலைபாடி வணங்கியதோடு, தமது கையில் உழவாரப் படையைத் தாங்கி உடம்பினாலும் திருத்தொண்டு புரிந்து வந்தார். இவரைக் குறித்துச் சேக்கிழார் பெருமான் வருணிக்கின்ற பாடல்களிலே இவரது தீவிர பக்திநெறி நமக்குத் தெளிவாகத் தெரியவருகிறது.

தூய வெண்ணீறு துதைந்தபொன் மேனியும்' தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரு சிந்தையும், நைந்துருகிப்
பாய்வது போல்அன்பு நீர்பொழி கண்ணும், பதிகச்செஞ்
சொல்
மேய செவ் வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே

(பெரிய. நாவுக். 140)

என்றும்,

கையும் தலைமிசை புனை அஞ்சலியன
கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யுந் தகையன கரணங்களுமுடன்
உருகும் பரவின பேறெய்தும்
மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்
மின்தாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவினால்

(பெரிய. நாவுக் 167.

864

என்று வரும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்கள் நாவுக்கரசரின் பக்திக் கோலத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. நாவுக்கரசரது திருமேனியிலே திருநீறு இலங்குகின்றது; சிந்தை சிவபெருமான் பாதங்களைச் சதா நினைந்து கொண்டிருக்கிறது. கண்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்துகொண்டிருந்தன. வாயோ செந்தமிழ்த் திருப்பதிகங்கள் பாடிற்று. கைகளைத் தலைமேலே குவித்து வணங்குகின்றார். எல்லாக் கரணங்களுமே அன்பினால் உருகுகின்றன. இங்ஙனம் பக்தி செய்து வாழ வேண்டும் என்பதே நாவுக்கரசரின் பெருவிருப்பமுமாகும்.

> வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
> தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை
> சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
> வீழ்த்தவா வினையேன் நெடுங்காலமே

என்ற தமது திருப்பாட்டொன்றில் இறைவன் அவயவங்களை ஈந்ததன் பயனைப் பெற்றோமில்லையே என்று இரங்குகின்ற தன்மை நன்கு புலப்படுகிறது

> கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை. (குறள் - 9)

எனத் திருவள்ளுவர் அருளிய குறளும் நாவுக்கரசரது கருத்தைத் தெளிவுறுத்தல் காணலாம்.

திருநாவுக்கரசரது திருப்பாட்டு

நாவுக்கரசர் பாடிய அருட்பாடல்கள் தேவாரத்தில் ஒரு பகுதியாய் அமைந்துள்ளன. இவற்றை மூன்று கூறுகப் பகுத்திருக்கிறார்கள். சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் 4, 5, 6, ம் திருமுறைகளாக இவை அமைந்திருக்கின்றன. நான்காவது திருமுறையில் திருவிருத்தமும் திருநேரிசையும் அடங்கியுள்ளன. ஐந்தாவது திருமுறை திருக்குறுந்தொகை என்று சொல்லப்படும். ஆறாந்திருமுறை முழுவதும் திருத்தாண்டகம் என்றும் செய்யுள் வகையாலானது. ஆகவே, இது திருத்தாண்டகம் என்று வழங்கப்படும். இவற்றுள் நான்காம் திருமுறையில் ஒன்பதாவது பதிகமாக உள்ளது திருவங்கமாலை. தமது திருப்பாட்டுக்களினிடையே சிற்சில இடங்களில் தமது அங்கங்களை இறைவன் திருப்பணியில் ஈடுபடுமாறு குறிப்பிட்டுள்ள திருநாவுக்கரசர், திருவங்கமாலைப் பாசுரங்களில் அங்கங்களை இறைவன் விஷயத்தில் ஐக்கியமாமாறு ஆணைசெய்கின்றார். (வரும்)

துலா மாதம்

சிவாகம வித்துவான்,
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார், அவர்கள்,
தலைமை ஆசிரியர், வேத சிவாகம பாடசாலை, தருமபுரம்.

கேட்டல், துதித்தல், நினைத்தல், திருவடி வணங்குதல், அர்ச்சித்தல், வந்தித்தல் தொண்டுசெய்தல், தோழமைபூண்டல், ஆன்மஸமர்ப்பணம் செய்தல் என்ற இந்த ஒன்பதுவிதமான பக்தியுள் நடுநாயகமாக விளங்கும் அர்ச்சித்தல் என்பது, ஆகமத்தில் பூஜா என்று கூறப்படுகிறது.

पूर्यन्ते सर्वकर्माणि जायते ज्ञानमात्मनि ।
पूरणाज्ञायते यस्मात्पूजाशब्दमिहोच्यते ॥

காரணாகமம்.

ஸகல கர்மாக்களும் எதனால் பூரணமாகச் செய்யப்படுகிறதோ? ஆன்மாவினிடத்தில் எதனால் ஞானம் உண்டாகிறதோ? ஆதலால் பூஜை என்று கூறப்படுகிறது.

இந்த பூஜையானது நித்யம், நைமித்திகம், காம்யம் என மூன்று வகைப்படும். நித்ய பூஜையானது நித்யநித்யம் ஆகந்துக நித்யம் என இருவகைப்படும். தினந்தோறும் செய்யப்படும் பூஜை நித்யநித்யம் என்றும், பிரதோஷபூஜை, விஷுபூஜை, ஸங்கிரமணபூஜை முதலிய விசேஷ புண்யகாலங்களில் செய்யப்படும் பூஜை ஆகந்துக நித்யம் என்றும் பெயர்.

நைமித்திக பூஜையும் நைமித்திகம், ஆகந்துகம் என இரு வகைப்படும். கர்ஷணம் ப்ரதிஷ்டை முதலியவைகள் நைமித்திக பூஜையாகும். மாதந்தோறும் செய்யப்படும் மாஸ பூஜையானது ஆகந்துகபூஜை எனப்படும்.

காம்யபூஜையும், பாஹ்யம் ஆப்யந்தரம் என இருவகைப்படும். ஆலயம்சென்று தனது இஷ்டசித்தியின் பொருட்டு ஆசாரியன் முகமாக அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகள்

செய்வது பாஹ்யபூஜை எனப்படும். தனது இஷ்ட லிங்கத்தினிடம் தானே நேர்முகமாக தனது அபீஷ்ட பிராப்தியின் பொருட்டு பூஜித்தல் ஆப்யந்தரபூஜை எனப்படும்.

இதனுள் மாதபூஜை என்பது ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியுடன் கூடிய அந்தந்த மாதத்திற்குரிய நக்ஷத்திரங்களில் செய்யப்படும் விசேஷபூஜை.

அதனுள் ஐப்பசி மாதத்தில் இறைவனுக்கு சிறப்பாகச் செய்யப்படும் பூஜை அன்னாபிஷேகம். இறைவனின் நிலம், நீர். கனல், காற்று, வளி, இனன், மதி, இயமானன் என்ற எட்டு சரீரத்தினுள் முதலாவதான பிருதிவியின் சம்பந்தமான பூஜையாகும்;

गन्धो मूलफलादि कन्दकुसुमान्यन्नादिकं पार्थिवम् ।

சித்தாந்தசாராவளி.

சந்தனம், வேர், பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலியவைகள் பார்த்திவம் எனப்படும்.

यः पृथिव्यांतिष्ठन् पृथिव्या अन्तरः यं पृथिवी न वेद यस्य पृथिवी शरीरं यः पृथिवीमन्तरो यमयति एष त आत्मा अन्तर्याम्यमृतः ।

உபநிடதம்

பிருதிவியில் எவர் இருக்கிராரோ, பிருதிவியின் உள்ளேயும் இருக்கிராரோ, எவரை பிருதிவியானது அறியவில்லையோ எவருக்குப் பிருதிவியானது சரீரமோ எவர் பூமியின் உள்ளிருந்து கடத்துகிராரோ அவரே எல்லோருடைய உள்ளத்தில் இருக்கும் இறைவன்.

अन्नं प्राणात्मकं श्रेष्ठं सर्वजन्तुप्रातिष्ठितम् ।
तस्मादन्नाभिषेकन्तु मम प्रीतिकरं शुभम् ॥
अन्नरूपं विशेषेण मम रूपमिति स्मृतम् ।

என்று பூர்வகாரணாகமம்,

867

அன்னம் ப்ராணரூபமானது எல்லா ஜந்துக்களிடத்திலும் இருக்கக்கூடியது. அன்ன வடிவமே எனது வடிவம். அன்னபூஜை எனக்கு அன்புடையது என்று இறைவன் கூறுவதாக பூர்வ காரணாகமத்தா லறியப்படுகிறது.

துலாமாதத்தில் அச்வனீ நக்ஷத்திரம் கூடிய பௌர்ணமி திதியில் இந்த அன்ன பூஜையானது செய்யப்படவேண்டும். திதியும், நக்ஷத்திரமும் சேர்ந்திருப்பது மிகச் சிறந்தது.

ஒரே மாதத்தில் இரண்டு பௌர்ணமியோடு இரண்டு அச்வனீ நக்ஷத்திரம் வந்தால் பிந்தி உள்ளதிலேயே பூஜிக்க வேண்டும். இரண்டு தினத்திலும் அச்வனீ நக்ஷத்திரமும் பௌர்ணமி திதியும் வியாபித்திருந்தால் பகலில் என்று அதிகமாக திதி நக்ஷத்திரங்கள் காணப்படுகிறதோ அந்த தினத்தில் அன்னபூஜை செய்யவேண்டும். ஒருவாறு பௌர்ணமி திதி குறைவாக இருந்தாலும் நக்ஷத்திரம் அதிகநேரம் இருக்கும் நாளில் அன்னபூஜை செய்யவேண்டும்.

पर्वयुक्तमयुक्तं वा अश्विनीऋक्षमेव वा ।

என்று காரணாகமம்.

பௌர்ணமி இருந்தாலும் இல்லாவிட்டாலும் அச்வினீ நக்ஷத்திரமே அன்னபூஜைக்கு முக்யமாகக் கொள்ளப்படுகிறது.

சுவர்ணவாரி நெல், பெருஞ்சம்பா நெல், சிறுமணி நெல் முதலிய நல்ல மணமுடைய நெல்லில் இருந்து குத்தி எடுக்கப்பட்ட நக்ஷத்திரம்போன்ற அரிசியினுல் ஸ்தாலீபாகம் என்ற ஸம்ஸ்கார முறைப்படி தயார்செய்யப்பட்ட அன்னத்தை ஆதார சிலை முதற்கொண்டு லிங்கத்தின் சிரஸ்வரையிலும் அல்லது விஷ்ணுபீடம் முதற்கொண்டு லிங்கத்தின் சிரஸ்வரையிலும் அன்னத்தை நிரப்பவேண்டும்.

அபூபம், நெய், வாழைப்பழம், பால், தயிர், இவைகளுடன் அன்னலிங்கத்தை நன்ருக அலங்கரிக்கவேண்டும். மற்றும் பாவற்காய், முள்ளுக்கத்தாரி, பலா, முதலியவைகளாலும் அலங்கரிக்கவேண்டும்.

கோஷ்டம் என்ற திரவியம்சேர்த்து பாத்யமும், ஜீரகத்தை சேர்த்து ஆசமனீயமும், கருங்கடுகுசேர்த்து அர்க்யமும் கொடுக்க வேண்டும் என்று அம்சுமான் ஆகமம் கூறுகிறது.

मृदूदकं तुलामासि

சிந்தியாகமம்.

காளைக்கொம்பு மண், புண்யக்ஷேத்ர மண், ஸமுத்ர மண், யானை தந்தத்தின் மண், மலை மண், ஆற்று மண். புற்று மண், நண்டுவளை மண் என்ற இந்த எட்டுவகை மண்களைச் சேர்த்து குடத்தில்போட்டு ஜலம் நிரப்பி பூஜிக்கப்பட்ட ஜலத்திற்கு மிருதூதகம் எனப்பெயர். இந்த ஜலத்தினல் அபிஷேகம் செய்ய வேண்டும்.

வைடூர்யம் என்ற ரத்னத்தினல் செய்யப்பட்ட மணி மாலைகளாலும் பொன்னூமத்தம்பூ, வெள்ளெருக்கம்பூ, நெய்தல்பூ, சந்திரகாந்தப்பூ, மகிழம்பூ, வெண்மருதாணிப்பூ, இவைகளால் கட்டப்பட்ட புஷ்ப மாலைகளாலும் அலங்கரிக்கவேண்டும்.

குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனை, புனுகு, கஸ்தூரி இவைகளை பன்னீர்சேர்த்த சந்தனத்துடன் சேர்த்து சாத்தவேண்டும்.

சந்தனம், அகில், கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம் சேர்த்த தூப திரவியங்களால் தூபம் போடவேண்டும்.

முன்னூறு (300) தீபம் போடவேண்டும் என்று காரணகமும், எண்ணூறு (800) அல்லது முன்னூறு. (300) அல்லது இருபது (20) தீபம் போடவேண்டும் என்று அம்சுமான் ஆகமமும் கூறுகிறது.

சம்பா அன்னம் நிவேதனம் செய்வதுடன் கருப்பஞ்சாற்றை பானீயமாக வைக்கவேண்டும், குங்குமப்பூ சேர்ந்த தாம்பூலம் நிவேதனம் செய்யவேண்டும்.

கௌசிகம் என்ற பண்ணமைந்த தேவாரங்களைப் பாராயணம் செய்யவேண்டும்.

869

புஷ்பராகம் என்ற தாளராகத்துடன் கூடிய கீதமும், ஏகதாளம் என்ற தாளமும், பத்மாங்கம் என்றதான நர்த்தனமும் செய்யப்படவேண்டும். உடுக்கு என்ற வாத்யம் விசேஷமாக வாசிக்கப்படவேண்டும் என்று சூக்ஷ்மாகமம் கூறுகிறது.

மாத பூஜைக்குரிய திரவியங்கள் பன்னிரண்டுள் (12) ஸ்நாநம், போஜனம், லேபனம், தரிசனம் என்று நான்கு வகைப்படும். அதனுள் போஜனத் திரவியங்கள் ஆறுவகை, (6) அதாவது கிருதகம்பளம், அபூபம், சர்க்கரை, ஊருக்கொழுந்து அன்னம், பழம் என்பன. இதை இறைவனோடு சேர்த்து வைத்திருந்து மறு பூஜாகாலத்தில் விஸர்ஜனம் செய்யவேண்டும்.

वृद्धिदं योजनं तथा ।

என்ற மூலாகம வாக்கியத்தினுல் போஜன திரவியங்கள் வளர்ச்சியைக் கொடுக்கும். அதாவது இறைவனுக்கு அன்னுபிஷேகம் செய்தால் நெல் முதலிய தான்யங்களும், கிழங்கு வகைகளும், சந்தனமரம் முதலிய வாசனை மரங்களும், பலா, மா, மாதுளை சகல பழவகை மரங்களும் அளவற்று வளர்ச்சியடையும். இதனுல் உலகம் செழிக்கும்.

ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவ ஸ்தலங்கள் தோறும் அபிஷேக ஆராதனைகள் செய்துவரும் வழக்கம்போல் இம்மாதத்திலும் 25–10–54 திங்கட்கிழமை திருப்பள்ளியின்முக்கூடல் ஸ்ரீ முக்கோணநாதர் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் ஆதீனச்சார்பில் செய்விக்கப் பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருப்பள்ளியின் முக்கூடல் திருப்பதிகம் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. ஆதீனஓதுவாமூர்த்திகளைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச் செய்யப்பட்டது.

870

தொடர் கதை

மாசில் வீணை

வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

ஓடிய கதை:

✱பறம்புநாட்டுக்கும் பாண்டியநாட்டுக்கும் பகை. பறம்புநாடோ சிற்றரசு. பாண்டியநாடோ பேரரசு. மன்னன் உக்கிரப்பெருவழுதி, பறம்புக்குறுமன்னர் வீரவேளுடன் போர்தொடுக்க எண்ணுகிறான். ஒற்றர் தலைவன் சந்தனத்தேவன்பால் ஆணையிடுகிறான் அரசன். போர் நிகழ்ச்சிக்குச் சிலநாள் முன்பு குறுநிலமன்னர் வீரவேள் தாமே முன்னணியில் நின்று போரிட எண்ணுகின்றார். புதல்வி பொன்னியிடம் செய்திசொல்ல வருகிறார். புதல்வன் பாரியும் புறப்படுகிறான் போர்க்களத்துக்கு. 'தங்கைக்கு உறுதுணையாகத் தங்கியிரு' என்று பணித்துவிட்டு பதிலை எதிர்பாராமலேயே போய்விடுகிறார் மன்னர். அதன் பின்பு........

"தேவீ! தேவீ!"

மஞ்சத்தில் சாய்ந்திருந்த இளவரசியை மெதுவாக எழுப்பினாள் மல்லிகை. சாளரத்துக்கப்பாலிருந்து சண்பகமலர்களின் மணம் 'ஜிவ்' வென்று வந்துகொண்டிருந்தது. எங்கோ கூட்டுக்குள் புரியாதபேச்சுப்பேசும் இரண்டு பறவைகளின் மெல்லொலி வேறு 'குளுகுளு' என்று அடித்த காற்றோடு கலந்துவந்தது.

பொன்னிதேவி புரண்டு படுத்துக்கொண்டாள்.

"தேவீ! நேரமாகிவிட்டதே; சிற்றுண்டி அருந்துகிறீர்களா? கொண்டுவருகிறேன்".

மல்லிகையின் மனங்கனிந்தபேச்சு இளவரசியின் மனத்தை என்னமோசெய்தது. அவளை ஏறிட்டுப்பார்த்தாள். இளவரசியின் கண்களின் கடைக்கோடியில் கண்ணீர்த்துளிகள் தேங்கி நின்று மண்ணைத்தழுவச் சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருந்தன.

"மல்லிகை! தந்தை போய்விட்டாரா? படைகள் புறப்பட்டு விட்டனவா?"

"தேவீ! தந்தையாரின் தலைமையில் வீரர்படை இந்நேரம் வெகுதூரம் போயிக்குமே; அதிருக்கட்டும், இளவரசியார்க்கு அதற்கென்ன அத்தனை ஆர்வம்! இதோ சிற்றுண்டி கொணர் கிறேன்?" – ஓடினுள் மல்லிகை.

இளவரசி எங்கோ பார்வையைச் செலுத்தியிருந்தாள். அவள் மனம் அரசியல் சூழ்நிலையை ஒட்டி அதிதீவிரமாகச் சிந்தனைசெய்ய ஆரம்பித்தது.........

"தமிழ்நாடு! 'குமரியொடு வட இமயத்து ஒருமொழிவைத்து உலகாண்ட' தமிழ்நாடு இன்று குறுகியிருக்கிறது, குமரிக்கும் வடவேங்கடத்துக்குமாக! அதற்கப்பால் 'சுதநாய் வடுகர்!' அப்பாற்சென்ருல் ஆரியநாடு! இவ்வாறிருக்கும் இந்தச் சிறிய நிலத்துக்குள்ளே பேரரசுகள் பல! சிற்றரசுகள் பல! என்ன ஆச்சரியம்! வல்லரசு – நிலவெறிபிடித்துத் திரியும் பேரரசு! – அதற்குமுன்னுல் சிறு அரசு! பறம்புநாடு! என்ன ஆகும்! மண்ணுசைக்குப் பலியாகி மளமளவென்று திர்ந்துவிடுமா பறம்பு அரசு!......... அசட்டு எண்ணம்! வீரவேள் இருக்கும்வரை – எமனே எதிர்த்தாலும் சலையாது போராடும் உரம்மிக்க வீரர் படை உள்ளவரை பறம்பு அரசு பணிந்துபோகாது!......ஒரு வேளை......... அந்த சூழ்ச்சிக்காரன் – உக்கிரப்பெருவழுதியின் வலதுகை என்று உலகம் அழைக்கும் அந்த ஒற்றர் தலைவன் சூழ்ச்சி செய்யத் தொடங்கிவிட்டால்!........."

இப்படி எண்ணியவுடன் பொன்னிக்கே என்னமோபோல் இருந்தது. அவளது முகத்தில் குறுவியர்வைத் துளிகள் முத்து முத்தாக அரும்பின்றன. சிந்தனைரேகை அந்தச் செந்தாமரைத் திருமுகத்திலே வண்ண ஓவியம் தீட்டியது. சாளரத்துக்கருகில் இருந்த அந்த அழகுமஞ்சத்தில் அசையாத ஓவியமாக–வனப்புச் சிலையாக உட்கார்ந்திருந்தாள் இளவரசி.

மல்லிகையின்குரல் இளவரசியை சிந்தனை உலகத்திலிருந்து இந்த உலகுக்குக் கொண்டுவந்தது. குறுகுறுத்த அன்புத் தோழியின் விழி வீச்சு இளவரசியின் சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

"தேவீ! தங்களுக்குப் பெயர்ப் பொருத்தம் மிகமிக நன்ருயிருக்கிறது."

"மல்லிகை! என்னடி அப்படிக் கண்டுவிட்டாய் பொருத்தம்?"

"ஆம் அம்மா! கன்னித்தமிழ்நாட்டில் – சோழமண்ணைச் சொக்கவெள்ளியாக்கிவிட்டுக் காதலனை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிருள் அந்தப் பொன்னி!"

"இம்; அப்படியா? ஏதேது? பிறகு?"

"இங்கே பறம்புநாட்டைப் பசுந்தங்கமாக்கி, வீரவேள் மன்னர் இதயச்சோலேக்கு ஓர் அன்பு ஊற்ருக மாறி, இளவரசர் எண்ணப் பூங்காவுக்கு ஓர் தமிழ் அருவியாகப் பொழிந்து, வற்ருத ஜீவநதியாக வளைந்து வளைந்து – வனப்புக்கரம் நீட்டிக் காதலனை வரவேற்கப் பருவகால எழிலில் பாய்ந்தோடி........."

"மல்லிகை! போதுமடி உன்வருணனை! எப்படி இப்படி எல்லாம் பேசக்கற்றுக்கொண்டாய்? கவிஞர் கற்பனை எல்லாம் உன்னிடத்தில் போட்டிபோடவேண்டும்போல் இருக்கிறதே! இம்......மாமன் மகன் நிலாமுடியன் வருணனையோ இது!......"

"போங்கள், தேவீ! உங்களுக்கு எப்போதும் கேலிதான்! (அவர்)தான் இப்போதெல்லாம் அதிகமாக இங்கு வரும்படியாகச் செய்யவில்லையே!"

"ஏன்? நிலாமுடியனுக்கு அலுவல் இங்குதானே!"

"இல்லை தேவீ! அவரைத்தான் ஒற்றர்குழுத் தலைவராக்கிப் புகார்நகருக்கு அனுப்பியுள்ளாரே நம் பேரரசர்!"

"அப்படியா! நல்ல அலுவல்தான் கிடைத்திருக்கின்றது அவனுக்கு."

"தேவீ! நீங்கள் இப்படி மகிழ்ச்சியாகவே இருந்தால் உடம்பு எப்படியிருக்கும் தெரியுமா?"

இப்போது இளவரசியின் சிந்தனை போர்க்களம் நோக்கிச் சிறகடிக்க ஆரம்பித்தது. அவள் சாளரத்துக்கப்பால் எங்கோ பார்வையைச் செலுத்தினுள்.

அந்த இரவுவேளையில்—வீரர்களெல்லாம் போர்முன்னணிக்குப் புறப்பட்டுவிட்ட நேரத்தில் – அதோ – கீழ்க்கோட்டை வாயில் அருகே குதிரைமேல் ஒரு உருவம் – சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே போவதைப் பார்த்தாள் இளவரசி. அவள் இதயம் மிக்க பரபரப்படைந்தது.

''யார் இவன்? ஒருவேளை பாண்டியநாட்டு ஒற்றனுக இருக்கலாமோ?.........

''மல்லிகை! இங்கேவா. அதோ கீழ்க்கோட்டைவாயிலருகே பார்!'' – தோழியை அணைத்துக்கொண்டு கீழ்ப்பக்கம் அவள் முகவாய்க்கட்டையைத் திருப்பினுள் இளவரசி. ஏனே அவள் காந்தள்விரல்கள் துடித்தன!

'ஆம் தேவீ! அந்நியநாட்டானுக இருக்கலாமோ' மல்லிகையின் ஐயம் இளவரசியின் மனப்புயலுக்குப் பயங்கரமாகப் பக்கதாளம் போட்டது.

''நாம் இப்போதே தக்க பாதுகாப்போடு அங்கு போக வேண்டும்!''

''தேவீ!''

''தடையென்ன மல்லிகை! புறப்படட்டும் நம் அந்தப்புரத்துக் குதிரைகள் இப்போதே!''

அடுத்தகணம் அந்தப்புரத்துப் பூஞ்சோலையிலிருந்து இரண்டு வெண்புரவிகள் காற்றைப்போலக் கடுகிச் சரேல் என இருளில் மறைந்தன!

ஆறும் அத்தியாயம்

கைது செய்!

முகமூடியணிந்த முகத்தோடு குதிரைமேலே சென்றுகொண்டிருந்த அவ்வீரன், பின்னுல் குதிரைகளின்சத்தம் கேட்டவுடன் குதிரையை – வாயுரதத்தை – ஆம்! அதுதான் அதன்பெயர்; வேகமாகத்தட்டிவிட்டான். ஆயினும் இளவரசியும் தோழியும் ஊர்ந்துவந்த குதிரைகள் அவனை நெருங்கிவிட்டன. ஊருக்குப்

புதியவனுதலாலும், வழிகள் சரியாக விளங்கப்பெருதவனுதலாலும் அந்தவீரன் சற்றுத் தயங்கவே, இருவரும் ஊர்ந்துவந்த குதிரைகள் வெகு சமீபத்தில் நெருங்கிவிட்டன.

''ஏய்! நிறுத்து – யார் நீ?'' என்றதொரு அதிகாரமான பெண்குரல் கேட்கவே, அந்தக் குரலுக்குரிய பெண் யாரென்று பார்க்கத் திரும்பினுன் அவன். அவன் முகமுழுதும் கவசம்மூடிக் கொண்டிருந்தது. கண்களுக்கு மட்டும் இரண்டு துவாரங்கள் இருந்தன. சரேலென்று அவன்கைகள் உடைவாளைப்பிடித்தன.

''வீரர்களெல்லாம் போருக்குப் போயிருக்கும் வேளையில் போருக்குப் பயந்து இப்படி பயந்து நடமாடும் கோழையே! யாரடா நீ!'' பெண்சிங்கம்போலச் சீறினுள் குதிரைமேலிருந்த இளவரசி.

'கோழை!' – ஹா ஹா ஹா என்று சிரித்தான் அவ்வீரன்' அவனது ஆங்காரச் சிரிப்பின் சத்தம் கோட்டைச் சுவர்களில் மோதி, இன்னும் பயங்கரமாக மாறியது.

''சீறுகின்ற பெண்சிறுத்தையே! நீயார் என்னைக் கேட்பதற்கு? நான்.........பாண்டியநாட்டான்''

'என்ன?' – ஏககாலத்திற் கூவினர் இருவரும்.

''பாண்டியநாட்டான் மட்டுமல்ல! – அரசாங்க ஒற்றர் தலைவனுங்கூட! சந்தனத்தேவன் என்பெயர்.''

''சந்தனத்தேவன்! – பதுங்கிப் பாயும் வஞ்சகனே! இந்தா உன் துரோகத்துக்குப் பரிசு'' – இளவரசி கூறிக்கொண்டே கையிலிருந்த வேலைத் தூக்கி அவ்வீரன் இருந்த இடத்தை நோக்கி வீசினுள்! வேல் உக்கிரமாகப் பாய்ந்தது. ஆனுல், அந்த இடத்தில் அவன் இருந்தால்தானே! அடுத்தகணம் சந்தனத்தேவன் குதிரைமேல் கீழ்க்கோட்டை வாசலைச் சரேலென்று தாண்டி இருளில் மாயமாய் மறைந்தான்.

இளவரசியும் மல்லிகையும் இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. இளவரசியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. சட்டென்று குதிரையை அரண்மனையைநோக்கித் திருப்பினுள்; தோழியின் குதிரையும் தொடர்ந்தது; அந்த நள்ளிரவு நேரத்தில் குதிரைகளின் குளம்படிச் சத்தம், இருளின் பயங்கரத்துக்குப் பின்னணி கீதம் போல இருந்தது.

(தொடரும்)

வள்ளுவர் படைத்த காதல்

வித்துவான், திரு. வி. சா. குருசாமி அவர்கள்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

அவளும் அவனும் :

முழுமதி அவளது முகம்; முல்லை அவளது பல்வரிசை; கொவ்வைக்கனி அதரம்; குமுதவாய்; அழகுச்சிலை; அசைந்தாடும் பூங்கொடி அவள் பாங்கியர் பலர் அவளைச் சூழ்ந்து பரிவுகாட்டு கின்றனர். இந்தச் சித்திரப்பதுமை, செல்வச்செழுங்கொடி யார்? வள்ளுவர் படைத்த தலைவி.

பருவத்துக்கேற்ற பசுமை அவளது உடல் எங்கணும் ஓடிக்கொண்டிருக்கிறது. அன்னம் அசைந்து செல்லும் அவள் நடையைக் கற்றிட; மான் அவள் மருண்டபார்வையைக் கண்டு மகிழ; பஞ்சவர்ணக்கிளிகள் அவள் பாகுமொழிகேட்டுப் பரவச மடைய உயிரோவியமாகக் காட்சியளிக்கும் அவள் ஒய்யார நடைபோட்டு உலாவப்போவதுபோல் ஊரின் புறம்பே உள்ள சோலைக்கு வருகிருள்.

அவள் வாழும் ஊர் மலைகள் சார்ந்த ஊர்ப்பகுதி. இயற்கைத்தேவன் தன் கைவன்மையையெல்லாம் கொட்டி ஆக்கி அமைத்த மலைக்குன்றுகள். மலைக்குன்றுகளின் முகடு தெரியாது மூடியிருக்கின்றன முகிலினங்கள். சூரியனின்கிரணங் கள் நுழையாத சோலைகள் சூழ்ந்த பகுதி அது. அருவியின் ஆரவாரமும், தேன்வண்டுகளின் தெவிட்டாத இனிய ஓசையும், கூவுங்குயிலினங்களும், குதித்தோடும் மானினங்களும், கொஞ்சு மொழி பேசும் பஞ்சவர்ணக் கிளிகளும், மிகுதி. அடிக்கொரு சுனை. அதில் அழகுதரும் தாமரைகள், அல்லி இவைகள் அந்தப் பொய்கைத் தண்ணீருக்கு போதுமான அழகையும் தந்துகொண் டிருக்கின்றன. சோலையில் செடிகள், செழுங்கொடிகள், மரங் கள், மகிழ்ச்சிதரும் கனிகள் இவை மிகுதி. ஆடும்மயிலினங்களும் அதற்கு ஏற்பப் பாடும் வண்டினங்களும் அந்தச் சோலையை ஒரு நாட்டிய அரங்கமாகவே ஆக்கிக்கொண்டிருந்தன.

தோழிகள் பலர் தன்னைப் பின்தொடரவந்த அந்தத்துடி யிடையாள் இயற்கையின் நாட்டிய அரங்கைக்கண்டு இதயத்

தைப் பறிகொடுக்கிருள். ஆனல் சோலேயின் சுந்தரமானசூழலே சுதந்திரமாகச் சென்று பார்க்க எண்ணி இருவர் இருவராகப் பிரிந்தனர் பாங்கியர். பாங்கியரைப் பிரிந்த அந்தப் பைங்கொடி நீண்ட விழிகளின் வாயிலாகத் தன் நெஞ்சையே பறிகொடுத் திருந்தாள் அந்த நீலத்தோகையின் நேர்த்தியான அழகில்.

இளமைத்துடிப்போடு எதிர்நடைபோட்டுவரும் ஒரு இளமானின் குளம்போசை கேட்டுத் திடுக்கிட்டாள். மான் மறைந்தது; மீண்டும் மயிலின் நடனம் அவள் மனத்தைக் கவர்ந்தது.

* * * *

அழகிய வாலிபன் அவன். அகன்றநெற்றி, அரும்புமீசை, அறிவொளிவீசும் கண்கள், திரண்டதோள்கள், திண்மையான நெஞ்சம். கையில் அம்பு வில் இவைகள் காட்சியளிக்கின்றன. செல்வர்குடியில் பிறந்த மகன் என்பதை அவனது வேட்டைக் குரிய உடையலங்காரமே வெளிப்படுத்துகின்றது. அவனது கண்கள் இங்குமங்கும் பார்க்கின்றன, கையில் உள்ள ஒன்றை இழந்துவிட்டதுபோன்ற கவலே அவன் முகத்தைக் கவ்வியிருந் தது. ஏறுபோல் நடைபோட்டு வருகின்ருன். அவன் இலக் குக்குத் தப்பியதுதான் அந்தமான்.

அழகிய சுனேயும், அதனருகே அகன்று விரிந்த மரங்களும், மயிலின் ஆடலும், குயிலின் பாடலும், மந்தமாருதத்தின் அசைவும் அவனே மகிழ்வித்தது. வந்தவனின் கண்கள் ஒன்றை உற்றுப்பார்த்தன. மருட்சியில்லே இப்பொழுது. மகிழ்ச்சி தாண்டவமாடுகிறது.

அவன் கண்களுக்கு விருந்தளித்தது அது. ஆடவரை வருத்தும் அணங்கோ என்று எண்ணுகின்ருன் முதலில். சிந்தனே. மீண்டுமொரு முடிவு. அணங்கல்ல அந்த உருவம். அழகு மயில் என்ற முடிவுக்கு வருகிறது அவன்மனம். மயிலி னும் மெல்லிய இந்த உருவம் பெண்ணுருவம்தான் என்ற முடிவுக்குவருகின்ருன். இதோ அவனுடைய முடிவு.

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு." (குறள்)

அவன் கண்களுக்கு அவள் இலக்கானுள். ஆனல் அவள் கண்கள்?

பிறகு..

ஆதீனங்கள்

திரு. செ. கோவிந்தசாமி அவர்கள்.

மகா குருபீடமாகிய திருவாவடுதுறைக்குப் பின் தமிழ் நாட்டில் கைலாச பரம்பரையைச் சார்ந்து பல சைவாதீனங்கள் தோன்றின. வேறு பல வீரசைவாதீனங்களும், சங்கராச்சாரியர் கொள்கையினராகிய மடங்களும், ஆச்சிரமங்களும் தோன்றின. இவ்வாதீனங்களுள் திருவாவடுதுறையோடு ஒத்த கொள்கையினராகிய விசேடம் பெற்ற ஆதீனங்கள் தருமபுர ஆதீனம், மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனம், திருப்பனந்தாள் காசி மடம், அன்னப் பேட்டை தாயுமான சுவாமிகள் ஆதீனம், திருவள்ளுவமலை ஆதீனம், சூரியனூர் கோவில் ஆதீனம் என்பன இன்னும் சிலவுண்டு. மற்ற வீரசைவாதீனங்களையும், ஆச்சிரமங்கள், தபோவனங்களையும், ஸ்ரீ-ல-ஸ்ரீ சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் போன்ற தென்னாட்டுச் சைவத் தலைவர்கள் புறச்சமய ஆதீனங்களென்றே கூறுகின்றூர்கள். சைவாதீனங்கட்கும், யாழ்ப்பாணச் சைவப்பெரு மக்கட்கும் நீண்ட காலத் தொடர்புண்டு. ஆறுமுகநாவலர் பெருமானும் பிற பெருமக்களும் இவ்வாதீனங்களில் சொற்பிரசங்கமாரி பொழிந்து நன்மதிப்புப் பெற்றவர்கள். தருமபுர ஆதீனம், ஸ்ரீ குருஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. இம் மடம் இன்று சிறந்த தொண்டாற்றி வருகின்றது. இம்மடாதிபதிகள் தங்கள் பரம்பரைக்குரிய நூலாகவும், சைவ சமயத்திற்கும் ஆத்ம ஈடேற்றத்திற்கும் வழிகாட்டியாகவும் சிவஞான சித்தியாரைக் கைக்கொண்டு வருகின்றனர். அப்படியே மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனமும், தாயுமானவசுவாமிகள் ஆதீனமும், திருப்பனந்தாள் காசிமடமும் கைக்கொண்டு வருகின்றனர். திருவாவடுதுறை சிவஞானபோதத்தைக் கைக்கொண்டு வருகின்றது.

ஆறுமுக நாவலர், சபாபதி நாவலர், முதலானவர்களுக்குப் பின்னுல் பட்டுக்கோட்டை அம்பலவாண நாவலர் சுவாமிகள் மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீனம் சார்ந்து, மந்திர கஷாயம் பூண்டு சந்நியாசம் பெற்றவர். சந்நிதானம் அனுமதியோடு சிலகாலம் அம்மடத்திலிருந்து தொண்டு செய்தவர். தமிழ்நாடு எங்கும் பிரசங்கம் செய்து நன்மதிப்பும் பெற்றவர். ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானைச் சற்குருவாகக் கொண்டவர், திருநெல்வேலி ஜில்லாவில் ' திருஞானசம்பந்த சுவாமி ஆதீனம்' என்ப் பெயரிய மடத்தையும் சிதம்பரத்தில் ' ஆறுமுக நாவலர் சந்தான ஞானசம்பந்த சுவாமி ஆதீனம்' எனப் பெயரிய மடத்தையும் ஸ்தாபித்து நிபந்தமும் ஏற்படுத்தியுள்ளனர்.

—இந்து சாதனம், 5—11—54.

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின்

ஜன்மநக்ஷத்திர விழா

தருமபுரம் ஆதீனம் 25 வது மகாசந்நிதானம் ஸ்ரீ ல ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் ஜன்மநக்ஷத்திர விழா 25—10—54 திங்கள்கிழமை தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் கோயிலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. விசேஷ அபிஷேக ஆராதனைகள் அலங்காரங்கள் அர்ச்சனைகளும் நடைபெற்றன. திருக்கடவூர் ஸ்ரீ அமுதகடேச சுவாமிக்கும் ஸ்ரீ அபிராமி அம்மைக்கும் அர்ச்சனை ஆராதனைகளும் நடைபெற்றன. இரண்டிடங்களில் சமயச் சொற்பொழிவுகள் கீழ்க்காணுமாறு நடைபெற்றன.

ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் அருட்கொடை, கருணை உள்ளம் சமயத்தொண்டு, ஆதீன வெளியீடுகள் கலைவளர்ச்சி கல்வி வளர்ச்சி திருமுறை விளக்கம், பொருட்கொடை, கோயில் திருப்பணி முதலிய பல தலைப்புக்களில் திருக்கடவூர் தேவஸ்தானம், கட்டளை விசாரணை வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், மாயூரம் குமரக்கட்டளை, கட்டளை விசாரணை, ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், ஆதீனக் கல்லூரித் துணைத்தலைவர் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள், வித்துவான், திரு. S. சேதுசுப்பிரமணியபிள்ளை அவர்கள் ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. N. சம்பந்தம் அவர்கள் ஆதீனத் தேவாரப் பாடசாலைத் தேவார ஆசிரியர் திரு. R. வேலாயுத ஓதுவாமூர்த்திகள், பல்கலைக்கல்லூரி மாணவர் திரு. சிவசம்பு முதலியோர் பேசினர்.

விழா மலராக 'ஞானசாத்திரங்களும் தோத்திரங்களும்' என்ற நூல் வெளியிடப் பெற்றது. இது ஒரு புதிய தொகுப்பு நூல். திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சிவானந்தபோத சாரம் முதலிய ஞான நூல்களும் முத்துக்குமரசாமி திருவருட்பா முதலிய தோத்திர நூல்களும் இதில் அடங்கியுள்ளன.

திருக்கடவூரில்:

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஜன்மநட்சத்திர விழாவை ஒட்டி சென்னை சமயப்பிரசார நிலையத் தலைவர் வித்துவான், ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும், தருமபுர ஆதீனம் தமிழாசிரியர், பண்டித, திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களும், ஆதீனத் தொண்டர் திருக்கருகாவூர் திரு. மருணீக்கியார் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

ஆதீன தேவஸ்தானங்களில்

வைத்தீஸ்வரன்கோயிலில் :

புள்ளிருக்கு வேளூர் என வழங்கும் வைத்தீஸ்வரன்கோயிலில் ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமிக்கு ஐப்பசிமீ 11௳ முதல் (27—10—54 முதல்) பத்து நாட்கள் கந்தசஷ்டித் திருநாளை முன்னிட்டுத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நாள் தோறும் சண்முகார்ச்சனை ரூபமான லக்ஷார்ச்சனைகளும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. 27—10—54 புதன் கிழமை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித்துறை, வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'அநரதன்' என்பது பற்றியும், 28—10—54 வியாழன் திருவாவடுதுறை ஆதீன வித்துவான், திரு. K. ஆறுமுகநாவலர் (தொண்டன் ஆசிரியர் நாகர்கோயில்) அவர்கள் 'காசிபர்நேசமும் மாயையின் நேசமும்' என்பதுபற்றியும், 29—10—54 வெள்ளிக் கிழமை திரு. S. T. சிசிவாசாசாரியார் அவர்கள் M. A., L. T. தலைவர் அரசர்கல்லூரி திருவையாறு. ''மறலியை மடிவித்தமார்க் கண்டன்'' என்னும் பொருள்பற்றியும், 30—10—54 தருமபுர ஆதீனப்பல்கலைக் கல்லூரித் துணைத்தலைவர், ஆதீனப் புலவர், திரு. முத்து சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'சிங்கமுகன் தங்கமொழி'' என்பது பற்றியும், 31—10—44 ஞாயிற்றுக் கிழமை பிரசங்க சபாரஞ்சிதம், சென்னை, திரு. ச. பு. பா. இரத்தினசபாபதி நாயக்கர் அவர்கள் 'தக்ஷகாண்டம் என்பது பற்றியும், 1—11—54 திங்கள்கிழமை ஆதீனப்பல்கலைக்கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள், 'தெய்வயானை திருமணம்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். 2—11—54 செவ்வாய்க்கிழமை தருமபுர ஆதீன வித்துவான், கீர்த்தனகுலசேகர பாகவதர் எம்பார், பிர்மஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் 'வள்ளித் திருமணம்' பற்றிக் கதாகாலக்ஷேபம் நிகழ்த்தினர். தேவஸ்தானக் கட்டளை விசாரணை ஸ்ரீமத் சொக்கலிங்கத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்று நன்றி நவின்றார்கள்.

மாயூரம் குமரக்கட்டளையில் :

மாயூரம் ஸ்ரீ மாயூரநாதஸ்வாமி தேவஸ்தானத்தில் அமைத் அமைத்துள்ள குமரக்கட்டளை ஸ்ரீவள்ளி தேவசேனு சமேத ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிக்கு கந்தசஷ்டித் திருநாளை முன்னிட்டு 27—10—54 முதல் 2—11—54 ஏழு நாட்களும் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. முதற் பிராகாரத்தில் அமைந்துள்ள குமாரவிலாச மண்டபத்தில் சொற்பொழிவுகள் மாலை 6-மணி தொடங்கி நடைபெற்றன. பேச்சாளர்களும், பேசிய பேச்சுக் களின் தலைப்புக்களும் கீழ்வருவன :—

27—10—54 புதன் கிழமை திருவையாறு அரசர்கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்துவான், நா. இராமசாமி செட்டியார் அவர்கள், 'அயனும் அறுமுகக்கடவுளும்'' 28—10—54 வியாழக் கிழமை தருமபுரம் தமிழ்ப் பேராசிரியர் பண்டித திரு. அ. கந்த சாமிப் பிள்ளை அவர்கள் ''சிங்கமுகனும் எங்கள் குகனும்'' 29—19—54 வெள்ளிக்கிழமை நாகர்கோயில் தொண்டன் ஆசிரியர். திருவாவடுதுறை ஆதீன மஹாவித்வான், திரு. K. ஆறுமுக நாவலரவர்கள் 'அரிமுகன் கண்ட அறுமுகன்' 30-10-54 சனிக்கிழமை திருவையாறு அரசர்கல்லூரித் தலைவர் திரு. S. T. சீனிவாசாச்சாரியார் அவர்கள் M.A., L.T., 'வெற்பிளங்கன்னி யும் விரிசடைப் பெருமானும்' 31—10—54 ஞாயிற்றுக்கிழமை தருமபுர ஆதீன வித்வான் கீர்த்தனகுலசேகர பாகவதர் எம்பார் பிர்மஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் 'முருகன் திருவவதாரம் பால்யலீலை' 11—1—54 திங்கட் கிழமை சென்னை, வண்ணைப் பிரசங்க சபாரஞ்சிதம், திரு. பு.பா. இரத்தினசபாபதி அவர்கள் 'தக்ஷகாண்டம்' இவ்வாறு ஏழு நாட்களும் கந்தபுராணத்தைப் பற்றிய சிந்தனைச் சிற்பிகள் பலரின் செந்தமிழ்ப் பேச்சுக்கள் கந்தர்சஷ்டி விழாவுக்கு வந்திருந்த அன்பர்களை யெல்லாம் ஆட்கொண்டன.

சீகாழியில் :

கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு சீகாழி ஸ்ரீசட்டைநாத சுவாமி தேவஸ்தானம் பிரசார சபாமண்டபத்தில் கந்தபுராணச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. பேசிய பேரறிஞர்களின் பட்டியலைக் கீழே காணலாம்.

27—10—54 புதன்கிழமை திருவாவடுதுறை ஆதீன மஹா வித்துவான், திரு. கே. ஆறுமுகநாவலர் அவர்கள் 'முருகன் அவதார உண்மை,

28–10–54 வியாழக்கிழமை திருவையாறு அரசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், வித்துவான் திரு. நா. இராமசாமிச்செட்டியார் அவர்கள் 'சயந்தன் கனவு,

29—10—54 வெள்ளிக்கிழமை தருமையாதினப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் வித்வான் திரு. ச. சேதுசுப்பிரமணிய பிள்ளை அவர்கள் 'வீரவாகு தேவர்'. 30–10–54 தருமபுர ஆதீனவித்துவான், கீர்த்தனகுலசேகர எம்பார் பிர்மஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் 'தக்கன் வேள்வி'. 1—11—54 திங்கட்கிழமை அண்ணுமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறை விரிவுரையாளர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகரவர்கள் 'தெய்வயானை திருமணம்'.

கந்தசஷ்டி விழாவை முன்னிட்டு நடந்த பேச்சு வெள்ளம் சீகாழியில் இவ்வாறு பெருக்கெடுத்தது. முருகன் பெருமை உணர்ந்து அரகர நாமம் முழக்கியது ஞானசம்பந்தம் உடைய ஞானபூமி.

Extracts from the Visitors' Book of

Sri Panchanatheeswaraswamy Devasthanam,

Thiruvaiyaru, Tanjore Taluk & District.

I had the pleasure of visiting Thiruvaiyaru temple. The Manager in-charge of the temples was good enough to show us all round and explain the details. The priests and the staff are quite devoted to the deity and the temples wereound to be wellf

maintained. One can surely increase his flow of devotion by visiting these temples.

(Sd.) C. BAPET,
14—10—54.
Asst. Commr of Incometax.

I visited and offered worship at the shrine of Sri Panchanathiswaraswami and Sri Dharmasamvarthani on 8th November, 1954. The Nityavidhi in the temple is done with scrupulous exactness and true devotion. The officials in charge are courteous and helpful to the pilgrims and the shrines are admirably tended. It was an elevating experience.

(Sd.) N. RAGUNATHAN,
Asst. Editor, The Hindu.

Sri Arunajateswaraswami Devasthanam,

Thiruppanandal, Kumbakonam Taluk, Tanjore Dt,

I have been to this temple more than once; and each time I have observed a marked difference both in the environment and the reception given to me by his officials here. The upkeep of the temple is worth a mention. In these days when the mass is turning antigod, this institution by its special treatment are resetting the olden order. The clean atmosphere of the temple invites every one and anyone, which is indeed worthy of praise

The officers here are so helpful and polite that it would make everyone feel homely. There are

indeed very few who could serve god, by serving the humanity. It is my ordent hope that through proper publicity more people are allowed to enjoy this true place of worship.

(Sd.) G. S. MANI,
Gemini Pictures Circuit Ltd.
151, Mount Road, Madras. 2.
21—10—54.

Oriental College, Dharmapuram.

This college conducted by the Dharmapuram Adhinam seens to be flourishing. I hope that it will continue to give a new outlook to oriental studies and that the excellent library will be fully utilised for research.

(Sd) A. L. MUDALIAR,
Vice-Chancellor, Madras.
5—10—54

Oriental Middle School, Dharmapuram.

I was glad to visit this school and see some of the activities of the pupils.

(Sd) A. L. MUDALIAR,
Vice-Chancellor, Madras.
5—10—54

சென்னை, தருமபுர ஆதீன
மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையம்
வேலூர் தேவஸ்தான இறைபணி மன்றத்தில்

திருமுறை வகுப்பு

முதலாவது ஆண்டுவிழா

தெய்வநெறி பரவ - திருமுறை இசை திகழ ஷெ நிலையத்தில் 1953-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ந்தேதி விஜயதசமி நன்னாளில் திருமுறை வகுப்பு தொடங்கப் பெற்றது. அவ் வகுப்புத்தொடங்கி ஓராண்டு நிறைவுறுவதை முன்னிட்டு 17—10—54-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழக இசைப்பகுதித் தலைவர், பேராசிரியர். திரு. P. சாம்பமூர்த்தி அவர்கள் தலைமையில் முதலாவது ஆண்டுவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

திருமுறைவகுப்பு ஆசிரியர், சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வணக்கம் பாடினார்கள். வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அனைவரையும் வரவேற்றார்கள். தலைவர் தமது தலைமையுரையில், இசையுடன் கூடிய மிகப் பழமையான பாடல் தேவாரந்தான் என்றும், சங்கீத சரித்திரத்திலேயே திருஞானசம்பந்தர் தான் ஆதிவாக்கேயக்காரர் (முதன்முதல் பண்ணமைத்துப் பாடியவர்) என்றும் அறிவித்தார்கள், மாதர் மடப்பிடியும் என்ற யாழ்மூரிப் பண்ணை நீலாம்பரி இராகத்தில்தான் பாட வேண்டும். பிற்காலத்தெழுந்த அடாணு இராகத்தில் பாடுவது சரியல்ல என்றும் குறிப்பிட்டு 'மாதர் மடப்பிடியும்' என்ற பாடலை நீலாம்பரியில் இசைத்துக் காட்டினார்கள். கோயில்களின் மிகுதிப் பணத்தைக்கொண்டு ஒவ்வொரு கோயிலிலும் இம்மாதிரி திருமுறை வகுப்பு நடத்தவேண்டுமென்றும், ஒவ்வொரு ஆலயத்திலும் ஓதுவாமூர்த்திகளை நியமித்து, வருபவர்கட்குத் தேவாரம் கற்பிக்கச் செய்தல் வேண்டுமென்றும் அறக்காப்பாளர்கட்கு வேண்டுகோள் விடுத்துத் தருமையாதீனம் திருமுறைக்குச் செய்துவரும் தொண்டினைச் சிறப்பித்துப் பேசினார்கள்.

பிறகு, திரு. சின்ன அண்ணமலையவர்கள் "தேவாரம்" என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். தேவாரத்தில் எல்லா நலனும் அமைந்துள்ளது. படிப்பவர்கள் உள்ளத்தினுக்கேற்ப இன்பமளிப்பது தேவாரம். சமுத்திரம் போன்றது

தேவாரம். சமுத்திரத்தில் மேலாக முழுகினுல் மீன் பிடித்து மகிழலாம். சிறிது ஆழமாகச் சென்ருல் கிளிஞ்சல் பெற்றுக் களிக்கலாம். மிக ஆழச்சென்ருல் முத்துக்களைப்பெற்று இன்புறலாம். அதேபோலத்தான் தேவார சமுத்திரத்திலும் மக்கள் இன்பமடைகிருர்கள். சிறு குழந்தைகள் உள்ளத்தில் தேவாரப் பாடல்கள் இடம் பெறுமானுல் நாத்திகம் நாட்டில் நடமாடாது. நாடும் நலமடையும் எனத் தமது விரிவுரையில் குறிப்பிட்டார்கள்.

அடுத்து, திரு. ட்ரோஜன் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் வாழ்த்துரை கூறினுர்கள். ஓராண்டிற்குள் குழந்தைகள் நல்லமுறையில் பாடுகிருர்கள். நாடகமும் நடிக்கத் தலைப் பட்டிருக்கிருர்கள். இச் செயல் மிகவும் போற்றற்குரியது. பள்ளிக்கூடங்களிலும் இம்மாதிரியான வகுப்புக்கள் நடத்தினுல் பலமக்களும் நன்மையடைவார்கள். பெற்ருேர்கள் ஒவ்வொருவரும் தங்கள் குழந்தைகளைத் திருமுறை வகுப்பினுக்கு அனுப்ப முன்வர வேண்டும். குழந்தைகள் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி வாழ்வார்களாக என வாழ்த்திசைத் தார்கள்.

''திருமுறைவகுப்பு'' என்ற உரையாடலை வகுப்புமாணவர் இருவர் மிக அழகாக நிகழ்த்தினர். ''சுந்தரரைத் தடுத் தாட்கொள்ளல்'' என்ற நாடகம் வகுப்பு மாணவ மாணவியர் களால் சிறந்த முறையில் நடித்துக்காட்டப்பெற்றது.

நாடக முடிவில் நிலையத்தின் சார்பில். திரு ட்ரோஜன் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் மாணவ மாணவியர்கட்கு உயரிய முறையில் அமைந்துள்ள திருமுறைப் புத்தகங்களைப் பரிசில்களாக வழங்கினுர்கள். சிதம்பரம். சி. ப. தேவாரப் பாடசாலைப் பொன் விழாவில் ஷ. மாணவமாணவியர் ''திருஞானசம்பந்தர்'' நாடகம் நடித்ததற்கு அப்பாடசாலைத் தலைவர் சின்னையா முதலியார் அவர்கள் அனுப்பின வெள்ளிப்பதக்கங் களும் மாணவ மாணவியர்கட்கு வழங்கப்பட்டன.

திருமுறைவகுப்பு ஆசிரியரின் முத்தமிழ்ப் புலமையைப் பாராட்டி அவருக்கு உயரிய திருவாசகப் புத்தகம் பரிசளிக்கப் பட்டது.

வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தமிழிசையைக் காத்த பெருமை தேவாரத்திற்குத்தான் உண்டு, ஆதலால் இசைவாணர் அனைவரும் தேவாரத்தை மறந்துவிடுதல் ஆகாது எனக்கூறி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். திருமுறைவகுப்பு மாணவியர் கடவுள்வாழ்த்துப் பாடலுடன் விழா இனிது முடிந்தது.

மதிப்புரை

1 சதாசிவரூபம் முதலியன :- (பக்கம் 160)

இது திருவாவடுதுறை ஆதீனத்து வெளியீடு. மூன்றாவது நிறைபணி விழா மலர். இருபத்தொன்றாவது பட்டத்துக் குரு மகாசந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆட்சி ஏற்றருளியதுமுதல், சைவர்க்குரிய உயரிய நூல்கள் ஒவ்வொன்றாய் வெளிவந்துகொண்டிருக் கின்றன. சிற்சில சமயங்களில் கூட்டமாயும் காட்சி அளிக்கும். அவற்றுள் இக்கூட்டமும் ஒன்று. இத்தொகுதியுள் அடங்கிய ஒன்பதும் நவரத்நம் ஆகும். இதன் முடிவில் உள்ள மாகேசுர பூஜை ஆசீர்வாதத்தை நோக்கும் அறிஞர்க்கு, மடாலயங்களின் அவசியமும், உலக நலங்களை ஓம்புதற்பொருட்டே மடாலயங் கள் தோன்றி நிகழ்கின்ற உண்மையும், அது முக்காலத்தும் பொய்க்காமையும் நன்கு விளங்கும். இப்பதிப்பு மிக்க அழகுடைய அமைப்பொடு திகழ்கின்றது.

முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்

2 விநாயகர் அகவல் விரிவுரை

"அமிர்தவசனி பிரசுராலயம்", 54 பந்தர்தெரு, சென்னை. விலை ரூ. 1—8—0. இதன் உரை குகஸ்ரீ பு. பா. ரத்நசபாபதி நாயகர் அவர்களால் எழுதப்பட்டது. இளவழகனாரது பொருள் மிகுந்த முன்னுரையோடு கூடியது. விரிவுரை பொருள் உணர்த் துவதோடு, பொருளின் பயனையும் உணர்த்தவல்லது. சித்தாந்தத் தேனின் செழுஞ்சுவை உரையினுள்ளே அங்கங்கு மணம்வீசி மகிழ்வூட்டுகின்றது. ஒவ்வொரு சொல்லையும் உரையாசிரியர் ஆராய்கின்றமுறை அறிவுலகத்துக்கு மிக்க மகிழ்வைக் கொடுக் கின்றது. ஆழமான கடல்துறையில் அகழ்ந்தெடுக்கும் முத்துக் குவியலைப் போல, நுணுக்கமான சொல்தோறும் ஆழ்ந்து ஆழ்ந்து விரிவுரைகண்டுள்ளார் ஆசிரியர். நம் தெய்வத்தமிழ்நாடு உரையாசிரியரையும், வெளியிட்ட அமிர்தவசனி பிரசுராலயத் தாரையும் மிகமிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது.

சொ. சிங்காரவேலன்.

கோசார பலன்

ஜோதிஷார்ணவம்
பிர்மஸ்ரீ முத்துசோதிடர் அவர்கள், திருவிடைமருதூர்.

(ஜய-ஷு கார்த்திகைமீ 1-உ முதல் 30-உ முடிய)
(16—11—54 முதல் 15—12—54 முடிய)

1. மேஷம்: அசுவதி, பரணி, கார்த்திகை $\frac{1}{4}$.

அசுவதி நாலு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் சுபவிருத்தியையும் தன தான்ய லாபத்தையும் வியாபாரப் பெருக்கையும், இல்லற சுகத்தையும் தரும். பரணி நான்கு பாதங்களும் முதல் 15 தினங்களில் பெருத்த நஷ்ட கஷ்டங்களையும், அபவாதங்களையும் அபஜெயத்தையும் சத்துருக்கள் மேலோர் பெரியோர்கள் எல்லோருடைய அபிப்பிராயத்தையும் மனதுக்கு பயத்தையும் உண்டுபண்ணும். பிற்பாதியில் வியாதியால் மிகுந்த கஷ்டமுண்டாகும். ஸ்திரீகளாகில் பந்தத்தில் இருப்பதைப்போல் இருக்கும், மற்றவர்கள் மேல்கண்ட பலனை அடைவார்கள். புதன் சனி நலன்காட்டும்.

2. விருஷபம் கார்த்திகை $\frac{3}{4}$ ரோஹிணி, மிருகசீரிஷம் $\frac{1}{2}$.

கார்த்திகை 2, 3, 4 பாதங்களும் வியாதியையும் நஷ்டத்தையும் தரும். நாஸ்திகம் வளரும். ரோஹிணி நாலு பாதங்களும், மிருகசீரிஷம் 1, 2 பாதங்களும் கஷ்ட பலனை பலவிதத்திலும் உண்டுபண்ணும். வியவஸாய நஷ்டம். ரோகபீடை குடும்பத்தொல்லை. மனம் சதா துக்கமடைதல், பந்துமித்திராள் விரோதம், வீண் அலைச்சல். நம்பினவன் மோசம்செய்தல், துர்புத்தி தோன்றல், தெய்வபலம் குறைதல் தொழில் நஷ்டம், உத்யோகபங்கம் அபகீர்த்தி இவைகளை உண்டுபண்ணும். மாதக்கடைசி நான்கு தினங்கள் சுபமாய் இருக்கும். வியாழன் வெள்ளி கவலை அதிகரிக்கும், சனி சுபமாகும்.

3. மிதுனம்: மிருகசீரிஷம் ½ திருவாதிரை, புனர்பூசம் ¾.

மிருகசீரிஷம் பின்னரையும் திருவாதிரை நான்கு பாதங்களும் மிகுந்த பிரயாசையின்பேரில் ஓடிக்கொண்டிருக்கும். அதிக உழைப்பு. வரத்துக்குறைவு, விவசாய நஷ்டம், வியாதி பீடை இவைகளைத்தரும். புனர்பூசம் 1, 2, 3 பாதங்களும் முதல் பாதியில் லாபகரமாகவும் சந்தோஷகரமாகவும் இருந்து பிற் பாதியில் மிகுந்த சிரமங்களை உண்டுபண்ணும். ராஜாங்கபயம் கிரிமினல் கேஸ் எதிர்பாராதபடி ஏற்படல், அதிக விரயம், களத்திர புத்திராதிகளுக்கு பிரமாதமான வியாதி பீடைகள், மனக்கவலை, திட்டுக்காத்தல் பெரியோர் வருத்தம் முதலிய பலன்கள் காட்டும். தெய்வ பலமில்லாவிடில் மேல்கண்ட தோஷத்தை அனுபவித்தேதீரவேணும். சனி செவ்வாய் நலனைக் காட்டும்.

4. கடகம்: புனர்பூசம் ¼ பூசம், ஆயில்யம்,

பூசம்தவிர மற்ற இருநக்ஷத்திர பாதங்களும் சுபமேதரும். தொழில் ஓங்கல், ராஜாங்கத்தால் பெரிய காரிய சாதனம் கிடைத்தல், கடன்நிவர்த்தி, பூமிமூலமாய் லாபகரம் உபகாரத் தன்மை தெய்வபலம் பிரகாசித்தல் முதலிய சகலமும் சுலபமாகக் கிடைக்கும். வெள்ளி ஞாயிறு நலன்தரும்,

5. சிம்மம்: மகம், பூரம், உத்திரம் ¼.

சிம்மராசி சம்மந்தப்பட்ட 9 பாதங்களும் சுபபலனைத்தரும். சத்தான விரயங்களும் தான தர்மபல பிராப்தியும் கட்டிட வேலைகளும் நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும், காலிகன்று விருத்தியும், உத்யோக லாபமும், கிரஹபூமி லாபங்களும், விவஹார வெற்றியும், வித்யாவிருத்தியும், சந்தோஷமும் ஏற்படும். புதன் வியாழன் வெள்ளி சுபம் தரும்.

6. கன்னி: உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½.

உத்திரம் 2, 3, 4 பாதங்களும் சுபசந்தோஷத்தைத் தரும். உத்தியோக மேன்மையும் தன் மனதுப்படி நடத்தலும் சகல காரிய வெற்றியும், பெரியோர் அன்பும் கிட்டும். ஹஸ்தம்.

1, 2, 3 பாதங்கள் குடும்பக் கவலையைத் தரும். வியாதிமூலம் தனவிரயம் ஏற்படும். தொழில்மூலம் அதிக லாபமிராது. மந்தமாய் ஓடும். மேலோர் பெரியோர் அன்பும் தெய்வபலமும் ஏற்படும். ஹஸ்தம் நாலாம் பாதம் பிரமாதமான ஏற்றத்தை அடையச்செய்யும். நஷ்டதன பிராப்தியும் நிதிதனம்போ லொத்த தனலர்பங்களும், உலகம் நிறைந்த கீர்த்தியும் வாஹன லாபங்களும், அடிக்கடி சஞ்சாரபலனும். சமானர்களுடைய வரத்தும் அப்பிரியமான வார்த்தைக் கேள்வியும் சத்துரு விருத்தியும் சத்துருநாசமும் விவஹார வெற்றியும் தனதான்ய விருத்தியும் செல்வாக்கும் தெய்வபலமும் உண்டாகும். சித்திரை 1, 2 பாதபலன் ஜன்மமுதல் அனுபவித்திராதபடி சுக சௌக்கியங்களை அடையும். சத்துருமூலமாய் தனவரத்து கிட்டும், புத்திராதிகள்மூலம் மேன்மை உண்டாகும். வியாழன் வெள்ளி சனி சுபமாகும்.

7. **துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை 3, 4 பாதங்கள் மிசிர பலனைத்தரும். சுவாதி நான்கு பாதங்களும் தெய்வபலத்தால் ஜெயித்துவரும். அடிக்கடி சஞ்சாரமூலம் விசேஷ தனதான்ய வஸ்திராபரண லாபங்கள் கிடைக்கும். வெற்றியும் கீர்த்தியும் உண்டாகும். விசாகம் 1, 2, 3 பாதங்களும் கவலையை விசேஷமாய்த்தந்து வியாபார நஷ்டத்தையும் குடும்பக் கஷ்டத்தையும் தரும். சனி அசுபமும், வியாழன் வெள்ளி சுபமும் தரும்.

8 **விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் நாலாம்பாதம் அசுபமேதரும். அனுஷம் 4 பாதமும் கேட்டை 4 பாதமும் சுப சந்தோஷத்தையும் உத்யோக லாபத்தையும் தூர யாத்திரையையும் எதிர்பாராத வெற்றிகளையும் வம்ச விருத்தியையும் தரும். உலகில் பிரக்யாதியை உண்டு பண்ணும், புதன் வெள்ளி சுபமாகும்.

9. **தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் 4 பாதங்களும் உத்திராடம் முதல் பாதமும் வியாதி பீடையையும் கவலையையும் தரும். பூராடம் 4 பாதங்களும் அதிக விரயத்தின்பேரில் சகலமும் ஜயமடையும். ஈதிபாதைகள் ஏற்படும், நீச ஜாதிகளுடன் கலஹம் ஏற்பட்டு மறையும்

தெய்வபலம் முன்நிற்கும். காலிகன்று விருத்தியும் ஆடை ஆபரணச் சேர்க்கையும் கிரய விக்ரயங்களும் ஏற்படும். புதன் சுபமாகும்,

10. மகரம்: உத்திராடம் $\frac{3}{4}$, திருவோணம், அவிட்டம் $\frac{1}{2}$

திருவோணம் நான்கு பாதங்களும் அவிட்டம் 1, 2 பாதங்களும் பரம சந்தோஷத்தைத் தரும். உத்யோக லாபம் உண்டாகும். மேலோர் பெரியோர் அன்புகிட்டும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும், குடும்ப சந்தோஷமும் சுப சோபனாதிகளும் மங்களகரமும் உண்டாகும். உத்திராடம் 2. 3, 4 பாதங்கள் மிசிரமாய் நடக்கும். அதிக உழைப்பின்பேரில் லாபம் கிட்டும். வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்படும். தொழிலாளி கஷ்டப்படுவார். சனி சுபமாகும் வியாழன் கவலையைத்தரும்.

11, கும்பம்: அவிட்டம் $\frac{1}{2}$ சதயம், பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் சென்ற மாதம்போலவே இருப்பதோடு விசேஷமான யோக பிராபல்யத்தையும் சுகபோகங்களையும் கொடுக்கும், எல்லாம் வெற்றியடையும், எங்கும் புகழ் உண்டாகும், தெய்வபக்தி ஏற்படும், தூரதேசத்திலிருந்து அழைப்பு ஏற்படும், மனோ உல்லாசமடையும் வெள்ளி சனி ஜயவாரமாகும்.

12. மீனம்: பூரட்டாதி $\frac{1}{4}$. உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி 4-ம் பாதம் மாத்திரம் கஷ்டபலனையே தரும். உத்திரட்டாதி ரேவதி 1, 2 பாதங்கள் கவலையோடு ஓடும். ஆனாலும் கடன் நிவாரணமும் ஜயமும் தொழில் மேன்மையும் வெற்றியும் ஏற்படும். 3, 4 பாதங்கள் உழைப்பின்பேரில் மிகுந்த லாபத்தை பலவிதத்திலும் உண்டுபண்ணும், தெய்வ பலம் பிரகாசிக்கும் சுபமுண்டாகும்.

குறிப்பு:- மேற்படி மாதம் வடகிழக்கு மூலையில் சமுத்திரத்தில் பெருத்த மழை புயல் ஏற்பட்டு சேதம் விளைவிக்குமாதலால், அங்குள்ள சஜ்ஜனங்கள் நாஸ்திகத்தைவிட்டு கடவுளை அன்போடு வழிபாடு செய்துவர மேற்படி பயம்நீங்கி உலகம் சுபிக்ஷமடையும்.

THE YOGA-VEDANTA FOREST UNIVERSITY

20th October, 1954.

Revered Self,

With immense pleasure I regularly go through all your issues and particularly I am attracted by the profusely illustrated 10th Oct. issue, which gives an elaborate report of the celebrations of Navaratri Utsav. When the Ashram here conducted the celebrations on a very grand scale with special Pooja, Bhajan and Kirtans with discourses by learned men, I find a similar programme conducted by Sri Dharmapura Adhinam, a marvellous coincidence indeed. The first photo with Sri Mahasannidanam and Sri K. V. Jagannathan gives a special beauty to the issue. His Holiness Sri Maha Sannidhanam is untiringly working in all directions for the spiritual uplift of mankind. His sacred Mission is giving fruits to the millions. May He live long and bestow peace and prosperity to the whole world is my prayer.

With regards, Prem and OM,

Thy Own Self

(Sd.) SWAMI SIVANANDA

தருமபுர ஆதீன வெளியீடு:

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக் குறிப்புக்களும் இதில் அமைந்துள்ளன. அற்புதச் செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ், பக்கங்கள் 768.

விலை விபரம்:

ராப்பர் பைண்டு:	....	ரூ. 3—8—0
ரிஜிஸ்டர் தபாற்செலவு		ரூ. 1—5—0
காலிகோ பைண்டு:	...	ரூ. 5—0—0
ரிஜிஸ்டர் தபாற்செலவு		ரூ. 1—8—0

கிடைக்குமிடம் :-

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41, உஸ்மான் ரோடு,
தியாகராயநகர், சென்னை.

BRARY

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the Gnanasambandam Press, Dharmapuram. (Mayuram). 10—11—1954.